இந்திய இலக்கியச் சிற்பிகள்

# மா. இராசமாணிக்கனார்

இரா. கலைக்கோவன்



மா. இராசமாணிக்கனார்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.நாகார் ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

(பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# மா. இராசமாணிக்கனார்

இரா. கலைக்கோவன்

சாகித்திய அகாதெமி

*Ma.Rasamanikanar:* Monograph in Tamil by Dr. R. Kalaikovan, Sahitya Akademi, New Delhi, Reprint 2008, Rs.40.

© சாகித்திய அகாதெமி

முதல் பதிப்பு : 2006
இரண்டாம் பதிப்பு : 2008

**சாகித்திய அகாதெமி**

தலைமை அலுவலகம்:
இரவீந்திர பவன், 35 பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001

மத்திய கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டடம், டாக்டர் அம்பேத்கர் வீதி, பெங்களூர் 560 001.

ஜீவன் தாரா பில்டிங், 4–வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கொல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை
தாதர், மும்பய் 400 014.

443, குணா காம்ப்ளக்ஸ், தேனாம்பேட்டை,
அண்ணா சாலை, சென்னை – 600 018.

**விலை ரூ.40.**

ISBN 81-260-2210-8

அச்சிட்டோர்: வி.பி.கே. ஆப்செட், சென்னை – 5.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | ஆசிரியர் உரை | 7 |
| 1 | பெருவாழ்வு | 11 |
| 2. | இலக்கிய ஆய்வுகள் | 29 |
| 3 | சமயஞ் சார்ந்த ஆய்வுகள் | 48 |
| 4 | வரலாற்றாய்வுகள் | 64 |
| 5 | கோயிலாய்வும் கல்வெட்டாய்வும் | 82 |
| 6 | மாணவர் தோழர் | 96 |
| 7 | சிந்தனையாளர் | 111 |
| | நூல்கள் | 130 |

# ஆசிரியர் உரை

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் எழுதப்பட்டுள்ள இந்த நூல், முனைவர் மா இராசமாணிக்கனாரின் வாழ்க்கை வரலாற்றையும் அவருடைய முப்பத்தேழு ஆண்டுக் காலப் படைப்புகளையும் வளரும் தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டும் என்ற கருத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியராய்ப் பணி தொடங்கிய நாள் முதல், தம் வாழ்வின் இறுதிவரை இளைஞர் நலனே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர் இராசமாணிக்கனார். இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம், கோயிற்கலைகள், கல்வெட்டு, புதினம், சிறுவர் இலக்கியம், வாழ்க்கை வரலாறு என்று பல்வேறு துறைகளில் நூல்களைப் படைத்துள்ள இப்பெருமகனார் சிறந்த சிந்தனையாளராக நேரிய வாழ்வு வாழ்ந்தவர்

நெடிய ஆய்வுகளுக்குப் பின் 1944இல் இவரால் எழுதப்பெற்ற, 'பல்லவர் வரலாறு' தமிழ்நாட்டு வரலாற்றுக் களத்தில் இன்றளவும் பயன்படுத்தப்படும் நூலாக வாழ்வு பெற்றுள்ளது சங்க இலக்கியங்கள் தொடர்பாக ஆய்வு செய்பவர்கள் யாராயினும் இராசமாணிக்கனாரின், 'தமிழ் மொழி இலக்கிய வரலாறு', 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' இவற்றைப் பயிலாமல் பணி தொடர்தல் அருமை பெரியபுராணத்தை வரலாற்று நூலாகவும் அதை யாத்த சேக்கிழார் பெருமானை வரலாற்று ஆராய்ச்சி வித்தகராகவும் நிலைநிறுத்திய பெருமைக்குரிய ஆய்வாளர் இவர் சங்க காலம் முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் இயங்கிய சோழ மரபின் வேர்களையும் விழுதுகளையும் ஒருசேரக் கண்டு மூன்று தொகுதிகளில் சோழர் வரலாறாக்கித் தந்த இப்பெருந்தகையின் முயற்சியை மறைந்த வரலாற்றறிஞர்கள் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரும் ஹீராஸ் பாதிரியாரும் உவந்து பாராட்டியுள்ளனர்

இவருடைய ஆய்வு நெறிமுறைகள், ஆய்வு அணுகுமுறைகள் இவை இரண்டுமே தனித்துவம் வாய்ந்தவை பெரியபுராணம் பற்றிய தம்முடைய ஆய்வை நூலாக்குவதற்கு முன் தமிழ்நாட்டின் முதன்மை யான நகர்ப்புறங்களில் சமய, இலக்கியப் பேராசான்களின்

தலைமையில் தம் கண்டறிதல்களை உரைத்தொடர்களாக நிகழ்த்தி, அவர்தம் கருத்தும் வழிகாட்டலும் பெற்ற நல்லறிஞர் இவர்

தமிழர் திருமணமுறை தமிழ் மரபிலிருந்துபெரிதும் விலகிச் சடங்குகளின் பாற்பட்டுத் திசைமாறிப் போனமையை எடுத்துக்காட்டி, மணவினையைச் செம்மைப்படுத்த இவர் எழுதிய நூல் தமிழ்நாட்டில் வாழ்ந்த அக்காலத்து தமிழ், வடமொழி அறிஞர்களுக்கு அனுப்பப் பட்டு, அவர்தம் வாழ்த்தும் வழிகாட்டலும் ஒருமித்த ஆதரவும் பெற்று வெளியானது.

வரலாற்றுப் பேரறிஞராகவும் ஆராய்ச்சி வல்லுநராகவும் சைவ சமய வரலாற்று ஆராய்ச்சியாளராகவும் விளங்கித் தமிழ்க் கலை வளர்த்த இச்செம்மல் மாணவர்களின் அறிவையும் ஆற்றலையும் சிந்தனைத் திறனையும் தூண்டிவிட்டவர் பிறர் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், ஆராய்ந்து நுணுக்கமாகச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து, சொந்த முடிவுக்கு வருவதையே இயல்பாகக் கொண்டவர். தமிழ்மொழியையும் இலக்கியத்தையும் வரலாறு, அகழாய்வு, கல்வெட்டுச் சான்று முதலியவற்றோடு இணைத்துத் தமிழக வரலாற்றைத் தெளிவுபடுத்தியவர்.

ஆய்வு அவருக்கு வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கவில்லை; வாழ்க்கையாகவே அமைந்திருந்தது சமூகச் சீர்திருத்தத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, சாதி உயர்வு தாழ்வுகளைச் சாடிக் களைவதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்ட சீர்திருத்தச் செம்மல் இவர் அன்பு, அருள், நல்லொழுக்கம் இவற்றின் மலர்ச்சியே சமய வாழ்க்கை என்றும் பிறருக்குத் தொண்டு செய்வதே சமய வாழ்வின் அடிப்படை என்றும் கருதியவர். இவருடைய நூல்கள் அனைத்தும் பொருத்தமான தலைப்பு, பொருள் பொதிந்த முன்னுரை, பகுப்பு முறைகள், அரிய ஆராய்ச்சி அடிக்குறிப்புகள், சீரிய செந்தமிழ் நடை, பிழையற்ற செம்மையான பதிப்பு முதலிய சிறப்புகளைக் கொண்டவை

மொழி, மக்கள், நாடு இவற்றின் நலமே உயிர் மூச்சாகக் கருதி உழைத்த இப்பெருந்தகையின் அனைத்து நூல்களையும் வழங்கி, இவ்வெழுத்துரை முழுமையடைய உதவியவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியரும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மைய நிறுவனரும் என் இளவலுமான முனைவர் மா ரா.அரசு ஆவார். இராசமாணிக்கனாரைப் பற்றிய இந்நூலை எழுதும் வாய்ப்பமைந்த நாளிலிருந்து கருத்துப் பரிமாற்றம், இந்நூலின் இயல்களைப் படித்து வழிகாட்டல் என

இயன்றவாறெல்லாம் துணையிருந்து என்னையும் என் எழுத்தையும் வழிநடத்தியவர் அவரே இந்நூலில் இராசமாணிக்கனாரை நிறைவாக வெளிப்படுத்த முடிந்திருக்கிறதென்றால் அதற்கு அவருடைய முழுமையான ஒத்துழைப்பும் நெறிப்படுத்தலுமே காரணம். அவர் துணைவியார் திருமதி திரிபுரசுந்தரி அரசுவும் இப்பணிக்குப் பெருமளவு துணையிருந்தார்.

சென்னை மாநிலக் கல்லூரி மேனாள் தமிழ்த்துறைத் தலைவரும் என் மூத்த தமக்கையாருமான பேராசிரியர் முனைவர் திருமதி மா ரா தமிழரசியும் அவர் கணவரும் இராசமாணிக்கனாரின் மாணவருமான திரு.ச வேலுசாமியும் இந்நூல் முழுவதையும் படித்துக் கருத்துரைத்து வழிகாட்டியமைக்கு உளமார்ந்த நன்றியுடையேன் இந்நூல் முழுமையடைய அனைத்து வழிகளிலும் எனக்குத் துணைநின்று உதவியவர் என் வாழ்வரசி மருத்துவர் திருமதி அவ்வை கலைக்கோவன்.

திருச்சிராப்பள்ளி சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறை முதுநிலைப் பேராசிரியரும் டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய மதிப்புறு கல்வெட்டாய்வாளருமான முனைவர் மு நளினி இந்நூல் தொடர்பான சிந்தனைத் தளங்களைச் செம்மையாக வடிவமைக்கவும் நூலைக் கணினிப் படியாக உருவாக்கவும் எனக்கு உறுதுணையாக இருந்தார் அவரது ஆற்றலும் உழைப்பும் இந்நூலில் நன்கு பதிவாகியுள்ளன

இந்நூலை எழுதும் வாய்ப்பை நான் பெறுவதற்குக் காரணமாய் இருந்த மதுரைப் பல்கலைக்கழக ஒப்பிலககியத்துறைத் தலைவர் முனைவர் இரா மோகன் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி என்றும் உரியது. இந்நல்வாய்ப்பை வழங்கிய சாகித்திய அகாதெமி நிறுவனத்தின் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் இவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பது என் கடமை.

இந்நூலை எழுதத் தொடங்கும் முன் தந்தையையும் தாயையும் வணங்கி அவர்கள் வாழ்த்து வேண்டியே பணியைத் தொடங்கினேன். இந்நூலைப் பயனுள்ள நூலாய் இனிதுற முடிக்கத் துணைநின்ற அவர்களுக்கு இந்நூல் நிறைவடையும் இந்நல்லோரையில் என் கண்களில் மல்கும் நன்றித் துளிகளைப் படையலாக்கி மகிழ்கிறேன்.

**இரா. கலைக்கோவன்**

# 1
# பெருவாழ்வு

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றித் தமிழ் வளர்த்த அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் இராசமாணிக்கனார் தமிழுடன் மிகுதியான தொடர்போ, தமிழில் தனித்த ஈடுபாடோ இல்லாத ஒரு குடும்பத்தில் பிறந்து, இளம் வயதில் தெலுங்கு மொழியே பயின்று வளர்ந்தவரான அவர் பின்னாளில் தமிழ் வளர்த்த செம்மலாக மலர்ந்தமை வியப்பும் சுவையும் நிரம்பிய நெடிய வரலாறாகும்.

நிலம் அளந்து தரம் விதிக்கும் அலுவலகத்தில் ஒரு பிரிவின் மேலாளராக இருந்து, வட்டாட்சியராக உயர்ந்தவரான மாணிக்கம் என்பவரின் கடைசி மகனாகத் தோன்றியவர் இராசமாணிக்கனார் பணிநிமித்தம் பலவேறு ஊர்களுக்கு மாறிய மாணிக்கம், கர்நூலில் வாழ்ந்தபோது இராசமாணிக்கனார் பிறந்தார். 1907ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12ஆம் நாள் பிறந்த இவரது அன்னை பெயர் தாயாரம்மாள். ஏழு பேர் பிறந்த குடும்பத்தில் இராசமாணிக்கனாரும் அவர் தமையனார் இராமகிருட்டிணருமே எஞ்சினர்.

அரசு பணியாளரான தந்தையாரின் அலுவல் மாற்றம் காரணமாக இராசமாணிக்கனாரின் கல்வியும் பல ஊர்களில் வளர்ந்தது. பல ஆண்டுகள் தெலுங்கு நாட்டில் கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் இருக்க நேரிட்டதால் தெலுங்கு மொழியே பயின்று வந்த இவர், 1916 இல் தந்தையார் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நிலக்கோட்டைக்கு மாற்றப்பட்ட பிறகே அதாவது, தம்முடைய ஒன்பதாவது வயதி லிருந்துதான் தமிழ் பயிலத் தொடங்கினார். அது முறைசார்ந்த கல்வி யாக அமையாமையின் ஓய்வு மிகுதியாக இருந்தது தமிழே அறியாத இராசமாணிக்கனார் விரைவில் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தால் ஆறே திங்களில் ஐந்தாம் வகுப்பு நூலைப் படித்து முடித்தார்.

நிலக்கோட்டையில் வாழ்ந்த காலத்தில், ‘அல்லி அரசாணி மாலை’, ‘பவளக்கொடி மாலை’, ‘பஞ்சபாண்டவர் வனவாசம்’ முதலிய

கதைப்பாடல்களையும் தாலாட்டு, கும்மி, நொண்டிச் சிந்து முதலிய நூல்களையும் அக்கம் பக்கத்தில் இருந்தார் கொணர்ந்து கொடுத்துப் படிக்கச் சொல்வது வழக்கம் 'அவர்கள் பொழுது போக்குக்காக கொண்டு வந்த நூல்கள் என் தமிழறிவை வளர்த்தன' என்று தம்முடைய தமிழ் வாழ்க்கையின் தொடக்க நாட்களை நினைவு கூர்ந்துள்ளார் இராசமாணிக்கனார்

நல்லது எங்கிருந்தாலும் போற்றவேண்டும். சொல்லுவது யார் என்று பார்க்கக்கூடாது சொல்லப்படுவது என்ன என்பதை மட்டும் நோக்கவேண்டும். இக்கோட்பாடுகளைத் தம் வாழ்வின் அடிநாளி லிருந்து இறுதிநாள்வரை பின்பற்றி வந்த இராசமாணிக்கனார் தாம் சந்திக்க நேர்ந்த பல தரத்தினரான மக்களிடமிருந்து அறிந்து கொண்டவை, ஏற்றுக்கொண்டவை, முன் மாதிரியாக ஆக்கிக் கொண்டவை எண்ணிறந்தவை அவையே, வாழ்வில் அவர் உயர்வெய்த அடித்தளம் அமைத்துத் தந்தவை. எந்தச் சூழ்நிலையிலும் உண்மையாகப் பாடுபடுபவன் அப்பாட்டின் பயனை அடையலாம் என்னும் பேருண்மையை நெஞ்சில் ஆழப் பதித்தவர் இராச மாணிக்கனார் அதன் விளைவே அவர் மடியறியா உழைப்பினராகி எண்ணிய எண்ணியாங்கு எய்தும் பேராற்றல் பெற்றவராகி விளங்கமுடிந்தது

இராசமாணிக்கனாரின் பத்தாவது வயதில்(1917) அவருடைய தந்தையார் காலமானார் குடும்பப் பொறுப்பு, தமையனார் இராம கிருட்டிணனாருக்கு உரியதாயிற்று அவர் பணியும் மாற்றத்திற்கு உரியதாக இருந்ததால் குடும்பம் பல ஊர்களில் வாழ நேர்ந்தது பணியின் பொருட்டுத் திண்டுக்கல் ஏகிய தமையனார் இராமகிருட்டிண னாருக்குத் துணையாகச் சென்ற தாயாருடன் இராசமாணிக்கனாரும் சென்றார். திண்டுக்கல் வாசம் அவருடைய வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது நிலக்கோட்டையில் தொடங்கிய *அவருடைய தமிழ்க் கல்வி, திண்டுக்கல்லில் வளர்ந்தது.*

அங்கு நகரவை உயர்நிலைப்பள்ளியில் அந்நாளில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றி வந்த ஒருவர் இராசமாணிக்கனாருக்கு அறிமுகமானார். அவர் வழி இவர் அறிந்தவை பல திண்டுக்கல்லில் இவருடைய குடும்பம் வாழ்ந்த இடத்திற்குச் சற்றே தள்ளி, 'மௌன சாமி மடம்' என்னும் மடம் இருந்தது அவருக்கு முன்பே அறிமுக மாகியிருந்த உடற்பயிற்சி ஆசிரியர் அம்மடத்திற்கு அவரை அழைத்துச் சென்றார் அதன் பின் அடிக்கடி அங்குச் செல்வதை

வழக்கமாக்கிக் கொண்ட இராசமாணிக்கனார், அம்மடத்திலிருந்த இளந் துறவியின் அன்பிற்குப் பாத்திரமானார் அத்துறவி சித்தர் பாடல்களையும் அருட்பாவையும் இராசமாணிக்கனார் அறியுமாறு செய்தார்

பாடல்களை இனிமைக்காக மட்டுமல்லாது, அவை கூறும் வாழ்வியல் உண்மைகளுக்காகவும் நேசிக்க வேண்டும் என்பதை இராசமாணிக்கனாருக்கு உணர்த்தியவர் அவரே சாதிகள் யாவும் மனிதன் படைத்துக் கொண்டவை கடவுள் படைத்தவை ஆண், பெண் என்ற இரண்டு சாதிகளே என்னும் பேருண்மையையும் அவரே இராசமாணிக்கனாரின் இளம் நெஞ்சத்தில் ஆழப் பதியச் செய்தார். தம்முடைய எழுத்திலும் பேச்சிலும் ஏன், செயலிலும்கூடச் சாதிகளைக் கடிந்து, வன்மையாக எதிர்க்க, சாதிகளற்ற சமுதாயம் காணப் பாடுபட, சாதி ஒழிப்பு மாநாடுகளில் கலந்து கொண்டு சாதி ஒழிப்பில் தீவிரம் காட்ட இராசமாணிக்கனாருக்கு எழுச்சியூட்டியவை அந்த இளந் துறவியின் வழிகாட்டல்களே.

எதையும் வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு அணுக வேண்டும் என்னும் உணர்வை ஊட்டியவர் திண்டுக்கல் உடற்பயிற்சி ஆசிரியர் ஆவார் அவரே, திப்புசுல்தானோடு இணைத்துக் கூறப்படும் திண்டுக்கல் குன்றின் மீது அமைந்திருக்கும் கோட்டைக்கு அழைத்துச் சென்று காட்டியவர். அதுவே, இராசமாணிக்கனார் கண்ட முதல் வரலாற்றுச் சிறப்புடைய இடமாகும் அப்போது, அந்த உடற்பயிற்சி ஆசிரியர் கூறிய, 'படிக்கும் பிள்ளைகள் எந்த இடத்திற்குச் சென்றாலும் அந்த இடத்தைப் பற்றிய வரலாறு, அங்குள்ள கட்டடங்கள், விளைபொருள்கள், செய்பொருள்கள் இவற்றைப் பற்றி அறிய வேண்டும். இந்த அறிவு பெரிதும் வேண்டற்பாலது. பலர் இவற்றைக் கவனிப்பதே இல்லை' என்னும் அறிவுரையே இராசமாணிக்கனார் ஒரு வரலாற்று அறிஞராக மலரக் காரணமாக அமைந்தது. 'அவர் கூறிய செய்திகள் என் மனத்திற் பதிந்தன. அன்று முதல் நான் எந்த ஊருக்குச் சென்றாலும் அவ்வூர்ப் பற்றிய விவரங்களை அறிந்து குறிப்பெடுத்துக் கொள்ளுதல் வழக்கம்' என்று இராசமாணிக்கனார் கூறியிருப்பது இங்குக் குறிக்கத்தக்கது.

தமையனாரின் பணிமாற்றல் காரணமாக நன்னிலத்தில் சில காலம் இராசமாணிக்கனாரின் குடும்பம் வாழ நேர்ந்தது. அக்காலத்தில் விடுமுறை நாட்களில் சில மாணவ நண்பர்களை அழைத்துக் கொண்டு நன்னிலத்தைச் சுற்றியிருந்த திருவாஞ்சியம், திருப்புகலூர்,

திருக்கண்ணபுரம், திருச்செங்கட்டாங்குடி முதலிய திருத்தலங்களுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் இராசமாணிக்கனார். அப்போது அவருக்கு வயது பன்னிரண்டு பன்னிரண்டு வயதில் எழுந்த இந்த ஆர்வம்தான் பின்னாட்களில் தென்னாட்டுக் கோயில்கள் பற்றி அறியும் விழைவை அவரிடம் மிகுவித்தது ஒரு முழு ஆண்டு தொடர்ந்து எந்த ஊரிலும் இருக்குமாறு தமையனாரின் பணிப்பொறுப்பு அமையாமையால் தம்பியின் கல்வி தடைபட்டது; மூன்றாண்டுகள் வீணில் கழிந்தன. பணிமாற்ற நிலைமாறி நிலையாகத் தஞ்சாவூரில் தங்கும் வாய்ப்புத் தமையனார் இராமகிருட்டிணனாருக்கு அமைந்த போது தம்பி இராசமாணிக்கனாருக்கு வயது பதினைந்து

**பள்ளிக்கல்வி**

விடுபட்டுப்போன தம் படிப்பைத் தஞ்சாவூரில் தொடர விரும்பினார் இராசமாணிக்கனார். ஆனால், 'இவனது படிப்பு தொடர்ச்சியாக அமையாது வீணாகிவிட்டது பதினைந்து வயது நிரம்பப் பெற்ற இவன் இனி எங்கே படிக்கப் போகிறான்? இவனைத் தையற்கடையில் விடுவது நல்லது' என்று கருதிய தமையனார் இவரை ஒரு தையற்கடையில் வேலை கற்க விட்டார். 'நான் பதினைந்து நாட்கள் வேலை கற்றுக்கொண்டேன்; காஜா எடுக்கக் கற்றுக் கொண்டேன் சிறிய பைகளைத் தையல் இயந்திரத்தில் தைக்கக் கற்றுக் கொண்டேன் நாள்தோறும் இரவில் வீடு திரும்பும்போது கடை உரிமையாளர் எனக்கு காலணா கொடுப்பார்' என்று தம் தையற்கடை அனுபவங்களை விவரிக்கின்றார் இராசமாணிக்கனார்.

எப்படியாவது படிக்க வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்த இராசமாணிக்கனாரின் மனம், காஜா எடுக்கும் தொழிலில் ஈடுபடவில்லை. தஞ்சாவூர் செயிண்ட் பீட்டர்ஸ் பள்ளித் தலைமை யாசிரியரின் பேருதவியால், தடைபட்டு நின்ற படிப்புத் தொடர்ந்தது. 1921இல் ஆறாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட இராச மாணிக்கனாரின் படிப்புத் தலைமையாசிரியரின் கருணையால் நாளும் வளர்ந்தது. எல்லாப் பாடநூல்களையும் வாங்கும் வாய்ப்பு இல்லாமையின் ஆங்கில, கணித நூல்களை மட்டும் வாங்கிக் கொண்டார். ஏனைய பாடநூல்களைப் பிற மாணவர்களிடமிருந்து இரவல் வாங்கிப் படித்தார் 'தலைமையாசிரியர் சொற்படி இரண்டு நூல்களை மட்டும் வாங்கிக்கொண்டேன். சிலரை நண்பராகக் கொண்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் என்னிடம் இல்லாத

நூல்களை அவர்களிடம் பெற்றுச் சனி, ஞாயிறுகளில் படித்துவந்தேன்' என்பார் இராசமாணிக்கனார்

பீட்டர்ஸ் பள்ளிக்கு மூன்று கிளைகள் உண்டு. இந்த மூன்றிலும் இருந்த முதல் படிவ மாணவர்களுக்குள் முதல் மாணவராகத் தேறியதன் வாயிலாகப் பள்ளியிலும், வீட்டிலும் பெரும் பாராட்டைப் பெற்றார் இராசமாணிக்கனார் இதனால் அவரது மேல் படிப்புத் தடையின்றி அமைந்தது. பள்ளி நாட்களில் இராசமாணிக்கனாரின் தமிழார்வம் வளரக் காரணமானவருள் அவருடைய அண்ணியாரும் ஒருவர். தேவாரம், திருப்புகழ் ஆகியவற்றில் தமக்கு மிகுந்த ஈடுபாடு எழக் காரணமாக இருந்தவர் அவர் என்பதை, 'என் அண்ணியார் முருக வழிபாடு செய்பவர்; திருப்புகழ் படிப்பவர்; அவர் எங்கள் வீடு வந்த பிறகு நான் திருப்புகழும் தேவாரமும் மிகுதியாகப் படிக்கும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றேன்' என்ற இராசமாணிக்கனாரின் சொற்களால் அறியமுடிகிறது.

உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது இராச மாணிக்கனாரின் தமையனாருக்கு ஆந்திரநாட்டிற்குப் பணி மாற்றலானது. தாயாருடன் தஞ்சாவூரிலேயே இருந்து தம் படிப்பைத் தொடர்ந்த இராசமாணிக்கனாருக்கு அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கும் கல்வி சார்ந்த செலவுகளுக்கும் தமையனார் திங்கள்தோறும் அனுப்பி வந்த பதினைந்து ரூபாய் போதுமானதாக இல்லை. அதனால் அந்த வயதிலேயே அவர் பொருளீட்ட வேண்டியிருந்தது. 'அக்காலத்தில் மூன்றாம் படிவ மாணவரும் இரண்டாம் படிவ மாணவரும் ஆக நால்வர் என்னிடம் தனியே பாடம் படிக்க வந்தனர். அவர்கள் தந்த தொகையைக் கொண்டுதான் என்னுடைய பள்ளி நாட்களைக் கழிக்க வேண்டியிருந்தது' என்பார் இராசமாணிக்கனார்.

உயர்நிலைப்பள்ளியில் ஆறு ஆண்டுகள் முறையாகக் கல்வி பயின்றவர், ஒவ்வோர் ஆண்டு இறுதித் தேர்விலும் முதல்வராகத் தேறி, அதற்குரிய பரிசைப் பெற்றார் பள்ளி இறுதித் தேர்வில் சிறந்த முறையில் வெற்றி பெற்றுப் பியர்ஸ் பரிசைப் பெற்ற இராச மாணிக்கனார் 4, 5, 6 ஆம் படிவங்களில் தமிழ் மன்றச் செயலாளராக இருந்து பல போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பல பெற்றிருக் கின்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பள்ளி இறுதித் தமிழ்த் தேர்வில் இவர் முதல்வராகத் தேறினார்.

தஞ்சாவூரில் பயின்றபோது, இவருக்குத் தமிழாசிரியராக அமைந்தவர் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம்பிள்ளை ஆவார். வகுப்பில் முதல் மாணவராகத் திகழ்ந்த இவரைக் கரந்தைக் கவியரசு தனியே அழைத்துத் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்பிக்க லானார் அப்பெரியாரிடம் இவர் மூன்றாண்டுகள் முறையாகப் படித்தார்.

நிலக்கோட்டையில் அக்கம்பக்கத்து வீட்டுப் பெண்களுக்குப் படித்துக்காட்டிய கதைப்பாடல்களும் திண்டுக்கல் மௌனசாமி மடத்து இளந்துறவியிடம் அறிந்துகொண்ட திருஅருட்பாவும் சித்தர் பாடல் களும் அண்ணியார் வழி அறியநேர்ந்த தேவாரமும் திருப்புகழும் வளர்த்த தமிழார்வம், ரா. வேங்கடாசலம் பிள்ளையால் முறைப் படுத்தப்பட்டது அவரே இராசமாணிக்கனாரின் தமிழ் உணர்வையும் அறிவையும் ஆர்வத்தையும் புரிந்து கொண்டு அவரை வளர்த்தவர்; இளைஞர் இராசமாணிக்கத்தின் ஆற்றல்களை இனங்கண்டு ஊக்கிய முதல்வர் என்ற பெருமைக்கு உரியவரும் அவரே அவர் இராசமாணிக்கனாரிடம் கொண்டிருந்த அன்பும பற்றும் ஈடுபாடும் எல்லை கடந்தவை, தூயவை

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இராசமாணிக்கனாருக்குத் தொடர்பமைய ரா வேங்கடாசலம் பிள்ளை உதவினார் இதனால் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் உமாமகேசுவரம்பிள்ளை, ந மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய பெருமக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அமைந்தது உ வே. சாமிநாதையர், ரா இராகவையங்கார், எல் உலகநாதபிள்ளை, கதிரேசன் செட்டியார், சோமசுந்தரம்பிள்ளை போன்ற தமிழ்ப் பெருமக்களின் சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்பும் கிடைத்தது இவையெல்லாம் சேர்ந்து, இராச மாணிக்கனாரின் நெஞ்சில் கனன்று கொண்டிருந்த தமிழ்ப்பற்று என்னும் நெருப்பை ஊதிவிட்டன. இராசமாணிக்கனாரின் வாழ்க்கையும் கல்வியும் தமிழார்வமும நெறிப்பட்ட இடம் தஞ்சாவூராகும்

தஞ்சாவூரில் இருந்தபோது திருவையாற்றை மையமாகக் கொண்டு ஆண்டுதோறும் நடைபெறும் ஏழூர் விழாவில் இராச மாணிக்கனார் கலந்து கொள்வது இயல்பு தஞ்சாவூரைச் சேர்ந்த தேவாரக் குழுவினருடனும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாருடனும் சேர்ந்து திருநெய்த்தானம், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருப்பழனம், திருவேதிகுடி, திருவையாறு எனும்

ஏழு ஊர்களுக்கும் தேவாரம் பாடிக்கொண்டு கால்நடையாகச் செல்வது வழக்கம். சமய உணர்வும் ஈடுபாடும் இளமையிலேயே அவர் நெஞ்சில் இடம்பெற இவ்வழக்கமும் வழிவகுத்தது.

1927 மார்ச்சுத் திங்கள் நிகழ்ந்த பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தேறிய இராசமாணிக்கனார் தஞ்சாவூரை அடுத்த ஒரத்தநாடு போர்டு உயர்நிலைப்பள்ளியில் எழுத்தராகச் சேர்ந்தார். தந்தையாரின் நண்பரும், சென்னை பின்னி கம்பெனியில் உதவி துவிபாஷியாக (மொழி பெயர்ப்பாளர்) இருந்தவருமான கே. திருவேங்கடம் நாயுடுவின் அழைப்பின் பேரில் 1928ஆம் ஆண்டு சென்னை வந்து, வண்ணாரப்பேட்டையிலுள்ள தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணியில் அமர்ந்தார் தஞ்சாவூர் மண் வளர்த்திருந்த மொழி உணர்வோடும் சமய உணர்வோடும் சீர்திருத்த உணர்வோடும் சென்னையில் தம் வாழ்க்கையைத் தொடங்கினார் இராசமாணிக்கனார்.

### பள்ளியாசிரியர்

மாணவர் உள்ளங்கவரும் முறையில் தெளிவாகவும் இனிமை யாகவும் பாடம் நடத்துவதில் திறமை பெற்றவராக விளங்கியமையால் தமிழாசிரியர் பணி இவருக்கு இன்பமாகவும் விருப்பம் உடையதாகவும் இருந்தது மாணவர் இடையிலும் இவருக்குச் செல்வாக்கு நிறைந்திருந்தது

1928ஆம் ஆண்டு ஜூலை முதல் 1936ஆம் ஆண்டு ஜூன் வரையில் தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார் பணியாற்றிக்கொண்டே மாணவர்க்கான துணைப்பாட நூல்களையும் பாடநூல்களையும் எழுதும் பணியிலும் ஈடுபட்டார். இவர் எழுதிய முதல் நூல் 1930இல் வெளிவந்தது. அப்போது இராச மாணிக்கனாருக்கு வயது 23 கல்வித் தகுதி வெறும் எஸ் எஸ் எல். சி மட்டுமே. கே.பழனியாண்டிப் பிள்ளை கம்பெனியின் மூலம் வெளி யிடப்பட்ட 102 பக்க அளவிலான 'நாற்பெரும் வள்ளல்கள்' என்னும் அந்நூல் அதிக அனுபவமோ, ஆழ்ந்த பயிற்சியோ, பெரிய கல்வித் தகுதியோ இல்லாத ஒருவரால் எழுதப்பட்டதெனக் கருத முடியாதபடி கருத்துக் கருவூலமாய் அமைந்துள்ளமை அந்த இளம் வயதிலேயே இராசமாணிக்கனார் பெற்றிருந்த புலமையைப் பறைசாற்றுவதாய் உள்ளது.

1935 இல்தான் இராசமாணிக்கனார் வித்துவான் பட்டம் பெற்றார் ஆனால், அதற்குள் பல நூல்களை அவர் எழுதி வெளியிட்டிருந்தார்

அவற்றுள் குறிப்பிடத்தக்க சில: 'ஹர்ஷவர்த்தனன்' (1930), 'முடியுடை மூவேந்தர்', (1931), 'நவீன இந்திய மணிகள்' (1934), 'தமிழ்நாட்டுப் புலவர்கள்(1934). இவருடைய முதல் பாடநூலான, 'பொற்கால வாசகம்' 1932இல் வெளியிடப்பட்டது.

தம்முடைய இருபத்து மூன்றாம் வயதில் முதல் நூலையும் இருபத்தைந்தாம் வயதில் முதல் பாடநூலையும் எழுதித் தம் தமிழ்த் தொண்டைத் தொடங்கியுள்ளார் இராசமாணிக்கனார். அன்று தொடங்கிய (1930) தமிழ்ப்பணி அவருடைய இறுதிவரையில் (1967) தொடர்ந்தது. சிறுவர் நூல் எழுதுவதில் தொடங்கி, பல்துறை சார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார். அவர் எழுதிய வரலாற்று நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டுசென்றன, அழியாமையை அவருக்கு வாழ்வாக்கித் தந்தன.

ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் பணியாற்றிய பிறகு, 1936ஆம் ஆண்டு ஜூலையில் சென்னை, முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார் அங்கு இருந்த காலத்தில் (1936 ஜூலை முதல் 1947 ஜூன் முடிய) பள்ளிக்குரிய பாடநூல்களை எழுதி வெளியிட்டதோடு, பி.ஓ.எல்.(1939), எல் டி (1944), எம் ஓ எல் (1945) என்னும் பட்டங்களும் பெற்றார் எம் ஓ எல். பட்டத்திற்குப் பெரியபுராணத்தைச் சிறந்த முறையில் ஆய்வுசெய்து, 'பெரியபுராண ஆராய்ச்சி' என்ற தலைப்பில் தம் ஆய்வேட்டை அளித்தார் அந்த ஆய்வேட்டின் திருத்திய பதிப்பே பின்னாளில், 'பெரியபுராண ஆராய்ச்சி' என்னும் தலைப்பில் நூலாக வெளியாகியது.

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் இராசமாணிக்கனார் பணியாற்றிய காலத்தில்தான் அவருடைய சிறப்புக்குரிய பல நூல்கள் வெளிவந்தன அவை, 'மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்'(1941), 'பல்லவர் வரலாறு'(1941), 'சேக்கிழார்-ஆராய்ச்சிநூல்' (1945), 'சோழர் வரலாறு'(1947) என்பனவாம்

சிந்துவெளி நாகரிகம் பற்றி முதன்முதலில் தமிழில் நூல் எழுதி வெளியிட்டவர் இவரே பல்லவர் வரலாறு பற்றியதொரு முழுமையான நூலாகத் தமிழில் அமைந்த நூல் இவருடைய 'பல்லவர் வரலாறு' ஆகும். சேக்கிழாரை வரலாற்று அறிஞராக அறிமுகஞ் செய்த முதல் ஆய்வாளர் என்ற பெருமை இராசமாணிக்கனாருக்கே உரியது.முதன்முதலில் தமிழில் சங்க காலம் தொடங்கி, பிற்காலம்

வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக-ஆராய்ச்சிப் போக்கில் கொண்டு அமைந்தது இராசமாணிக்கனாரின் 'சோழர் வரலாறு' என்ற நூலேயாகும்.

தியாகராயர் பள்ளியிலும் முத்தியாலுப்பேட்டைப் பள்ளியிலும் பணியாற்றிய காலத்தில் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக் கொண்டு, சீர்திருத்தப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் 'பேராசிரியர் அவர்களுக்குச் சுயமரியாதை இயக்கத்தில் பற்று உண்டு அடிக்கடி தமிழர்கள் மேற்கொண்டு ஒழுகும் மூடநம்பிக்கைகளைக் கண்டித்துக் கடிந்துரைப்பார்கள். கொள்கை வீரராய் அவர்கள் விளங்கியதைக் கண்டேன்' என்பார் சிறுவை நச்சினார்க்கினியன்

தமிழர் திருமணத்தில் சடங்குகள் பெருகிச் செலவுகளும் மிகுந்த நிலையில் பல குடும்பங்கள் கடன் சுமையால் துன்பப்பட்டமையைக் கண்ணுற்ற இராசமாணிக்கனார் மனம் வருந்தினார். அச்சமயத்தில் 'தமிழர் நல்வாழ்க்கைக் கழகம்' என்ற அமைப்பு இராச மாணிக்கனாரிடம், 'தமிழர் திருமண நூல்' ஒன்றை இயற்றித் தருமாறு வேண்டியது பழந்தமிழர்தம் எளிய திருமணமுறைகளை உரிய சான்றுகளோடு எடுத்துககாட்டி 1939இல் அந்நூலை வெளியிட்டார் பலரின் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாயிற்று அந்நூல்

சமுதாயச் சீர்திருத்தப் பணிகளில் ஒன்றியிருந்த காலத்திலும் இராசமாணிக்கனார் தமிழ்த் தொண்டை மறக்கவில்லை வண்ணையம் பதியில் தனலட்சுமி தொடக்கப்பள்ளியில், பேராசிரியரின் தமிழ்த்தொண்டு தொடங்கியது வகுப்புகள் நடத்துவார். அங்குச் சில அன்பர்கள் இவர் பணிகளுக்குத் தொண்டர்களாக விளங்கினர். சொந்தப் பணத்தைச் செலவு செய்து இவ்வகுப்புகளை நடத்தி ஏழை, எளிய மாணவர்களுக்குக் கல்வித் தொண்டு புரிந்த இராசமாணிக்கனார், 'இளம் பருவத்தில் கல்விபெற நான் பட்ட துன்பங்களே இப்பணியைத் தொடங்கவும் தொடர்ந்து நடத்தவும் என்னை ஊக்கின நல்ல உள்ளம் படைத்த இளைஞர்கள் எனக்குத் துணைநின்றனர். மனம் இருந்ததால் பணம் ஒரு பொருட்டாக அமையவில்லை' என்று தம் வாழ்க்கைக் குறிப்பில் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதே காலத்தில் இந்தி எதிர்ப்பு அறப்போராட்ட வீரர் சுவாமி அருணகிரிநாதர், பேராசிரியரின் தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் பயன்படுத்திக் கொண்டார். தமிழ் மாமுனிவர் குன்றக்குடி அடிகளார் போல் அக்காலத்தில் சுவாமி அருணகிரிநாதர் பணி தமிழகத்திற்கு

அரண் செய்தது. அருணகிரிநாதர் ஆசிரியர் சாது நாராயண தேசிகர் மடத்தில், பேராசிரியர் பலமுறை சமயச் சீர்திருத்தப் பேச்சுகள் நிகழ்த்தியுள்ளார்.

சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராய் இருந்தபோது பச்சையப்பன் பள்ளி விளையாட்டுத்திடலில் பேராசிரியர் மயிலை சிவ.முத்து, பேராசிரியர் பாலூர் கண்ணப்பர், சிறுவை நச்சினார்க்கினியன் ஆகியோருடன் சேர்ந்து உரையாடுவது வழக்கம். அங்குப் பேராசிரியர்கள் மே வீ வேணுகோபால்பிள்ளை, கா.ரா கோவிந்தன் ஆகியோரும் வந்து சேர்ந்துகொள்வர் உரையாடல் அனைத்தும், 'மாணவர்களுக்குப் புத்தகங்கள் அமையும் விதம், மாணவர்கள் எதை எதிர்பார்க்கிறார்கள், அன்றைய தினம் தாங்கள் பாடம் நடத்திய முறை' இவைகளைப் பற்றியதாகவே இருக்கும் 'அவ்வுரையாடல்களில் பல நூல்களைக் கற்ற அறிவினைப் பெறமுடிந்தது' என்று குறிப்பிட்டுள்ளார் சிறுவை நச்சினார்க்கினியன்

## விவேகானந்தர் கல்லூரியில்

1947 ஜூலை முதல் 1953 ஜூலை வரை சென்னை விவேகானந்தர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார் இராசமாணிக்கனார் அவரை அப்பொறுப்பிற்குப் பணியமர்த்திய பேராசிரியர் சி ஜகந்நாத ஆச்சாரியார் அதுபற்றிக் குறிப்பிடும்போது, 'பண்டிட்டிற்கு அப்போது சம்பள கிரேடு ஆரம்பம் 100 ரூபாய் நான், அவர் தகுதி நோக்கி மூன்று இன்கிரிமென்ட் போட்டு 115 ரூபாய் அவருக்கு ஆரம்பத்தில் கொடுக்கும்படி பரிந்துரை செய்திருந்தேன், என் பரிந்துரையின்படியே மேன்மையான நிருவாகத்தார் 115 ரூபாய் அவருக்கு ஆரம்பத்தில் கொடுத்தார்கள்

அக்காலத்துக் கல்லூரிகளில் வேலைசெய்த தமிழ்ப் பண்டிட்டுகளில் யாரும் தொடக்கத்தில் இந்தச் சம்பளம் வாங்கியதில்லை எங்கள் கல்லூரியில், ஆறு ஆண்டுகள் (1947- 1953) பணியாற்றினார் அங்குப் பணியாற்றும்போது இவர் சம்பளத்தை ஓரிரு ஆண்டுகளில் 130 ரூபாயாக உயர்த்தினோம் டாக்டர் பட்டம் பெற்றவுடன் இவர் சம்பளம் அந்தக் கிரேடின் முடிவான 150 ரூபாயாக ஆக்கப்பட்டது இப்படிச் சம்பளத்தில் Meteoric rise ஆன வேறொருவரை ஆசிரியர் துறையில் நான் கண்டதில்லை

இராசமாணிக்கனார் கல்லூரிக்கு வந்தால், 'தாம் உண்டு தம் வேலை உண்டு' என்றிருப்பார் கடமைகளைத் தவறாமல், செவ்வனே செய்துவிடுவார் எல்லாவற்றிலும் ஒழுங்கு. வகுப்பிற்குச் சென்றால் மாணவர் முன்னரே வந்து காத்துக்கிடப்பர். நகைச்சுவை ததும்ப மாணவர் உள்ளம் கவரும்படி பாடம் நடத்துவதில் வல்லவர். எல்லோருடனும் மதிப்புடன் பழகுபவர். ஆசிரியர் அறையில் வீண்பேச்சுக்கு இடந்தராதவர். மெதுவாகப் பேசும் இயல்பினர். ஆனால், பேச்சிலேயே நகைச்சுவை ததும்பும்படி உட்கருத்து வைத்துப் பேசுவார்' என்று கூறியுள்ளார்

விவேகானந்தர் கல்லூரியில் பணியிலிருந்தபோதுதான் 'சைவ சமய வளர்ச்சி' என்னும் தலைப்பில் டாக்டர் பட்டத்துக்குரிய ஆராய்ச்சியைச் செய்து 1951இல் அப்பட்டத்தையும் பெற்றார் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களுக்கும் நேரில் சென்று அங்குள்ள ஊர்களில் களஆய்வு செய்தும் தேவையான நூல்களைப் படித்தும் தெளிந்த பிறகே தம்முடைய பெரியபுராண ஆராய்ச்சி, சைவ சமய வளர்ச்சி ஆய்வுகளை முழுமையுறச் செய்யமுடிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்

'தாம் படித்த அல்லது கேட்ட செய்திகளைப் பற்றிய உண்மைகளை ஆராய்ந்து அறிந்த பிறகே அவற்றைத் தம் நூல்களில் எழுதினார் பேரறிஞர் பலரிடத்தும் அயராது சென்று கலந்துரையாடி உண்மை காணுவதில் இவர் வல்லவராய் இருந்தார்' இத்தகு ஆய்வு நெறிமுறைகள் அவரது படைப்புகளுக்குப் பெருமதிப்பைப் பெற்றுத்தந்தன.

இருபத்தைந்து ஆண்டுக் கால சென்னை வாழ்க்கையில் (1928-1952) இராசமாணிக்கனார் ஆற்றிய பணிகளும் அடைந்த வெற்றிகளும் பெருமைக்குரியவை. பள்ளி இறுதித் தேர்வில் தேறியவராக வந்தவர், உயர்ந்த பல பட்டங்களைப் பெற்ற இடம் சென்னை சீர்திருத்தம் பற்றிய கனவுகளோடு வந்தவர், அவற்றை நனவாக்கி வெற்றி கண்ட இடம் சென்னை 'சமயம் போற்றுதலுக்கு உரியது; சமய ஊழல்கள் களைதலுக்கு உரியன' என்னும் எண்ணத்தோடு வந்தவர், தம்முடைய இக்கொள்கையைப் பரப்பத் தொடங்கிய இடம் சென்னை. எழுத்தில் ஆர்வத்தோடு வந்தவர், எழுத்தாளராக மலர்ந்த இடம் சென்னை.

## மதுரை வாழ்க்கை

நீண்ட காலம் சென்னையில் வாழ்ந்த இராசமாணிக்கனாரை 1953 இல் மதுரை வரவேற்றது 1953 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் 1959 ஆம் ஆண்டு ஆகஸ்டு வரையில் அங்கு, தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். அக்காலத்தில் அவரிடம் பயின்ற மாணவர்களுள் ஒருவரான திரு வீ வீராசாமி, 'தம்முடன் பழக நேர்ந்த அனைவரையும் தம்மிடம் தனி அன்பும் மதிப்பும் கொள்ளுமாறு செய்தது, வேறுபாடின்றி அனைவருடனும் பழகிய பேராசிரியரது நல்லியல்புதான்' என்று குறிப்பிட்டுள்ளார்.

''கல்வி பயிலும்போது பல ஆசிரியர்கள் நம் வாழ்க்கையில் எதிர்ப்படுகிறார்கள் அவர்களுள் ஒரு சிலரே நம் மனத்தில் நிலைபெற்று வாழ்கிறார்கள். சில ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஒன்றுமே தெரியாது, தாங்கள்தாம் அறிவுக் களஞ்சியங்கள் என நினைத்துக் கொள்வார்கள் மாணவர்கள்தாம் சிந்தனைக் கருவூலங்கள், அவர்களது சிந்தனையை நல்வழியில் கொண்டுசெல்வதுதான் ஆசிரியர்களது கடமை என உணர்ந்து, கற்றறிந்தோன் என்று சிறிதும் மமதையின்றி, அனைவரிடமும் மனம் திறந்து பேசும் எங்கள் மதிப்பிற்குரிய டாக்டர் இராசமாணிக்கனார் அவர்களின் பண்பு எவரையும் அவர்பால் ஈர்த்துவிடும் கல்லூரியில் உடன் பணிபுரிந்த ஆசிரியர்கள், 'நீங்கள் இவ்வுளவு தூரம் மாணவர்களுடன் நெருங்கிப் பழகக்கூடாது' என்று இவரிடம் கூறுவர் இவரோ புன்முறுவலுடன், 'நாமும் மாணவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியன நிறைய இருக்கின்றன' என அவர்களுக்குப் பதிலிறுப்பார்.

ஒவ்வொரு மாலையும் மாணவர்களுடன் உலாவச் செல்வது இவரது வழக்கம் மற்றைப் பாடங்களுக்கு எவ்வாறு 'டிமிக்கி' கொடுப்பது என்று மாணவர்கள் யோசித்துக் கொண்டிருப்பர். ஆனால் இவரது பாடமோ வாரத்தில் மூன்று நாட்கள்தானே வருகின்றது என்று மனம் வருந்துவர். அவ்வளவு தூரம் இவர் நடத்தும் பாடங்கள் சுவையுடனும் மனத்தில் பதியும் எடுத்துக்காட்டுகளுடனும் விளங்கும். உலக நடப்புக்களை மிக்க நகைச்சுவையுடன் எடுத்துக் கூறுவதில் இவருக்கு நிகர் இவரேதான்' என்று பேராசிரியரின் பழகும் பாங்கையும் கற்றுத் தரும் திறனையும் திரு வீ.வீராசாமி நினைவுகூர்ந்துள்ளார்

மதுரையில் வாழ்ந்தபோது அங்கு எழுத்தாளர் மன்றம் உருவாவதற்குப் பெருந்துணையாயிருந்தார். அதன் தலைவராகவும் விளங்கினார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பாடத் திட்டங்களை

மாற்றியமைத்து அதன் சார்பில் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வுக்கு மாணவர்களை அனுப்பச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார். எழுத்துப்பணி மதுரையிலும் தொடர்ந்தது. இக்காலகட்டத்தில் ஏறத்தாழ நாற்பது நூல்கள் இராசமாணிக்கனாரால் எழுதப்பட்டன. இவர் தலைமையேற்று நடத்தி வைத்த திருமணங்களும் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றிய நிகழ்ச்சிகளும் கணக்கற்றவை.

மதுரையில் இருந்தபோது தமிழ்நாடெங்கும் பயணித்து இராசமாணிக்கனார் ஆற்றிய சொற்பொழிவுகள் இலக்கிய நுகர்வையும் சமய, சமூக சீர்திருத்த மனப்பாங்கையும் மக்களுக்கு ஊட்டுவனவாக அமைந்தன எளிய நிலையில் அமையவேண்டிய தமிழர் திருமணம், இலக்கியங்கள் சுட்டும் தமிழர் வாழ்வு, உழைப்பின் உயர்வு, சாதி, சமயப் பூசலற்ற-ஏற்றத் தாழ்வுகள் கருதாத தமிழ்ச் சமூகம் என்பனவே பெரும்பாலும் அவர் பொழிவுப் பொருள்களாக அமைந்தன. எளிய, இனிய நடையில் நகைச்சுவை உணர்வு பொங்க ஆற்றொழுக்காகப் பேசும் ஆற்றல் இவருக்கு இருந்ததால் உரை கேட்டவர்கள் இவர் வயமாயினர்.

பள்ளி, கல்லூரி அளவிலான பாடப்புத்தகக் கட்டுரைகளாலும் துணைப்பாட நூல்களாலும் இத்தகு பயன்தரு பொழிவுகளாலும் இராசமாணிக்கனார் நாடறிந்த நல்லறிஞராகத் திகழ்ந்தார் இவரது பணிகளைப் பாராட்டிக் கோயமுத்தூர் திருவள்ளுவர் கழகம் 1956 ஆகஸ்டு 26இல் பெருமைக்குரிய பாராட்டு விழாவொன்றை அமைத்தது இராஜா சர். முத்தையா செட்டியார், அமைச்சர் சி சுப்பிரமணியம், தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் வீ.முனுசாமி ஆகியோர் இராசமாணிக்கனாரின் தமிழ்த் தொண்டை ஒருமனதாகப் பாராட்டி மகிழ்ந்தனர்.

## சென்னைப் பல்கலைக்கழகப் பணி

1959 செப்டம்பர்த் திங்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணைத் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்ற இவ்வறிஞர் 1967 முடிய அப்பணியில் இருந்தார் பணியிலிருந்த முதல் ஐந்தாண்டுகளில் சங்கத்தமிழ் இலக்கியமான பத்துப்பாட்டை ஆய்வு செய்து, 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்ற பெயரில் நூலாக்கி, பல்கலைக் கழகத்திடம் ஒப்புவித்தார் அவ்வரிய ஆராய்ச்சி நூல் பின்னால் (1970)பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது தொடர்ந்து தாம் செய்த ஆராய்ச்சிகளைக் கட்டுரைகளாக்கிப் பல இதழ்களிலும்

வெளியிட்டார் பல மன்றங்களிலும் இலக்கியக் கழகங்களிலும் தாம் ஆற்றிய சொற்பொழிவுகளுக்குக் கட்டுரை வடிவம் தந்து நூல்களாக்கினார் தாம் அரிதின் முயன்று அறிந்த பல வரலாற்று உண்மைகளை, என்றும் அழியாது இருக்குமாறு எழுத்து வடிவாக்கிய பெருமை இவருக்கு உண்டு

திருச்சிராப்பள்ளி, சென்னை வானொலி நிலையங்கள் இராசமாணிக்கனாரின் பல பொழிவுகளை மக்களுக்கு வழங்கின. அவை பின்னாளில் தொகுக்கப் பெற்று நூல் வடிவமும் பெற்றன இலங்கை வானொலியில் உரையாற்றவும் இலங்கைத் தமிழ் மன்றங்களில் பொழிவாற்றவும் விரும்பி அழைக்கப்பெற்றதால் இருமுறை இலங்கை சென்றுவந்தவர் இவ்வறிஞர் இவரது ஆய்வுப் பணிகளைப் பெரிதும் போற்றிய தமிழ்நாடு அரசு 1966 இல் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்குத் தேர்ந்தெடுதது அனுப்பிய மிகச் சில தமிழறிஞர்களுள் இராசமாணிக்கனாரையும் ஒருவராகக் கொண்டது. அரசின் சார்பில் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட இவ்வறிஞரின் ஆய்வுக் கட்டுரை உலகத் தமிழறிஞர்களால் உவந்து ஏற்கப்பட்டது

சமயத் துறையில் இவர் ஆற்றிய பணிகளில் மனம் நிறைந்த திருவாவடுதுறை ஆதீனம், 'சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்'(1951) என்னும் பட்டத்தையும் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம், 'ஆராய்ச்சிக் கலைஞர்'(1955) என்னும் பட்டத்தையும் சைவ சித்தாந்த சமாஜம், 'சைவ நெறிக் காவலர்'(1959) என்னும் பட்டத்தையும் வழங்கி மகிழ்ந்தன தருமபுர ஆதீனம், 'சைவ இலக்கியப் பேரறிஞர்'(1963) என்னும் பட்டத்தை அளித்து உடன் பொற்பதக்கமும் பொன்னாடையும் வழங்கிப் பெருமைப்படுத்தியது. தருமபுர மடத்தினர் டாக்டர் பட்டத்துக்குரிய ஆராய்ச்சி நூலான 'சைவ சமய வளர்ச்சி'யை ஆங்கிலத்தில் வெளியிட்டனர் இராச மாணிக்கனாரின் ஆய்வுகளைப் பிற மொழியாளரும் அறிய இது வாய்ப்பாக அமைந்தது.

பல பல்கலைக்கழகங்களில் தலைமைத் தேர்வாளராகவும் பாடத்திட்டக் குழுத் தலைவராகவும் விளங்கிய இவ்வறிஞர் மாணவர் நலத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் பாடத் திட்டங்களை வகுப்பதிலும் தேர்வுகளுக்கான வினாத்தாள்களைத் தயாரிப்பதிலும் மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்துவதிலும் அவர்

கொண்டிருந்த பொறுப்புணர்ச்சி குறிப்பிடத்தக்கது. 'தமிழ்ப் பாடத்தில் மாணவர்களுக்கு அவரவர் தகுதிக்குரிய மதிப்பெண்களைத் தருவதில் தயக்கம் கூடாது இந்த அளவிற்கு மேல் உயர்ந்த மதிப்பெண் மொழிப் பாடத்தில் கூடாது எனும் போக்குத் தவறானது. மாணவர்கள் சிறப்பாக விடையெழுதியிருந்தால் உரிய உயரிய மதிப்பெண்களை வழங்கிடல் வேண்டும். அப்போதுதான் தமிழ்ப் பாடத்தைத் தயங்காது தேர்ந்து கொள்ள மாணவர்க்கு ஊக்கம் பிறக்கும்' என்பது இராசமாணிக் கனாரின் கருத்தாக இருந்தது. இதனால், சிறப்புத் தமிழ் மாணவர்கள் 1960களிலேயே தமிழ்ப் பாடத்தில் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற முடிந்தது

இராசமாணிக்கனாரின் பேச்சுத்திறம், உலகியல் அறிவு, பழகும் பாங்கியல் குறித்துக் குறிப்பிடும் ஆட்சிச்சொற் காவலர் கீ. இராமலிங்கனார், 'இவருடைய விரிவுரைகள் மனதில் பதியக்கூடிய முறையில் அமையும் கேட்பாரைப் பிணிக்கும் நலம் பொருந்தி யனவாக விளங்கும் இயலுமானால், கரும்பலகை இடச்சொல்லி, அதில் செய்திகளை எழுதியும் காட்டி விளக்குவார் என் தோழர். உள்ளத்தில் ஊன்றும்படி தேவையான இடங்களில் திரும்பத் திரும்பக் கூறிப் பதியவைப்பார் அவர் சொன்ன செய்திகளைக் கேட்டவர்கள் சிந்திப்பர்; அசைபோடுவர்; வெறும் மனத்தோடு செல்லமாட்டார்கள்

ஒருமுறை பெங்களூரில் நடந்த தமிழகப் புலவர் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, இராசமாணிக்கனாரும் நானும் மட்டுமே 'சிரவணபெளகோளா' முதலிய இடங்களுக்குச் சென்றோம். மணலில் புதையுண்ட கோயில்கள் ஓர் ஊரில் இருந்தன. அந்த ஊரின் பெயர் இப்போது எனக்கு நினைவில் இல்லை மேற்பகுதியிலிருந்த மணலை மட்டும் அகழ்ந்து எடுத்துவிட்டுக் கோயில்களின் கோபுரங்களும் பிற உச்சிப் பகுதிகளும் கண்ணில் படும்படிச் செய்திருந்தனர் அவற்றைக் காண்பதிலும், ஆராயும் அவரது சிந்தையில் அவற்றைப் படம்பிடித்துக் கொள்வதிலும் என் தோழர் கண்ணும் கருத்துமாக இருந்தார். பொழுது போனதும் தெரியவில்லை. இருட்டியே போய்விட்டது. அது எங்களுக்கு அடியோடு புதிய ஊர். இரவில் அங்குத் தங்கியாக வேண்டிய நிலையாக நேர்ந்துவிட்டதால், நான் திகைத்தேன். ஆனால், என் தோழரோ, 'இதற்கு ஏன் கவலை உங்களுக்கு? வசதியாகத் தங்கலாம் வாருங்கள்' என்று ஊருக்குள் அழைத்துச் சென்றார்

அது சிறிய ஊர் சில ஐயங்கார்கள் வீடுகள் இருந்தன. அங்கேதான் தங்கும் வசதி கிடைக்கக்கூடும். ஒரு வீட்டுத் திண்ணையில் நாங்கள் இருவரும் படுத்துக்கொள்ள, அவரது உலகியல் ஞானமே துணை செய்தது. அவரது அரவணைத்த பேச்சினால் எங்களுக்குப் படுக்க விரிப்பும் தலைக்கு அணையும் கிடைத்தன. எதிர்ப்புறத்திலே, தமிழ் நலம் போற்றும் ஓர் ஐயங்கார் வீட்டு முகப்பிலே சிலர் தமிழில் உரையாடிக் கொண்டிருந்தனர் அங்கு என்னையும் அழைத்துக் கொண்டு சென்றார் என் தோழர் விரைவில் அங்கிருந்தவர்களில் முக்கியமானவரின் கருத்தை ஈர்த்துவிட்டார் எங்களுக்குப் பால், பழம் முதலியன வலியக் கிடைத்தன பசியும் ஆறிற்று' என்று நினைவுகூர்ந்துள்ளார்

## குடும்பம்

இராசமாணிக்கனாரின் குடும்பம் தமிழ் மணம் கமழும் குடும்பமாகும். தாம் உயர்ந்ததோடு நிறைவடையாத இராச மாணிக்கனார் தம் துணைவியாருக்கும் தமிழ் கற்றுத்தந்து அவரையும் புலவராக, ஆசிரியராக வளர்த்தார் 1947இல் வித்துவான் பட்டம் பெற்ற திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனார் சென்னையில், மண்ணடிப்பகுதியில் இருந்த சி எஸ் எம் பெண்கள் நடுநிலைப் பள்ளியில் சில ஆண்டுகளும் பின்னர் மதுரையில், பாத்திமா கல்லூரியில் சில காலமும் தமிழாசிரியராகத் திறமையோடு பணிபுரிந்தார். அக்காலத்தே, பள்ளி மாணவர்க்கான பாட நூல்களில் பல கட்டுரைகளை எழுதியதுடன், 'தமிழ்ப் புலவர் பெருமக்கள்' முதலிய நூல்களையும் அவர் படைத்துள்ளார்

மனைவியைக் கல்வியில் வளர்த்தாற் போலவே தம் எட்டுக் குழந்தைகளையும் - ஆண், பெண் என்ற வேற்றுமை பாராது உயர்கல்வியில் தேர்ச்சி பெறச் செய்தவர் இராசமாணிக்கனார் திருச்சிராப்பள்ளியில் கண் மருத்துவராகப் பணிபுரியும் ஒருவர் நீங்கலாக ஏனையோர் பல்வேறு கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தமிழ்ப் பணியாற்றியவர்கள் 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படம்பிடித்துக் காட்டியது மிகையல்ல என்று மெய்ப்பிக்கிறது இராசமாணிக்கனாரின் குடும்பம்' என்கிறார் நெ.து. சுந்தரவடிவேலு.

இராசமாணிக்கனாரின் இல்லறம் நல்லறமாக விளங்கியது. சொற்பொழிவுகளுக்குப் போகாமல் வீட்டிலிருந்த நாட்களில் தம்

துணைவியாருக்கு வீட்டு வேலைகளில் உதவுவதைத் தம் கடமையாகக் கொண்டிருந்தார் 'ஒருமுறை அவர் இல்லம் சென்றபோது, பேராசிரியர் தம் மனைவிக்கு வெங்காயம் நறுக்கி உதவி செய்து கொண்டிருந்தார். மற்றொரு முறை சென்றபோது தமிழ்ப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். ஒத்த நலம் - ஒத்த பண்புநிலை பேராசிரியர் இல்லத்தில் மலர்ந்தது' என்பார் சிறுவை நச்சினார்க்கினியன்

'எங்கள் வளர்ச்சியில் அதிக அக்கறையும் ஆர்வமும் உடையவர்கள் படிப்பில், விளையாட்டில் எங்களில் யாராவது முதலாவதாக வந்தால் அவர்களைப் பாராட்டி, பரிசுகள் தந்து ஊக்கப்படுத்துவார்கள் பள்ளியில் சுற்றுலாக்கள் செல்வதென்றால், விருப்பத்தோடும் மகிழ்வோடும் அனுப்பிவைப்பார்கள் பயணங்கள் தரும் அனுபவங்கள் வாழ்க்கையை வளப்படுத்தும் என்ற கண்ணோட்டம் உள்ளவர்கள் அவர்கள். நாங்கள் எந்த வகையிலும் ஒரு சிறிதும் துன்பப்படக் கூடாது என்பதில் அதிக அக்கறை காட்டினார்கள் ஆரம்ப நாட்களில் நாங்கள் வாடகை வீடுகளில்தான் இருந்தோம் வாடகை வீடுகள் என்றாலும் பிற குடித்தனங்கள் இல்லாத தனி வீடு களைத்தான் விரும்புவார்கள் எந்த விதத்திலும் தம் குழந்தைகளுக்கு வசதிக்குறைவுகள் இருக்கக்கூடாது என்று கருதினார்கள்' என்பார் பேராசிரியரின் திருமகன் மா.ரா. வஞ்சிக்கோவன்.

பிள்ளைகள் கல்வி பெறுவதில் மிகுந்த கவனமுடன் இருந்த இராசமாணிக்கனார் தேவையான சமயங்களில் அவர்களுக்குப் பாடங்கள் எடுக்கவும் தவறியதில்லை. வளரும் காலத்தில் ஒரு மணித்துளியைக்கூட வீணாக்கக்கூடாது என்பது அவர் கருத்தாக இருந்தது வாழும் இடத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தமையால் விடுமுறை நாட்களில் அவரவர்க்கு ஏற்றவாறு வீட்டைத் தூய்மைசெய்யும் பணியைப் பிள்ளைகளுக்குப் பங்கிட்டுத் தருவார் காலையிலிருந்து இரவுவரை சோர்வின்றி உழைப்பவர் என்பதால், இரவு உணவின்போது இயன்றவரையிலும் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் உடனிருந்து உண்ணுவதை விரும்புவார். அந்த நேரத்தில்தான் பிள்ளைகளின் படிப்பு, நலம், பிற செயல்கள் முதலியன பேசப்படும் உறங்கப் போகும்போது தேவை ஏற்படும் நாட்களில் குடும்பநிலை குறித்துப் பேராசிரியரும் அவர் துணைவியாரும் கலந்துரையாடுவது உண்டு குடும்பச் செலவுகளை மாதந்தோறும் எழுதிவைத்து, வருவாய்க்கேற்ப செலவு செய்யும் பழக்கத்தை ஏற்படுத்தியவர்

அவரது உலகியல் அறிவும் திட்டமிடும் பாங்கும் குடும்பத்தை உயர்த்த அவருக்குப் பெரிதும் உதவின.

இத்துணை சிறப்புக்களை ஈட்டிப் புகழ் படைத்திருந்த இராசமாணிக்கனார் தம் உடல் நலத்தையும் ஒழுங்காகவே பேணி வந்தார். ஆயினும் உழைப்பின் மிகுதியாலும் ஆராய்ச்சிகளாலும் களஆய்வுகளுக்காகப் பல ஊர்களுக்குச் சென்றுவந்த காரணத்தாலும் இவர்தம் உடல் ஐம்பத்தொன்பதாம் வயதில் சிறிது தளர்ச்சி அடைந்தது. இதய நோய் உண்டாகித் துன்புறுத்தியது. உடனே மருத்துவமனைக்குச் சென்று மருத்துவஞ் செய்து கொண்டதனால் உடல் நலம் பெற்றார் அடுத்த ஆண்டும் அங்ஙனமே இதய நோய் வந்தது 26 5.1967 வெள்ளிக்கிழமை அன்று பேராசிரியர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

பொறுப்புடைய பெரிய குடும்பத் தலைவராகவும் கல்வி யாளராகவும் சமுதாய சீர்திருத்தச் சிந்தனையாளராகவும் மாணவர் நலன் நோக்கிய எழுத்தாளராகவும் அறிவியல் அணுகுமுறைகளைப் பயன்படுத்திய ஆராய்ச்சியாளராகவும் தமிழுலகும் வரலாற்றுலகும் இணைந்து போற்றிய பேராசிரியப் பெருந்தகையாகவும் சமயத் தூய்மை கருதிய சிவநெறிச் செல்வராகவும் பிறர்க்கு உதவும் பண்பாளராகவும் விளங்கிய டாக்டர் மா இராசமாணிக்கனார் தமிழ் உள்ளளவும் தமிழர் உள்ளத்தில் நீங்காதிருப்பார்

# 2
# இலக்கிய ஆய்வுகள்

தமிழிலக்கியங்கள் ஓலைச்சுவடிகளிடமிருந்து விடுதலை பெற்று அச்சேற்றப்பட்ட நாள் முதலாய், அவை குறித்த ஆய்வுகள் தமிழறிஞர்களால் இன்றளவும் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகின்றன எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, இரட்டைக் காப்பியங்கள், இடைக்கால, பிற்கால இலக்கியங்கள் எனத் தமிழினத்தின் காலநிரலான கவித்துவப் பதிவுகள் அனைத்துமே பல்வேறு கோணங்களில் பார்க்கப்பட்டுத் தமிழர் வாழ்வு, கோட்பாடுகள், வரலாறு, திறம் என்பன குறித்த விரிவான கண்ணோட்டங்கள் தகுதிசான்ற நூல்களாக வெளிவந்துள்ளன. கடந்த அறுபதாண்டுகளில் உருவாக்கம் பெற்ற அத்தகு அரிய இலக்கிய ஆய்வு நூல்களுள் மா. இராசமாணிக்கனாரின் பத்துப்பாட்டு ஆராய்ச்சிக்குத் தனியிடமுடண்டு. ஓர் இலக்கிய ஆய்வு எங்ஙனம் நிகழ்த்தப்பட்டால், அது வரலாற்றுக் கருவூலமாக மதிக்கப்படும் என்பதற்குப் பத்துப்பாட்டு ஆராய்ச்சி சிறந்த எடுத்துக்காட்டாய் மிளிர்கிறது

### பத்துப்பாட்டு ஆராய்ச்சி

'பழந்தமிழ் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் விளக்கமாய்த் திகழும் இந்நூலை (பத்துப்பாட்டு) டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் முதன்முதலாக - முழுமையாக - 1889ஆம் ஆண்டு பதிப்பித்து உதவினார் அந்நாள் முதல் கடந்த எண்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பத்துப்பாட்டைத் துணையாகக் கொண்டு இலக்கிய - வரலாற்று ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளன. அவற்றிற்கெல்லாம் மணிமுடியாய்த் திகழ்வது சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1959 முதல் 1967 வரை துணைத் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்த டாக்டர் மா இராசமாணிக்கனார் அவர்கள் இயற்றியுள்ள பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் இவ்வரிய பெரிய நூல்' என்று நூலின் அணிந்

துரையில், அந்நூலை அச்சேறச் செய்த சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு நெ.து சுந்தரவடிவேலு குறிப்பிடுவது முற்றிலும் உண்மையே.

புதையலைப் போல் வெளிப்பட்ட தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்வதும் அவ்விலக்கியங்கள் புலப்படுத்தும் தரவுகளை உரிய தலைப்புகளின் கீழ்த் தொகுத்தளிப்பதுமே அன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான தமிழறிஞர்கள் செய்துவந்த பணியாக அமைந்தது. இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட தமிழர் வரலாற்றை இலக்கிய ஆசிரியர்களின் மிகையான கூற்று என்று வரலாற்றறிஞர்கள் ஏற்கத் தயங்கினர். தகுதியான சான்றுகளற்ற நிலையில் காலநிரல் பெறாத இலக்கியத் தரவுகள் வரலாற்று வடிவம் கொள்ளத் தடுமாறிய இச்சூழமைவில் கல்வெட்டு, களஆய்வு என்னும் அறிவியல் நோக்குடைய இரண்டு புலங்களின் துணையுடன் இலக்கிய ஆய்வு மேற்கொண்டு, இலக்கியங்கள் வரலாற்றுப் பதிவுகளே என்று நிறுவியவர்களுள் தலையாயவர் மா இராசமாணிக்கனார்

ஐந்தாண்டுகள் (1959-1964) உழைத்து முப்பத்தைந்து தலைப்புகளின் கீழ் எழுநூற்று எண்பத்தொரு பக்கங்களில் விரிவான ஆய்வுக்களஞ்சியமாய்ப் பத்துப்பாட்டு ஆராய்ச்சி எனும் நூலை உருவாக்கியுள்ள இராசமாணிக்கனாரின் ஆய்வு அணுகுமுறை இன்றளவும் பின்பற்றத்தக்கதாய் விளங்குவது குறிப்பிடத்தக்கது

பத்துப்பாட்டு இலக்கியங்களுள் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை அமைப்பின கூத்தில் வல்ல கூத்தர், பாடுவதிலும் கருவியிசையிலும் தேர்ந்த பாணர், பாடுவதிலும் ஆடுவதிலும் திறன் பெற்ற பொருநர், விறலி என்றமைந்த இந்நால்வரும் தமக்குத் துணையாய் அமைந்தவருடன் சிற்றரசரிடமும் பேரரசரிடமும் சென்று தம் கலைத்திறன் காட்டிப் பரிசு பெற்று மீள்வர் அங்ஙனம் மீள்பவர் வள்ளல்களை நாடிச் செல்லும் தம்மைப் போன்ற கலைவாணரை வழியில் காணின் அவர்மீது இரக்கம் கொள்வர்; அவர்களுக்கு உதவிசெய்ய விழைவர், அதனால், தம்மை ஆதரித்த வள்ளலிடம் சென்று பரிசில் பெற்று மகிழுமாறு அவர்களை வழி கூறி அனுப்புவர் இங்ஙனம் வழிப்படுத்துதல் 'ஆற்றுப்படை' எனப்படும் ஆற்றுப் படுத்தப்படுபவர் பெயரால் ஆற்றுப்படை இலக்கியம் அமையும்

ஆற்றுப்படை நூல்கள் சிற்றரசர், பேரரசர் இருக்குமிடம் செல்ல வழி கூறும் நூல்களாக அமைந்தமையின், ஒரு நில வரைபடதனைப் பார்க்குமாறு போலச் சங்க கால ஊர் அமைவுகளைச் சுட்டி, அங்கு

வாழ்ந்த மக்கள் இயல்புகளையும் விரித்துக் கூறியுள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இத்தரவுகளின் உண்மைத் தன்மையை நிறுவுவது ஆய்வாளர்களுக்கு எளிதான செயலன்று. இதை நன்கு உணர்ந்திருந்த இராசமாணிக்கனார், ஆற்றுப்படுத்தியவர்கள் கூறிய வழிகளில் அமைந்திருந்த ஊர்களை முதலில் அடையாளப் படுத்தி, அவ்வூர்களில் உள்ள திருக்கோயில்களைக் கண்டறிந்து, அங்குள்ள கல்வெட்டுகளைப் படித்து அவற்றின் வழி அவ்வூர்கள் ஆற்றுப்படை சுட்டும் ஊர்களே என்பதை உறுதி செய்துகொண்டு தம் ஆய்வைத் தொடர்ந்துள்ளார்

எந்த ஆய்விற்கும் ஊன்றுகோலாய், உறுதியான ஒரு தொடக்கம் வேண்டும் இராசமாணிக்கனார் ஆற்றுப்படை வழிகளை ஆராய, அவற்றின் உண்மைத்தன்மையை நிறுவ அத்தகு தொடக்க நிலைகளாய் அவ்வழிகளில் அமைந்திருந்த ஊர்களைக் கொண்டார் ஊர்களை அடையாளப்படுத்துவதற்கு நிலவியல் அறிவும் வரலாற்றுத் தெளிவும் இன்றியமையாதவை. இராசமர்ணிக்கனாரிடம் அவை இரண்டும் இடம்பெற்றிருந்தமையைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராய் இருந்த பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை உணர்ந்திருந்தமையால்தான், 'தென்னிந்திய வரலாற்றிலும் கல்வெட்டுகளிலும் பயிற்சி பெற்றிருக்கும் நீங்கள் மிக விரிவான முறையில் 'பத்துப்பாட்டு' என்னும் சங்க நூலைப் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்று எழுத வேண்டும்' என்று அவரைப் பணிக்க முடிந்தது பேராசிரியர் ரா பி சேதுப்பிள்ளையின் எதிர்பார்ப்பை இராசமாணிக்கனாரின் மடியறியா உழைப்பும் அவர் கைக்கொண்ட கல்வெட்டாய்வும் இலக்கியம் சுட்டும் களங்களுக்கே என்று மேற்கொண்ட நேரிடை ஆய்வுகளும் நிறைவு செய்தன. ஆற்றுப்படை வழிகளை அடையாளப்படுத்தவும் அவற்றைப் பற்றிய நேரிய முடிவுகள் கொள்ளவும் இராசமாணிக்கனாருக்குக் கல்வெட்டுகளும் கள ஆய்வுகளும் எங்ஙனம் துணைநின்றன என்பதை அறிவது இன்றைய ஆய்விளைஞருக்கு வழிகாட்டுதலாய் அமையும்

சிறுபாணாற்றுப்படையில் குறிக்கப்படும் ஓய்மானாட்டு ஊர்களான எயிற்பட்டினம், ஆமூர், வேலூர், கிடங்கில், மாவிலங்கை என்பனவற்றைப் பற்றிய பாடல் தரவுகள் அனைத்தும் ஆராயப்படுவது முதல் நிலை நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்ற சிறு பாணன், வறிய மற்றொரு சிறுபாணனை அவ்வள்ளலிடம் ஆற்றுப்படுத்தியபோது, இவ்வூர்களைப் பற்றிய குறிப்புகளைத் தந்துள்ளார். எயிற்பட்டினத்தைக்

குறிக்கும்போது, 'எயிற்பட்டினம் உள்ள கடற்கரையில் அகிற் கட்டைகள் அலைகளால் உந்தப்பட்டுக் கரையை அடையும். நுளைச்சியர் அக்கட்டைகளைக் கொண்டு அடுப்பெரிப்பர்' எனும் கருத்துக் கூறப்பட்டுள்ளது. இதனால், எயிற்பட்டினம் ஒரு கடற்கரை ஊர் என்பது தெளிவாகிறது இந்தக் கடற்கரை ஊரைக் கண்டறியும் முயற்சியைத் தொடங்குவதற்கு முன் இவ்வூர் பற்றிய அறிஞர் கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன.

வரலாற்றுப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் சிறுபாணன் குறிப்பிடும் இந்த எயிற்பட்டினத்தைத் திண்டிவனம் வட்டத்திலுள்ள இன்றைய மரக்காணமாகத் தம் நூல்களில் அடையாளப்படுத்தி யுள்ளார் மரக்காணத்தை அடுத்துக் கடற்கரைக்குச் செல்லும் வழி யிலுள்ள பூமீசுவரர் கோயில் கல்வெட்டுகளை ஆராய்ந்த மா.இராச மாணிக்கனார், அக்கல்வெட்டுகள் கூறும் செய்தி சாஸ்திரியாரின் கருத்துக்கு மாறாய் உள்ளமையைச் சுட்டுகிறார். 'சோழப் பேரரசர் காலத்தில் (கி பி.900-1200) மரக்காணம், மனக்கானம் எனப் பெயர் பெற்றிருந்தது என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது. 'மணற்கானம்' (மணற்காடு) என்ற பெயரின் திரிபே 'மனக்கானம்' என்பது. அது மேலும் திரிந்து விஜயநகர வேந்தர் ஆட்சியின்போது 'மரக்காணம்' என வழங்கலாயிற்று என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது.'

இதனால்,

*'பாடல் சான்ற நெய்தல் நெடுவழி*
*மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய*
*பனிநீர்ப் படுவிற் பட்டினம்'*

(151-153)

என்று சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் மதிலொடு பெயரிய பட்டினமாம் எயிற்பட்டினம் மரக்காணமன்று என்பதைத் தெளிவுபடுத்தும் இராசமாணிக்கனார், அதை உறுதிப்படுத்தும் விதமாக ஓய்மானாட்டுக் கடற்கரைப்பகுதியில், 'பட்டினம்' என்னும் ஓர் ஊர் இருந்தமையையும் அதன் பெயரால் கடற்கரைப் பகுதி பட்டினநாடு என்று அழைக்கப்பட்டமையையும் கல்வெட்டுகளின் துணைகொண்டு சுட்டி, அப்பட்டின நாட்டின் தேவதானமாக மரக்காணம் இருந்தமையை, முதலாம் இராஜராஜர் ஆட்சிக்காலக் கல்வெட்டொன்றின், 'ஓய்மானாட்டுப் பட்டினநாட்டு தேவதான மனக்கானம்' எனும் தொடர்கொண்டு நிறுவுகிறார் மரக்காணம் எயிற்பட்டினமாகாது என்பதைத் தெரிவு செய்த நிலையில், பட்டினநாட்டுப் பட்டினத்தை

முதல் இராஜராஜரின் பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் துணையோடு வெளிப்படுத்தி, 'பட்டின நாட்டுப் பட்டினம் வேறு, பட்டின நாட்டு மரக்காணம் வேறு' என்று விளக்கியுள்ளார்.

அடுத்த நிலையாக, கல்வெட்டுக் கூறும் பட்டினம் எங்கிருந்தது என்பதையும் கல்வெட்டுக் கொண்டே ஆராய்ந்து அறிந்துள்ளார். பூமீசுவரர் கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்ட முதலாம் இராஜேந்திரரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'பூமீசுவரர் கோயில் ஓய்மானாட்டுப் பட்டினநாட்டுப் பட்டினத்தில் உள்ளது' எனக் கூறுவதாக எழுதும் இராசமாணிக்கனார், கோயில் இப்போது ஊர்ச் சூழலின்றிக் கடலுக்குச் செல்லும் வழியில் ஊருக்கு முக்கால் கல் தொலைவில் தனித்திருப்பதாகச் சுட்டி, கோயில் இன்றிருக்கும் பகுதியே பழைய பட்டினமாக இருத்தல் வேண்டும் என்று முடிவு காண்கிறார் இபபட்டினம் எயிற்பட்டினத்தினும் வேறானது என்பதையும் முதல் இராஜராஜரின் முப்பத்தைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறும், 'ஓய்மானாட்டுப் பட்டினநாட்டுப் பிரமதேயமான எயிற்பட்டினம்' எனும் கல்வெட்டுத் தொடரால் விளங்கவைத்து, 'இந்த எயிற்பட்டினம் எங்கே இருந்தது?' என்றொரு கேள்வியும் எழுப்பித் தாமே அதற்குத் தெளிய விடைகாண்கிறார்

'நான் 10,11 8 1962 ஆகிய இருநாள்களிலும் மரக்காணத்தில் தங்கிப் பூமீசுவரர் கோவில், கடற்கரை, குப்பங்கள் இவற்றை ஆராய்ந்தேன் மரக்காணம் எம்.ஏ சிங்காரவேல் முதலியார், பஞ்சாயத்து போர்டு தலைவர் இரத்தின சிகாமணி முதலியார், திரு பூமியப்ப முதலியார், இராசமாணிக்க முதலியார், புலவர் சுப்பிரமணியன் ஆகியோர் உதவியால் பல விவரங்களை அறிந்தேன்.' களஆய்வும் ஊராரின் நேர்முகமும் பூமீசுவரர் கோயிலுக்கு வடகிழக்கில் கடற்கரை நோக்கிச் செல்லும் பாதையில் அமைந்திருந்த பெரிய மணற்குன்றுகளைப் பண்டை எயிற்பட்டினமாக இருக்கக்கூடுமெனக் கருத அவருக்கு உதவின

'பூமீசுவரர் கோவிலுக்கு வடகிழக்கில் ஏறத்தாழ அறுநூறு கஜத் தொலைவில் கடலில் உயர்ந்த மேட்டுநிலப்பகுதி இருப்பதாகவும் அங்குக் கடல்நீர் நான்கடி ஆழமே இருப்பதாகவும் அவ்விடத்திற்குச் சென்று மீண்ட ஊரவர் உரைக்கின்றனர்' என்றெழுதும் இவ்வறிஞர், பூமீசுவரர் கோயிலில உள்ள இருபத்துமூன்று கல்வெட்டுகளில் இரண்டு மட்டுமே எயிற்பட்டினம் பற்றிப் பேசுவதைக் குறிப்பிட்டு, 'எயிற்பட்டினம் மணற்குன்றுகள் உள்ள இடத்தில் இருந்து

காலப்போக்கில் அழிந்திருக்கலாம்; அல்லது மேலே சொல்லப்பட்டபடி கடலுள் அமிழ்ந்து மறைந்திருக்கலாம்' என்று முடிவு கொள்கிறார்.

இம்முடிவிற்கு ஏற்பவே, 'மரக்காணத்திற்கு வடக்கில் ஏறத்தாழ இரண்டு கல் தொலைவில் கடல்நீரை உள்ளே கொண்டுவரும் கழிமுகம் இருக்கிறது அந்த உப்பங்கழியிலிருந்து பல கால்கள் மரக்காணத்திற்கும் கடலுக்கும் இடைப்பட்ட இடத்தில் உப்பங்கழிக்கு நீரைக் கொண்டு வருகின்றன கடற்கரைக்கும் இவ்வுப்பங்கழிகளுக்கும் இடையே அழகன் குப்பம், தாழைக்காடு, வசவன் குப்பம், கைப்பாணி, கைப்பாணிக் குப்பம், யக்கியர் குப்பம், நாறல் வாயன் குப்பம் எனப் பல ஊர்கள் இன்றும் உள்ளன இவற்றை நோக்கி, 'கழி சூழ்ந்த ஊர்களையுடைய பட்டினம்' என்று சிறுபாணன் எயிற்பட்டினத்தைக் குறிப்பிட்டது பொருத்தமேயாகும்' என்று உறுதி காண்கிறார்.

எயிற்பட்டினத்தைக் கண்டறிந்த நிலையில், சிறுபாணாற்றுப்படை சுட்டும் பிற ஊர்களான வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை இவற்றைப் பாணன் போக்கிலேயே, பாடல் தரவுகளின் அடிப் படையில் கல்வெட்டுச் சான்றுகளின் துணையுடன் இராசமாணிக்கனார் அடையாளப்படுத்தியிருப்பது அவரது களஆய்வுத் திறனையும் கிடைக்கும் சான்றுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒப்புநோக்கி தருக்கரீதியாக உண்மை காணும் ஆற்றலையும் அவரது வரலாற்றுப் புவியியல் கண்ணோட்டத்தையும் தெளிவாகப் புலப்படுத்துகிறது

மரக்காணத்திற்குத் தென்மேற்கிலுள்ள உப்பு வேலூர் சிவன் கோயில் கல்வெட்டொன்றின் துணையுடன், அவ்வேலூரே ஓய்மானாட்டு வேலூர் என்பதை உறுதிப்படுத்தும் இராசமாணிக்கனார், சோழர் காலத்தில் வேலூரையடுத்துக் காடுகள் இருந்தமையையும் அக்காடுகளில் வேட்டைகள் நிகழ்த்தப்பட்டமையையும் அச்சிவன் கோயில் கல்வெட்டுகள் கொண்டே வெளிப்படுத்தியுள்ளார். களஆய்வின்வழி, மரக்காணத்திற்கு இரண்டு கல் தொலைவிலுள்ள கந்தாடு என்னும் ஊருக்கருகிலிருந்து வேலூர் வரையில் இன்றளவும் செம்மண் மேடுகள் இருப்பதையும் அங்கு வரகு, கடலை பயிராவதையும் சுட்டி, எயிற்பட்டினத்திற்கும் வேலூருக்கும் இடைப் பட்ட இவ்வழி பாணன் உரைக்கொப்பவே முல்லைநிலத் தோற்றம் காட்டுவதைப் படம்பிடித்துள்ளார்

வேலூரிலிருந்து கிடங்கிலை நோக்கிச் செல்லும் வழியில் ஆமூர் இருப்பதாகச் சிறுபாணன் குறித்துள்ளார் ஆயினும் ஆமூர் என்னும் பெயர் கொண்ட ஊர் திண்டிவனம் வட்டத்திலே இல்லை அதனால்

கிடங்கிலை அடையாளம் காண முயன்று, திண்டிவனத்திலுள்ள அனைத்துக் கோயில் கல்வெட்டுகளையும் ஆராய்ந்து, இன்றுள்ள திண்டிவனம் என்னும் நகரத்தின் பெரும்பகுதி பண்டைக்காலக் கிடங்கில் என்ற நகரம் என்பதைச் சான்றுகளோடு நிறுவும் இவ்வறிஞர், இக்கிடங்கிலே நல்லியக்கோடனது தலைநகரமாகும் என்று உறுதிபடக் கூறுகிறார்.

கிடங்கிலைக் கண்டறிந்த நிலையில் அதற்கும் வேலூருக்கும் இடைப்பட்ட ஊராகப் பாணன் குறிப்பிடும் ஆமூரை அறிவது எளிதாகிறது. கொண்டாமூர், சிற்றாமூர், நல்லாமூர் என்று மூன்று ஊர்கள் இவ்வழியில் இருப்பதை நில வரைபடத்தின் துணையோடு கள ஆய்வு செய்து அறிந்து, அவற்றுள் நல்லாமூரே பாணன் தரவுகளுக்கு ஏற்ப அமைந்திருப்பதை ஒப்பிட்டு நோக்கி, மருத வளம் நிறைந்த அவ்வூரே வேலூருக்கும் கிடங்கிலுக்கும் இடையில் அமைந்திருந்த சங்க கால ஆமூர் என்பதைத் தெரிவுசெய்யும் இராசமாணிக்கனாரின் ஆய்வுநுட்பம் பின்பற்றத்தக்கது.

மாவிலங்கையைக் கண்டறியக் கல்வெட்டுகள், கோயில்கள், உள்ளூரார் தகவல்கள் இவற்றுடன் பரப்பாய்வும் அகழாய்வும் பயன்பட்டுள்ளன. திண்டிவனத்துக்கு வடக்கில் உள்ள மேல் மாவிலங்கை, கீழ் மாவிலங்கை எனும் இருஊர்களையும் நேரில் சென்று ஆய்வு செய்தமை பற்றிக் குறிப்பிடுமிடத்து, 'மேல் மாவிலங்கை என்பது ஒரே ஒரு தெருவையுடைய சிற்றூர். கீழ் மாவிலங்கை ஐந்து அல்லது ஆறு தெருக்களையுடைய சிற்றூர். இவ்விரண்டு சிற்றூர்களுக்கும் இடையில் சிறு பாறைகள் சிலவும் புன்செய் நிலமும் ஐயனார் தாங்கல் என்னும் சிறிய ஏரியும் இருக்கின்றன. நான் 2.9.1962இல் இவ்விடங்களை நேரில் பார்வையிட்டேன்' எனக் கூறும் இராசமாணிக்கனார், அப்பகுதியில் பண்டைக்கால மட்பாண்டச் சிதைவுகள் காணப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளார். அங்கிருந்த செங்கல் அடிப்படை ஒன்றை அகழ்ந்து ஆராய்ந்தவர், 'திரு. வாசுதேவரெட்டியார் உதவி கொண்டு செங்கல் அடிப்படை இருந்த இடம் தோண்டப்பட்டது. சுவரின் அடிப்படையாய்ப் போடப்பட்டிருந்த கருங்கற்களே கிடைத்தன. அக்கருங்கற்களின் மீது சுடப்பட்ட செங்கற்கள் வைத்துச் சுவர் அமைக்கப்பட்டிருந்தது' என்று எழுதுகிறார்.

அகழியும் மதிலும் கொண்டிருந்த நகரம் மாவிலங்கை என்னும் சிறுபாணன் கூற்றிற்கேற்ப அப்பகுதியில் பெரிய அளவிலான அகழி

இருந்திருத்தல் வேண்டும் என்றும் கூறும் இவ்வறிஞர், அதற்கேற்ப அமைந்திருந்த பண்டைக்காலச் செங்கல் அடிப்படைச் சுவர், மேட்டுப்பகுதியில் இருந்த ஏரிகள், பள்ளமான விளைநிலங்கள் ஆகியவற்றையும் பரப்பாய்வில் கிடைத்த மட்பாண்டச் சிதைவுகளையும் சான்றுகளாக முன் நிறுத்துவதுடன், 'மாவிலங்கையே ஓயமானாட்டின் வடவெல்லையில் அமைந்த முதல் நகரமாய் விளங்கியது அதனாலேதான் அஃது ஆழ்ந்து அகன்ற அகழியையும் உயர்ந்த மதிலையும் பெற்றுப் பாதுகாப்பு மிக்கு விளங்கியது போலும்' என்றும் முடிவுரைக்கிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பாடல் வடிவில் பதிவு செய்யப்பட்ட வழித்தடத்தையும் ஊரமைவுகளையும் 'இலக்கியத் தரவுகள்' என்று மட்டுமே ஏற்றுக்கொண்ட ஆய்வுலகிற்கு, அவை வரலாற்று உண்மைகள்தான் என்ற தெளிவை உண்டாக்கத் தம்மால் இயன்ற அறிவியல் முறைகள் அனைத்தையும் கைக்கொண்டு உழைத்திருக்கும் இராசமாணிக்கனாரின் திறம் குறிப்பிடத்தக்கது அவர் வாழ்ந்த காலத்திலும் அதற்கு முன்பும் தமிழிலக்கியத் தரவுகளை ஆய்வுசெய்த அறிஞர் பெருமக்கள் எவரும் மேற்கொள்ளாத ஆய்வு அணுகுமுறைகளை இவர் மேற்கொண்டிருந்தார் கல்வெட்டாய்வு, களஆய்வு, நிலப் பரப்பாய்வு, அகழாய்வு, ஊர்ப் பெரியவர்களிடம் நேர்முகம், சொல் வழக்குகள் என அனைத்து ஆய்வுக் கருவிகளின் துணைகொண்டும் இலக்கியத்தரவுகளை ஆராய்ந்து, முந்தைய அறிஞர்களின் கருத்துக்களோடு தாம் கண்டறிந்த முடிவுகளை ஒப்புநிறுத்தி, தருக்கரீதியாக உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கும் இராசமாணிக்கனாரின் ஆய்வுக்கோணம் அவர் உழைப்பில் விளைந்த புதிய அநுபவவீச்சு எனலாம்

இந்த அணுகுமுறையின் அடிப்படையிலேயே பத்துப்பாட்டின் முதன்மைத் தரவுகள் அனைத்தையும் ஆராய்ந்துள்ள இவர், இப்பாடல் இலக்கியங்களின் தலைவர்தம் காலங்களைக் கண்டறியவும் பாடல்களில் இடம்பெற்றுள்ள சங்க கால நாடுகள், ஊர்கள் ஆகியவற்றை அடையாளப்படுத்தவும் பெரிதும் முயன்றுள்ளார் பாலாறு, வேகவதி நதிகளின் சங்க காலப் போக்கிற்கும் அவற்றின் இன்றையப் பாய்ச்சலுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளைத் தம் நூலின் அடிக்குறிப்புகளில் தெளிவுற விவரித்துள்ளார் கால ஓட்டத்தில் இவ்வாறுகளின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை உறுதிப்படுத்தவும் பழைய போக்கினைக்

கண்டறியவும் கள ஆய்வு, உள்ளூர்ப் பெரியவர்களின் தகவல்கள், நிலப் பரப்பாய்வுத் தடயங்கள் முதலியன அவருக்குப் பெருமளவு உதவியிருக்கின்றன.

கோயில் சார்ந்த புராணங்கள்கூட அவருடைய முடிவிற்குத் துணைநின்றமையை, 'வேகவதியாறு மேலே சொல்லப்பட்ட தனது பழைய போக்கில், மேட்டுத் தெருவுக்கும் விளக்கொளிப்பெருமாள் கோவில் தெருவுக்கும் இடையில் கிழக்கு நோக்கிப் பாய்ந்தபோது யதோத்தகாரி கோவிலுக்கு எதிரில் வந்திருத்தல் வேண்டும். அதன் போக்கைத் தடுக்கவே யதோத்தகாரி கோவில் உள்ள இடத்தில் பெருமாள் பள்ளி கொண்டு, ஆற்றை நோக்கித் தமது வலக்கையை உயர்த்தினார் என்பது சொல்லப்படுகிறது. அக்குறிப்புக்கு ஏற்றபடி வேகவதியாற்று வடிவத்தில் வந்த கலைமகள் தனது போக்கை மாற்றிக் கொண்டாள் என்று கூறும் புராணச் செய்திக்கும் யதோத்தகாரி கோவிலுக்கு அருகில் வேகவதியின் போக்குக் கிழக்கில் தடைபட்டுத் தென்கிழக்கில் திரும்பியிருத்தல் வேண்டும் என்று கருதுவதற்கும் பொருத்தமுள்ளது' என்று எடுத்துரைக்கிறார்.

இலக்கியத் தரவுகளை வரலாற்று உண்மைகள் என்று தகுதி சான்ற ஆய்வுகளின் மூலம் நிறுவியிருக்கும் இராசமாணிக்கனார், எங்கெங்கு அத்தரவுகள் வரலாற்று வட்டத்திற்குள் வரவில்லையோ, அங்கெல்லாம் உள்ளது உள்ளவாறு தாம் கண்டுணர்ந்தவற்றைப் பகிர்ந்து கொண்டுள்ளார் பொருநராற்றுப்படையை நன்கு ஆராய்ந்த நிலையில் அதன் ஆசிரியர் பொருநனுக்கு முறைப்படி வழிகூறவில்லை எனக் கூறும் இவர், 'புதிய பொருநன் எது வழியாகச் சென்று கரிகாலனைக் காண வேண்டும் என்று பரிசு பெற்ற பொருநன் விரும்பினான் என்பதை இப்பாடல் கொண்டு கூறக்கூடவில்லை' என்று வெளிப் படையாகவே தெரிவித்துள்ளார். அது போலவே, திருமுருகாற்றுப் படை சுட்டும் பழமுதிர்சோலை மலை பல்லோரும் கருதுமாறு போல மதுரையிலுள்ள அழகர்மலையைக் குறிக்கவில்லை என்பதை இலக்கியம், கல்வெட்டுக் கொண்டு நிறுவியுள்ள இவர், 'பழமுதிர் சோலை மலை' என ஒரு மலை முருகனுக்கு உரியது என்பதற்கோ, அம்மலை அழகர்மலையே என்பதற்கோ, அங்கு முருகன் கோயில் இருந்தது என்பதற்கோ சங்க நூல்களிலும் இடைக்காலக் கல்வெட்டுகளிலும் சான்று இல்லை என்று தெளிவுபடக் கூறியுள்ளார். இவருடைய ஆய்வுநேர்மைக்கு இவை சிறந்த எடுத்துக்காட்டுகளாய் மிளிர்கின்றன

ஓர் இலக்கியத்தை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆராயும் போது காலநிரலான அடையாளப்படுத்தல்கள் முதன்மை பெற்றாலும் அவ்விலக்கியக் கால மனிதர்களின் வாழ்க்கைப் பதிவுகளையும் உரிய முறையில் வெளிப்படுத்துவதே முறையான இலக்கிய ஆய்வாக அமைய முடியும் இராசமாணிக்கனாரின் பத்துப்பாட்டு ஆராய்ச்சி அத்தகு ஆய்விற்கு உரைகல்லாக விளங்குகிறது. ஓர் இலக்கியம் வாழ்க்கை சார்ந்த பதிவுகளைக் கொண்டிலங்குவதே என்றாலும் அப்பதிவுகளைப் புலவர்தம் மொழிவுகளிலிருந்து தேர்ந்து தெரியப்படுத்துவது அனைத்து ஆய்வாளர்க்கும் இயலக்கூடிய செயலன்று ஆழ்ந்தகன்ற இலக்கிய நுகர்வும் மனித இன வரலாறு பற்றிய அடிப்படைத் தெளிவும் எதைத் தேட வேண்டும் என்ற புரிதலும் இருந்தாலன்றி இலக்கிய அடிகளுக்குள் பாடியவர்கள் பொதிந்து வைத்திருக்கும் நுட்பமான தரவுகளைத் திரட்டித் தருதல் என்பது இயலுவதன்று.

சங்க கால மக்களின் வாழ்விடங்கள், அவர்தம் வாழ்க்கை, தொழில்கள், அவர்கள் பயின்றிருந்த கலைகள், அவர்தம் விளையாட்டுக்கள், சமயம், அவர்களைச் சுற்றியிருந்த உயிரினங்கள், நீர்நிலைகள் எனப் பத்துப்பாட்டுப் புலப்படுத்தக் கூடிய அனைத்துத் தரவுகளையும் நுட்பமுடன் நோக்கிப் பதிவு செய்திருப்பதுடன், சமகால இலக்கியங்கள், பிற்கால இலக்கியங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் அத்தரவுகள் அல்லது அவற்றுடன் தொடர்புடைய செய்திகள் பயின்று வந்திருக்கும் பாங்கு சுட்டி, அவை காலந்தோறும் வழங்கி வந்த நிலையை உறுதி செய்துள்ளார் இராசமாணிக்கனார். 'அரிய சொற்களும் வடமொழிச் சொற்களும்' என்ற தலைப்பின் கீழ்ப் பத்துப்பாட்டிலக்கியங்களில் பயின்று வந்துள்ள சொற்களை அடைவு செய்து அவற்றிற்குப் பொருள் விளக்கம் தந்து அவை தொடர்பான பல்வேறு காலகட்டச் செய்திகளையும் அடிக்குறிப்புகளில் தந்துள்ளமை மிகுந்த பயன்தரும் உத்தியாகும் தமிழ்நாட்டில் வேறு எந்த இலக்கியத்திற்கும் இத்தனை விரிவான, வளமான, பரந்துபட்ட எல்லைகளைத் தழுவிய ஆய்வு நிகழ்ந்துள்ளாற் போல் தெரியவில்லை.

## தமிழ்மொழி இலக்கிய வரலாறு

இராசமாணிக்கனாரின், 'தமிழ்மொழி இலக்கிய வரலாறு' அவருடைய இலக்கிய ஆய்வுத்திறன் காட்டும் மற்றொரு சிறந்த படைப்பாகும் 'பெரும்பாலான தமிழ் மக்களுக்கு ஒவ்வொரு தமிழ்

இலக்கியத்தையும் படித்துச் செய்திகளை அறியப் போதிய நேரமோ வாய்ப்போ இல்லை. ஆதலின் ஒவ்வொரு நூலைப்பற்றியும் சுருங்கிய முறையில் செய்திகளை அறிய இலக்கிய வரலாற்று நூல் துணைபுரிய வேண்டும் - அந்நிலையிற்றான் அவர்கள் ஒவ்வொரு காலத் தமிழர் நாகரிகத்தையும் மொழி வளர்ச்சியினையும் மொழி மாறுதல்களையும் அறிதல் கூடும் என்னும் எண்ணம் உந்தியதால், ஒவ்வொரு நூலைப் பற்றியும் தேவையான செய்திகளை மட்டும் தருதல் நன்றெனத் துணிந்தேன்' என்று நூலின் முகவுரையில் கூறும் இராசமாணிக்கனார். தொடர்ந்து இலக்கிய வரலாறு குறித்த தம் எண்ணங்களை வெளிப் படுத்தியுள்ளார்

இந்நூலில் தமிழ் மொழியின் தோற்றம், வளர்ச்சி - இலக்கியம் - இலக்கியத் தோற்றம் என்பவை முன்னுரைச் செய்திகளாகத் தரப்பட்டுள்ளன. அடுத்துச் சங்க கால இலக்கியத்திற்கு இந்திய வரலாறும் இலங்கை வரலாறும் அயல் நாட்டார் குறிப்புகளும் எந்த அளவு துணை செய்கின்றன என்பது விளக்கப்பட்டுள்ளது. அடுத்து முச்சங்கங்கள் வரலாறு - மதுரையில் தமிழ்ச் சங்கம் என்பவை பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை அடுத்துத் தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களின் காலமும் நூற் செய்திகளும் பிறவும் விளக்கப்பட்டுள்ளன

இலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு நூலின் காலத்தையும் ஆராய்ந்து முடிவுகட்டுதல் இன்றியமையாதது ஆயின், இக்கால ஆராய்ச்சி மட்டும் இலக்கிய வரலாறு ஆகாது வரலாற்றில் பல காலங்கள் உண்டு ஒரு கால இலக்கியத்திற்கும் அடுத்த கால இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு விளக்கப்படுதல் வேண்டும் ஒரு காலத்து இலக்கிய நூல்கள் எவ்வெச் சூழ்நிலையில் உருவாகியுள்ளன என்பதும் விளக்கப்படல் வேண்டும். ஒரு காலத்துக்கு உரிய நூல்களை அக்கால அரசியல், பொருளாதாரம், சமூகம் முதலியவை எங்ஙனம் வளர்த்தன என்னும் உண்மையும் விளக்கப்படல் வேண்டும்.

காலக்கணக்கு மட்டும் கூறுவது நன்றன்று. ஒரு மொழி பேசிய மக்களினம், அவ்வினத்துப் பிரிவுகள், அவ்வினத்தவர் தொழில்கள், வாழ்க்கை முறை இவற்றை ஆராய்ந்து சமூக மாறுதல்களுக்குரிய நிலைமைகளை விளக்கி, வரலாற்றுப் பின்னணியில் இலக்கிய வளர்ச்சியை விளக்குதல் வேண்டும். மனிதனது வாழ்க்கையில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன அவ்வாறே இலக்கிய உலகத்திலும் பல

மாறுதல்கள் நிகழ்கின்றன. மாறுதல்கள் இருப்பினும் ஒருமைப்பாடும் காணப்படும் மணிகள் பலநிறத்தனவாயினும் அவை கோக்கப் பெறும் நூல் ஒன்றாயிருப்பதுபோல வேறுபாடுகளுக்கிடையே ஒருமைப்பாடு இருக்கும் இலக்கிய உலகிலும் அவ்வொருமைப்பாடு உண்டு. அதனைச் சுட்டிக் காட்டுவது இலக்கிய வரலாற்றாசிரியரது கடமையாகும் இராசமாணிக்கனாரின் தமிழ்மொழி இலக்கிய வரலாறு இதற்கேற்பவே அமைந்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

3 5 1964இல் இந்நூலிற்கான மதிப்புரையை வெளியிட்ட 'இந்து' நாளிதழ், 'தாம் எடுத்துக்கொண்ட பொருள் சம்பந்தமாகக் கிடைக்கக்கூடிய எல்லா இலக்கியங்களையும் இவர் பயன்படுத்திக் கொண்டுள்ளார் விருப்பு வெறுப்பற்ற நிலையில் சங்க காலத்தைச் சார்ந்த பல்வேறு நூல்களின் காலங்களை இவர் நிர்ணயம் செய்வது பொதுவாக எடுத்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது. சங்க நூல்கள் பற்றி ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டிய எல்லா விவரங்களையும் உள்ளடக்கியதாக இந்த ஆய்வு விளங்குகிறது ஆராய்ச்சி அறிஞர்களுக்கு இது மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை' என்று குறிப்பிட்டுள்ளது.

இராசமாணிக்கனாரின் தமிழிலக்கிய ஆளுமையையும் ஆய்வுப் புலமையையும் மணிமேகலை(1940), ஆராய்ச்சிக் கட்டுரைகள்(1947), திருவள்ளுவர் காலம் யாது? (1954), கம்பர் யார்? (1955), தமிழர் திருமணத்தில் தாலி(1955), இலக்கிய அறிமுகம் (1955), இலக்கிய அமுதம்(1958) எனும் அவருடைய பல்வேறு நூல்கள் வெளிப் படுத்துமாறு அமைந்துள்ளன இவற்றுள் தமிழர் திருமணத்தில் தாலி இராசமாணிக்கனாருக்கும் தமிழரசுக் கட்சித் தலைவராக இருந்த ம பொ சிவஞானம் அவர்களுக்கும் இடையில் எழுந்த வாதத்தின் விளைவாக 119 பக்க அளவில் எழுதி வெளியிடப்பட்ட நூலாகும்.

## தமிழர் திருமணத்தில் தாலி

இந்நூலின் முகவுரையில், 'யான் 1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில், 'தென்னிந்திய வரலாறும் தமிழிலக்கியமும்' என்ற பொருள்பற்றி ஆறு சொற்பொழிவுகள் செய்தேன் அப்போது வளரும் சமுதாயத்தில் காலப் போக்கில் பல மாற்றங்கள் ஏற்படுதல் இயல்பு என்பதைக் கூறுமிடத்து, ''சங்க கால முதல் கி.பி 10ஆம் நூற்றாண்டுவரையில் தமிழர் திருமணத்தில் தாலி

கட்டும் வழக்கம் இருந்தமைக்குச் சான்றில்லை என்றும் பின்னரே மங்கல நாணும் தாலியும் வந்தன என்றும் கருதத்தக்க நிலையில் இலக்கியச் சான்றுகள் உண்டு'' என்பதைக் குறிப்பிட்டேன். இச்செய்தி 'தினத்தந்தியில்' வெளிவந்தது. தமிழரசுக் கட்சித் தலைவரும் என் மதிப்பிற்குரிய நண்பருமாகிய உயர்திருவாளர் ம.பொ.சிவஞான கிராமணியார் அவர்கள் யான் கூறிய செய்தி 'உண்மைக்கு மாறானது' என்று 'தினத்தந்தி' தீபாவளி மலரில் ஒரு கட்டுரை எழுதினார்கள்.

அவர்களது கட்டுரையை மறுத்துத் 'தென்றல்' ஆசிரியரும் என் மதிப்பிற்குரிய நண்பருமான உயர்திருவாளர் கண்ணதாசன் அவர்கள் மறுப்புக் கட்டுரை எழுதினார்கள்.' இவ்விரு கட்டுரைகளையும் படித்த நிலையில், 'மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் தாலி பற்றி யான் பேசியது என்ன என்பதை அறியத் தமிழ் மக்கள் பலர் ஆவலுற்று எனக்குப் பல ஊர்களிலிருந்து கடிதங்கள் எழுதி வந்தனர்', என்று குறிப்பிடும் இராசமாணிக்கனார், மதுரையிலிருந்து அப்போது வெளியான 'தமிழ் நாடு' என்னும் செய்தித்தாளில் இப்பொருள் பற்றித் தொடர்ச்சியாகத் தாம் ஒன்பது கட்டுரைகள் எழுதியதாகக் கூறியுள்ளார். இவ்வொன்பது கட்ரைகளும் 'தமிழ்நாடு' ஞாயிறு மலரில் வெளியாயின இக்கட்டுரைத் தொடருக்குப் பதிலளிக்குமாறு ம பொ.சிவஞானம் 'தினத்தந்தி', 'செங்கோல்' ஏடுகள் வாயிலாகத் தம் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இவ்விரண்டு அறிஞர்களின் கட்டுரைகளும் இலக்கிய உலகில் கடுமையான விவாதத்தை எழுப்பின பெரும் புலவர்கள் பலர் இதில் பங்குகொண்டனர் பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை, ம பொ சிவ ஞானத்தின் கருத்தை ஆதரித்துப் பேச, கவிஞர் கண்ணதாசன் தாம் நடத்தி வந்த 'தென்றல்' வார இதழில் இராசமாணிக்கனாரை ஆதரித்து எழுதினார். இருபுறத்தும் தமிழார்வலர்கள் தங்கள் கருத்துக்களையும் கண்ணோட்டங்களையும் பதிவுசெய்தனர். இதனால், இது தமிழ்நாடு தழுவிய ஓர் ஆய்வுக் கருத்தரங்கமாக அமைந்தது இங்ஙனம் மக்கள் அனைவரும் மனமுவந்து கலந்துகொண்ட முதல் கருத்துப் போர் இது எனலாம் இதனை 'மக்கள் ஆய்வுக் கருத்தரங்கம்' (People's Seminar) என்று கூறல் பெரிதும் ஏற்புடைத்து என்ற கருத்தும் அப்பொழுது வெளியிடப்பெற்றது. இது பற்றிக் குறிப்பிடும்போது, 'இது போன்ற ஒரு சர்ச்சை இதற்கு முன்பு எழுந்ததாக நினைவில்லை' என்று குறிப்பிடுகிறார் ம பொ.சிவஞானம் இராசமாணிக்கனாருக்கும் ம பொ சிவஞானத்துக்கும் இடையில் எழுந்த கருத்துப் ,பரி

மாற்றங்களின் விளைவாக வெளிப்பட்டதே ஆழ்ந்த ஆய்வின் மலர்வான 'தமிழர் திருமணத்தில் தாலி' எனும் நூல்.

இந்நூலின் முகவுரையில், 'இன்றுள்ள தமிழருள் பல வகுப்பாரிடம் திருமணத்தின்போது தாலி கட்டும் வழக்கம் இருந்து வருகிறது. இப்பழக்கம் இல்லையெனில், அப்பண்டை காலத்தில் மணவணியாகக் கருதப்பட்டு வந்தது யாது? எப்பொழுது மங்கல நாண் வந்தது? எப்பொழுது மங்கல நாணில் தாலி இடம்பெற்றது? மலையாளத்தில் உள்ள தாலிகட்டுக் கல்யாணம் என்பதன் கருத்து யாது? பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிய, தமிழர் வகுப்புக்களிலும் ஏனைய திராவிட வகுப்புக்களிலும் தாலிகட்டும் பழக்கம் இருந்துவந்ததா? தாலியென்னும் சொல்லுக்குப் பொருள் யாது? என்பன போன்ற பல கேள்விகட்கு இலக்கியம், இலக்கணம், வழக்காறு, வரலாறு, ஆராய்ச்சியாளர் இதுபற்றிக் கூறும் சான்றுகள் முதலியவற்றைக் கொண்டு விடையளிப்பதே இவ்வாராய்ச்சிநூலின் நோக்கமாகும்' என்று புலப்படுத்தியுள்ளார் பேராசிரியர்

'எதிலும் உண்மை காணவேண்டும். கண்ட உண்மையை உள்ளவாறு உரைக்கவேண்டும் என்பதே எனது குறிக்கோள் இக்குறிக் கோளைத் துணையாகக் கொண்டு, தமிழர் சமுதாய வரலாற்றை மேற்சொல்லப்பட்ட இலக்கியம் முதலிய சான்றுகளைக் கொண்டு விரிந்த நூலாக எழுதவேண்டும் என்பது எனது விருப்பம் அவ்விருப்பத்தைத் தொடங்குவிக்கும் முறையில் இத்துறையில் எனக்கு ஊக்கமூட்டியவர் அறிஞர் சிவஞான கிராமணியார் ஆவர்' என்று தம் குறிக்கோளையும் அக்குறிக்கோள் நிறைவேறக் காரணமாக இருந்தவரையும் தெளிவாகச் சுட்டியிருப்பதன் வாயிலாக, மாறுபட்ட கருத்துக்கள் இருந்த போதும், ஆய்வாளர்களுக்கிடையில், அக்காலத்தே நிலவிய நட்புறவையும் ஒருவரையொருவர் அவர்கள் மதித்துப் போற்றிய பண்பாட்டையும் இவர் பதிவுசெய்துள்ளார்.

தம்முடைய 'தாலி' பற்றிய நூல் தாலி கட்டும் வழக்கத்திற்கு எதிரானதன்று என்பதை, 'பண்டை இலக்கியங்களில் மங்கல நாணோ, தாலியோ தமிழர் திருமணத்தின்போது கட்டப்பட்டதாகத் தெரிய வில்லை ஆதலால், இப்போது கட்டவேண்டா என்று யான் கூறவில்லை; இதுகாறும் கட்டிவந்தது தவறென்றும் சொல்லவில்லை தாலி பற்றிய வரலாற்றைத் தமிழ் மக்கள் அறியவேண்டும் என்னும் ஆர்வம் ஒன்றே இதனை எழுதத் தூண்டியது இலக்கியங் கொண்டு காணத்தகும் இத்தகு பழக்க வழக்கங்களும் சடங்குகளும் பிறவும்

எத்தகைய கட்சிநோக்கமும் இன்றி, நடுவுநிலையிலிருந்து ஆராய்ச்சி செய்யப்படுதல் வேண்டும் என்பதே எனது தாழ்மையான கருத்து' என்னும் வேண்டுகோள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ள அப்பெருந்தகை எத்தகு ஆய்வுநெறி நின்று இந்நூலை எழுதியுள்ளார் என்பது கருதத்தக்கது.

இந்நூலில் 'அறிவியல் ஆய்வுமுறை' பற்றிக் குறிப்பிடும்போது, 'முடிவை முன்னரே மனத்தில் நிறுத்திக்கொண்டு, அதற்கேற்ப மூலங்களுக்கு உரை கூறுதலோ, உரையாசிரியர் துணையை நாடுதலோ, அல்லது 'இதுதான் பொருள்; வேறில்லை' என்று அழிவழக்குப் பேசுதலோ சான்றோர் மதிக்கும் சாத்திரிய ஆராய்ச்சி(Scientific Research)ஆகாது' என்று அவர் கூறியிருப்பதும் எக்காலத்தும் யாரும் ஆய்வு அணுகுமுறையாகக் கொள்ளத்தக்க நெறியாக அமைந்துள்ளது.

அகநானூற்றுத் திருமணக் காட்சிகளில் தொடங்கித் திருமண நிகழ்வு இடம்பெற்றுள்ள அனைத்துத் தமிழ் இலக்கியப் பாடல்களையும் காலநிரல் வழுவாது முன்வைத்து, அவற்றில் கூறப்பெற்றுள்ள மணவிழா நிகழ்வுகளை ஒவ்வொன்றாகச் சுட்டி மங்கல அணி, அருங்கல அணி, ஈகை அரிய இழை, சின்மணித்தாலி, மாணிக்கத்தாலி எனப் பாடல்களில் பயின்று வரும் 'தாலி' எனப் பொருள் கொள்ளப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் பல்வேறு இலக்கியச் சுட்டல்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து, அச்சொற்கள் மங்கல நாணைக் குறிக்கவில்லை என மெய்ப்பித்து கி.பி. பத்தாம் நூற்றாண்டுவரை, தமிழர் திருமணத்தின்போது மணமகன், மணமகள் கழுத்தில் மங்கல நாணோ அல்லது தாலி கோத்த மங்கல நாணோ கட்டும் வழக்கம் இருந்ததில்லை என்பதை உறுதிபடக் கூறியுள்ளார்.

அத்துடன் நில்லாது, மலையாளத்தில் தாலிகட்டுக் கல்யாணம் பற்றியும் தென்னிந்தியக் குடிகளில் திராவிட இனத்தவராகக் கொள்ளத்தக்கவர் திருமணங்களில் இப்பழக்கம் இல்லாமை பற்றியும் மிக விரிவான அளவில் ஆராய்ந்து தாம் கண்டறிந்த உண்மைகளை, 'கி.பி. 11ஆம் நூற்றாண்டில் தோன்றிய கந்தபுராண காலத்திலிருந்து தமிழர் திருமணத்தில் மங்கல நாண் கட்டுதலும் தாலிகோத்த மங்கல நாண் கட்டுதலும் வழக்கில் தோன்றியிருத்தல் வேண்டும் என்பது கந்தபுராணம், பெரியபுராணம், தக்கயாகப்பரணி, கம்பராமாயணம், நம்பி திருவிளையாடல், பரஞ்சோதி திருவிளையாடல் இவற்றால் அறியப்படுகிறது.

கிபி 15ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 20ஆம் நூற்றாண்டு வரை மலையாள நாட்டில் வழக்கில் இருந்து வந்த தாலிகட்டுக் கல்யாணத்தில் (போலித் திருமணத்தில்) மட்டுமே பருவமடையாத பெண்ணுக்குத் தாலி கட்டப்பட்டது; ஆனால் பலவகைப்பட்ட உண்மைத் திருமணங்களில் தாலி கட்டும் வழக்கமே இல்லை; ஐம்பது ஆண்டுகட்டு முன்வரை அங்குத் தாய்மைக்குத் தகுதியுடையவள் என்பதைக் குறிக்கவே பெண்ணுக்குத் தாலி கட்டப்பட்டு வந்தது என்பதும் ஒருவன் மனைவி என்பதைக் குறிப்பதற்கு அது கட்டப்படவில்லை என்பதும் அறியத்தக்கன.

நம்மிடம் இன்று வழக்கில் இல்லாத எண்ணிறந்த அருந்தமிழ்ச் சொற்களை வழக்கிலே பெற்றுள்ள மலையாளிகளிடம் ஒருவன் ஒருத்தியோடு வாழ இசையும் உண்மைத் திருமணத்தில் தாலிகட்டும் வழக்கம் இல்லை என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. திராவிட இனத்தைச் சேர்ந்த தொதவர், கோட்டர், கொண்டர், கோயிகள் முதலியோரிடத்தும் இன்றளவும் தாலி கட்டும் வழக்கம இல்லையென்பது நினைவில் இருத்தத்தக்கது மதுரை மாவட்டத்தி லிருந்து சில நூறறாண்டுகட்டு முன் அயலார் படையெடுப்பின் காரணமாகப் பல மலைப்பகுதிகளிலும் குடியேறி வாழும் முதுவரிடமும் தாலி கட்டும் வழக்கம் இல்லை; காதணியும் காப்புமே மணவணிகள் என்பது குறிப்பிடத்தக்கது

ஊராளிகள் போன்ற ஒரே வகுப்பினரிடம் இடத்திற்கேற்பத் தாலிகட்டுதலும் கட்டாமையும் இருத்தலை நோக்க, தாலிகட்டும் வழக்கம் அம்மரபினரிடம் பண்டுதொட்டே வழக்கில் இருந்ததில்லை என்பது நன்கு விளங்கும். கணவன் இறந்ததும், உப்பிலியர், வலையர் இனத்தாருள் பலர் தாலியை நீக்காதிருத்தலும் காண, தாலி பற்றிய சிறப்பு (வாழ்வரசிக்குரிய அடையாளம்) கருதப்படவில்லை என்பது தெளிவு ஒரே வகுப்பினரிடையே நடைபெறும் திருமணங்களில் ஒரு சாரார் கயிறு மட்டும் கட்டுதலும் சிலர் பவழம் முதலிய மணிகளைக் கோத்துக் கட்டுதலும் மேலும் சிலர் இக்காலத் தாலி கட்டுதலும் நோக்க, இந்தத் தாலி கட்டு முறையில் குறிப்பிட்ட ஒரு நியதி முதலில் தோன்ற வில்லை என்பதும், அவரவர் இடத்திற்கு அல்லது பழக்கவழக்கத்திற்கு ஏற்ப இம்முறையை மேற்கொண்டனர் என்பதும், இவையே இவற்றின் பழைமையை வற்புறுத்தவில்லை என்பதும் தெளிவாகும்

மணமகள் கழுத்தில் அவளது தந்தை, நாத்தி அல்லது அவளைச் சேர்ந்த வேறொருத்தி அல்லது மணமகன் அல்லது அவன் பிரதிநிதி

(பெண் அல்லது ஆண்), புரோகிதன், குடும்பத் தலைவன் அல்லது இனத்தலைவன் தாலி கட்டிவரும் வழக்கம் இருத்தலை நோக்க, இச்சடங்கு இச்சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு முறைபற்றி உண்டானதன்று என்பதும், புதியதாகத் தோன்றிய ஒன்று என்பதும் தெளிவு' என்று பதிவுசெய்துள்ளார்.

இந்நூலில் இறுதிப்பகுதியாக அமைந்துள்ள 'தாலி' பற்றிய சொல்லாராய்ச்சியும் குறிப்பிடத்தக்கதாகும். 'ஞாய்'-'தாய்' எனத் திரிவது போலவே, 'ஞால்' என்பது 'தால்' எனத் திரிதல் கூடும். உலகத்தைக் குறிக்கும் 'ஞாலம்' என்ற சொல் 'தாலம்' எனத் திரிந்து பிற்கால இலக்கியங்களில் இடம்பெற்றிருத்தல் காண்கின்றோம் ஞாலம் என்ற சொல்லின் பகுதி 'ஞால்' என்பதாகும் ஞால் - தொங்குதல் என்று பொருள்படும் 'ஞால்' என்பதன் திரிபாகிய 'தால்' என்பதும் தொங்குதல் என்ற அப்பொருளையே உணர்த்துவதாக வேண்டும். தால்+இ=தாலி- தொங்குதலையுடையது

எனவே, 'தாலி' என்பது 'தொங்கும் நகை' என்னும் ஒன்றைக் குறிக்குமேயன்றி, அவ்வணி கோக்கப்பெற்ற நூலையோ அல்லது சரட்டையோ அல்லது தனியொரு பொருளையோ குறிக்காது தால் என்பது தொங்கும் ஒரு பொருள். தொங்கும் அப்பொருளின் வடிவிற் கேற்ப அந்தத் தாலி அடைமொழி சேர்த்து ஐம்படைத் தாலி என்பது போல வழங்கப்படும் ஆனால், பிற்காலத்தில் தாலி என்பது அடை மொழியின்றியே மங்கல நாணில் கோக்கப்பெற்றுத் தொங்கும் அணிவிசேடத்தைக் காரண இடுகுறியாய் நின்று குறிப்பதாயிற்று. கழுத்து நாணில் தொங்கவிடும் அணிகள் பலவற்றிற்கும் தாலி (தொங்குவது) என்னும் காரணப் பெயர் உரியதாயினும், இந்நாளில் அபபெயர் (தாலி) மங்கல நாணில் கோத்துத் தொங்கவிடப்படும் மண வணியையே குறிக்கலாயிற்று என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.

இராசமாணிக்கனாரின், 'தாலி' பற்றிய இவ்வாய்வு நூல் தமிழிலக்கிய ஆய்வு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றதோடு, தமிழர் உள்ளங்களிலும் அவருககுத் தனித்ததோர் இடம் பெற்றுத்தந்தது 'பேராசிரியரின் ஆய்வின் முடிமணி 'தமிழர் திரு மணத்தில் தாலி' என்ற நூலாகும்' என்பார் முனைவர் மெ.சுந்தரம் 'பேராசிரியரும் சிலம்புச் செல்வரும் 'தாலி' என்ற தலைப்பில் அங்கும் இங்கும் நின்று சொல்லம்பு தொடுத்து, சோர்விலாது போராடிய நிகழ்ச்சி தமிழ் மண்ணில் தனிப்புகழ் பெற்றதாகும்' என்று பெருமையோடு புகல்வார் முனைவர் ஏ என் பெருமாள்

## இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை

இராசமாணிக்கனாரின், 'இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி' என்னும் நூல் அவருடைய இலக்கிய ஆய்வுப் பணிகளில் குறிப்பிடத்தக்கதாகும்.1966 பிப்ரவரித் திங்கள் 24, 25, 26 ஆகிய மூன்று நாட்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய கல்கி நினைவுச் சொற்பொழிவுகளே இந்நூலாக வடிவம் பெற்றன இதற்கு அணிந்துரை வழங்கியுள்ள திரு.நெ து சுந்தரவடிவேலு, 'இந்நூல் இலக்கியக் கருவூலமாக, தகவல் களஞ்சியமாக விளங்குகிறது. இந்நூலில் காணும் செய்திகள், தமிழ் ஆய்வாளர்களுக்கு மட்டுமின்றி, தமிழ் வரலாற்றினை ஆய்வோர்க்கும் தூண்டுகோல்களாக அமையும்' என்று குறிப்பிட்டுள்ளமையும், 'பள்ளிக்கூடத் தமிழாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய இராசமாணிக்கனார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆசானாகுமளவு உயர்ந்தார். அவரை அந்நிலைக்கு உயர்த்தியவை எவை? அவரது தணியாத படிப்பார்வம்; இடையறாத முயற்சி; ஓயாத ஆராய்ச்சி ஆகியவைதான்' என்று இவரைச் சரியாக மதிப்பிட்டுள்ளமையும் கருதற்பாலன.

இந்நூலின் முதற்பகுதி உரைநடையை வரையறுத்து, அதற்கு வேண்டும் சிறப்பியல்புகளைப் புலப்படுத்தித் தொல்காப்பியர் காலந்தொட்டு நூற்றாண்டு வாரியாக உரைநடை பற்றிய தரவுகளைத் தொகுத்துத் தந்துள்ளது இத்தொகுப்பில் கிரேக்க, இலத்தீன், ஆங்கில, வடமொழி உரைநடை நூல்களும் ஒப்பீட்டு நோக்கில் ஆராயப்பட்டுள்ளன. நூற்றாண்டு வாரியான உரைநடையில் பல கால எல்லைகளைச் சேர்ந்த கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளமை இந்நூலின் தனித் தன்மையாக மிளிர்கிறது

இரண்டாம் பகுதி, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை வரலாறு பேசுகிறது இப்பகுதியில் மதுரைத் தமிழ்ச் சங்கம், அரசாங்கமும் தமிழ்க் கல்வியும், இதழ்கள், விளம்பரம், அழைப்பிதழ், கடிதங்கள், தமிழ்ப் பாடநூல்கள், கட்டுரைகள் ஆகியன கவனமாக ஆராயப்பட்டுள்ளன. உரைநடை வரலாற்றில் விளம்பரம், அழைப்பிதழ் இவற்றின் பங்களிப்புப் பற்றிக் குறிப்பிடும்போது, 'வானர வீரர் கட்டிய அணையில் அணிலுக்கும் பங்குண்டு என்பது போல, இந்த நூற்றாண்டு உரைநடை வளர்ச்சியில் இவற்றுக்கும் ஓரளவு பங்கு உண்டு என்பது உண்மையாகும்' என்று கூறியுள்ளார்

மூன்றாம் பகுதி, நூல்களின் முகவுரைகள், சமய நூல்கள், நாடக நூல்கள் இலக்கிய நூல்களும் ஆராய்ச்சி நூல்களும், சிறுகதைகள்,

பெருங்கதைகள் எனும் தலைப்புகளைக் கொண்டு அமைந்துள்ளது இயன்றவரையில் குறிப்பிடத்தக்க உரைநடை மாற்றங்கள் அனைத்தையும் இப்பகுதியில் இராசமாணிக்கனார் பதிவு செய்துள்ளார். அதிகம் அறியப்படாத பல எழுத்தாளர்களின் உரைநடை உத்திகள் கூட இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

தலைப்பு, 'இருபதாம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி' என்றிருந்தபோதும் தமிழ்மொழியில் உரைநடை வெளிப்பட்ட காலந்தொட்டு இருபதாம் நூற்றாண்டுவரையிலான நடை மாற்றங்களை, வளர்ச்சியைக் கால ஒழுங்கிற்கேற்ப இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு இவற்றின் துணையுடன் நிரல்படத் தொகுத்துத் தந்திருக்கும் இராசமாணிக்கனாரின் இவ்வாய்வு நூல் பின்னால் வந்த உரைநடை வளர்ச்சி பற்றிய பல நூல்களுக்கு அடித்தளமாக அமைந்ததெனில் அது மிகையாகாது

இலக்கிய ஆய்விற்குக் கல்வெட்டுகளையும் களஆய்வையும் அகழாய்வையும் பயன்படுத்தி, உண்மை கண்டறியும் நோக்கோடு உழைத்து, முந்தைய அறிஞர்களின் கூற்றுகளை ஏற்கக்கூடிய இடங்களில் ஏற்று, மறுக்கவேண்டிய இடங்களில் தக்க சான்றுகளின் அடிப்படையில் உறுதியாகவும் அதே சமயம் கருத்துச் சொன்னவர்தம் உள்ளம் புண்படாதவாறு மென்மையாகவும் மறுத்து ஆய்வு நெறிகளினின்று சற்றும் பிறழாது, எளிய நடையில் படிப்பார் அனைவரும் புரிந்து கொள்ளுமாறு தம் ஆய்வுப் படைப்புகளை வழங்கியிருக்கும் இராசமாணிக்கனாரின் ஆய்வுத் திறமும் பண்பாடும் உவந்து பின்பற்றத்தக்கன.

# 3

# சமயஞ் சார்ந்த ஆய்வுகள்

பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்படும் சேக்கிழாரின் 'திருத்தொண்டர் புராணம்' அளவு கருதியும் உள்ளீட்டின் தன்மை உணர்ததுமாறும் 'பெரியபுராணம்' என்று அழைக்கப்படுகிறது. தேவார மூவருள் ஒருவரான சுந்தரரின் வரலாறு சொல்லுமாறு போலத் தொடங்கி, நாயன்மார் பெருமக்கள் அனைவர்தம் வரலாற்றையும் அதனுள் பொதியக் கூறி சுந்தரரிடமே நூலை முடித்துச் சைவ சமயத்திற்கு ஈடு இணையற்ற பெருங்காப்பியமொன்றை உருவாக்கித் தந்த மேதை சேக்கிழார் 'புராணம்' எனும் பின்னொட்டுக் கொண்டமையால், இந்நூலின் பெரும்பாலான தரவுகள் வரலாறாகக் கொள்ளப்படாமல் ஒதுக்கப்பட்டன. சேக்கிழாரும், 'புலவர்' என்ற கண்ணோட்டத்தின் காரணமாக ஆய்வுலகத்தால் உரியவாறு கவனிக்கப் படவில்லை, தமிழுலகோ, சைவ மரபோ இதைப் பொருட்படுத் தியதாகத் தெரியவில்லை. இதன் காரணமாகத் தமிழ்நாட்டுச் சமூக வரலாற்றிலும் பண்பாட்டு வரலாற்றிலும் சேக்கிழாரும் அவருடைய பதிவுகளும் உரிய இடம்பெறாத நிலையிருந்தது

## பெரியபுராண ஆராய்ச்சி

இந்தத் துன்பமான சூழலில்தான் மா இராசமாணிக்கனார் பல்லவர் வரலாறு எழுதும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். 'நான் பல்லவர் வரலாறு எழுத விரும்பி அதற்குரிய ஆராய்ச்சி நூல்களையும் பல்லவர் காலப் பட்டயங்களையும் கல்வெட்டுகளையும் இலக்கிய நூல்களையும் படித்துவந்த பொழுது, மூவர் திருமுறைகளில் வரும் சில குறிப்புகளும் பெரிய புராணத்தில் வரும் பல குறிப்புகளும் கல்வெட்டு-பட்டயக் குறிப்புகளுடன் ஒன்றுபடுதலைக் கண்டு வியந்து ஆராயத் தொடங்கினேன், அவ்வாராய்ச்சியின் பயனாக, பெரிய புராணத்திற் காணப்படும் போர்கள் - பஞ்சங்கள் - ஊராட்சி முறை-

நாணய முறை - சமுதாய வாழ்க்கை - சமயநிலை முதலியன பல்லவர் கால உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை என்பதை அறிந்தேன்.'

இந்த அறிதலும் தெளிவும் 1944 இல் அவர் எழுதி வெளியிட்ட 'பல்லவர் வரலாறு' நூலிலேயே ஆங்காங்கே பதிவு செய்யப் பட்டுள்ளன பெரியபுராணத்தைப் பற்றிய இப்புரிதல், இராச மாணிக்கனாரை அது குறித்த தொடராய்வுகளில் பிணைத்தது. பெரியபுராணத்துக்குத் தரவுக் கொடை வழங்கியுள்ள பதினொரு திருமுறைகட்கும் பெரியபுராணத்திற்கும் பல இடங்களில் வேறுபாடுகள் உண்டு; திருமுறைகளில் காணப்பெறாத பல செய்திகளைச் சேக்கிழார் விரிவாகக் கூறலும், அவற்றில் குறிப்பாகக் கூறப்பட்டவற்றைச் சேக்கிழார் பல விவரங்களுடன் கூறலும் கவனிக்க, சேக்கிழார் கூற்றுக்குத் தக்க சான்றுகள் அவர் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்ற எண்ணம் இவ்வறிஞருக்கு உண்டானது அவ்வெண்ணம் சோழர் வரலாறு எழுத விரும்பி ஆராய்ச்சி நிகழ்த்திய பொழுது உறுதிப்பட்டது

'விஜயாலயன் மரபினரான சோழப் பேரரசர் காலத்தில் சைவ சமய வளர்ச்சி உச்சநிலையை அடைந்தது, பாடல் பெற்ற கோவில்கள் கற்றளிகளாக மாறின; நாயன்மார்க்குக் கோவில்களிற் பூசையும் விழாவும் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றன; நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகள் ஓவிய- சிற்பங்களிற் காட்டப்பட்டன அக்கால மக்கள் நாயன்மார் பெயர்களைத் தங்கள் பிள்ளைகட்கு இட்டு வழங்கினர் இத்தகைய பல விவரங்கள் சோழர் காலத்துக் கல்வெட்டுகளிலிருந்து தெரிந்தன; மேலும் பெரியபுராணத்திற் கூறப்பட்ட சிற்றரசர் மரபினர் சேக்கிழார் காலத்தில் சிற்றரசர்களாகவே இருந்து வந்தனர் என்பதையும் கல்வெட்டுகள் மெய்ப்பிக்கின்றன; இத்தகைய பல விவரங்களைக் கொண்டு, சோழப் பெருநாட்டின் முதல் அமைச்சராக இருந்து தாம் பல வழிகளில் அறிந்த பிற செய்திகளைக் கொண்டுமே சேக்கிழார் வரலாற்றுப் பகுதிகளைத் தமது பெருநூலிற் பாடினார் என்பது விளக்கமாயிற்று' என்னும் இராசமாணிக்கனார், இவ்விளக்கத்தின் காரணமாகத் தாம் பெற்ற தரவுப் புதையலை அக்காலத்திருந்த சைவ சமய அறிஞர்கள், இலக்கியப் பேராசான்கள், சமுதாயத் தலைவர்கள் முன்னிலையில் அரங்கேற்ற விழைந்தார்

'1942 ஏப்ரல் திங்களில் தஞ்சை - மன்னார்குடியில் கோவை-பெரியபுராண விருத்தியுரை ஆசிரியர் சிவக்கவிமணி சி கே

சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையிற் பேசினேன்; அதே ஆண்டு நவம்பர்த் திங்களில் சென்னை நக்கீரர் கழகத்தின் கார்காலச் சொற்பொழிவு வரிசையில் பிரம்ம சமாஜ மண்டபத்தில் நான்கு நாட்கள் தமிழ்ப் பெரியார் திரு வி கலியாணசுந்தரனார் அவர்கள் தலைமையிற் பேசினேன்; 1943 ஏப்ரலில் தஞ்சை- மன்னார்குடியில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் திரு ரா பி. சேதுப்பிள்ளை அவர்கள் முன்னிலையிற் பேசினேன்; அதே ஆண்டு செப்டம்பர்த் திங்களில் வேலூர் - நகரப் பெருமண்டபத்தில் சைவப்பெரியார் திரு.ச.சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் தலைமையில் ஐந்து நாட்கள் சொற்பொழிவாற்றினேன்; அதே ஆண்டு அக்டோபர் மாதம் சேலம் - செவ்வாய்ப் பேட்டையில் நடைபெற்ற சன்மார்க்க சங்க மாநாட்டில் - மறைத்திரு மறைமலையடிகளார் தலைமையில் இரண்டு நாள் பேசினேன், 1944 மே மாதம் பழனி-சைவ சித்தாந்த மாநாட்டில் - தமிழ் அறிஞர் - டி எம். நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் தலைமையிற் பேசினேன் இப்பெருமக்கள் இவ்வாராய்ச்சிக்கு ஊக்கமளித்தனர் '

'ஒரு பொருளின் தலைப்பட்டு ஆராய்வதும் அந்த ஆராய்ச்சியில் பல்வேறு சிந்தனைகள் பிறப்பதும் அவற்றின் அடியொற்றிப் புதிய தடங்களில் பயணிப்பதும் அது போழ்து மேலும் மேலும் தரவுகள் தொகுக்கப்படுவதும் உழைப்பின் மிக்க எந்த ஓர் ஆய்வாளரின் வாழ்விலும் இயல்பாக நடக்கக்கூடியதே இத்தகு நிலையில் ஆய்வாளர்கள் தாங்கள் தேடிப்பெற்ற தரவுச் செல்வத்தைக் கட்டுரைகளாகவோ, நூலாகவோ வெளியிட்டுப் பதிவுசெய்வது வழக்கம் ஆனால், இராசமாணிக்கனார் பல்லவர் வரலாற்றையும் சோழர் வரலாற்றையும் ஆராயப் புகுந்து, அது போழ்து வெளிப்பட்ட சமயஞ் சாந்த தரவுகளில் தமையிழந்து, இலக்கியப் பின்புலத்தோடு அவற்றைப் பொருத்திப்பார்த்து, இலக்கியச் செய்திகள் வரலாற்றுக் களஞ்சியங்களாக விளங்குவது அறிந்து, அவற்றைத் தமிழிலும் சமயத்திலும் வல்லவராய் இருந்த அறிஞர்கள் முன்னிலையில் உரைத்துப் பார்த்துத் தெளிவுகாண விழைந்தார். தமிழ்நாட்டு இலக்கிய வரலாற்றில் அதற்கு முன் எந்த ஓர் ஆய்வாளரும் முயன்று பார்க்காத இந்த ஆய்வு அணுகுமுறை, இராசமாணிக்கனாரின் தன்னம்பிக்கையை யும் உழைப்பின் திண்மையையும் பிறர் கருத்துக்கு மதிப்பளிக்கும் பெருந்தன்மையையும் தெள்ளிதின் புலப்படுத்துகிறது

அனைத்து அறிஞர்களாலும் தம்முடைய ஆய்வுக் கருத்துக்கள் அரவணைக்கப்பட்ட நிலையில் ஊக்கம் கொண்ட இராசமாணிக்கனார்,

சென்னைப் பல்கலைக்கழகத்தின் எம் ஓ எல் ஆய்வுப் பட்டத்திற்குத் தம்முடைய புதிய தரவுகளை நூலாக்கித் தர விழைந்தார். அது போழ்து சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக இருந்த இராவ்சாஹிப் திரு.எஸ். வையாபுரிப்பிள்ளை அந்நூலை நன்கு பார்வையிட்டு உதவ, 1945 ஜனவரித் திங்களில் நூல் எம்.ஓ.எல். பட்டத்திற்காக அனுப்பப்பட்டு ஜூலை மாதம் பட்டம் வழங்கப் பெற்றது.

ஆங்கிலத்தில் எழுதித் தரப்பட்ட இவ்வாய்வு நூலை சாதாரண தமிழ் மக்களும் அறிதல் வேண்டும் எனும் தம் விருப்பத்தின் காரணமாகத் தமிழில் எழுதத் தொடங்கி, ஆங்கில நூலில் சுருங்கக் கூறிய பல செய்திகளை உரிய அளவில் விரித்து, பிற்சேர்க்கையாக, அறுபத்து மூவர் ஊர்-மரபு-தொண்டு-காலம், தொண்டின் வழியிலான தொண்டர் வகைப்பாடு, அடியார்-அரசர் கால வரையறை, அடியார்தம் பெயராய்வு, அவர்தம் மரபு, நாடு, ஊர், அப்பர், சம்பந்தர், சுந்தரர் செய்த சிவத்தலப் பயணக் குறிப்பு, சுந்தரர் தொகை பாடிய சூழல், இராஜராஜ ஈசுவரத்துச் சிற்பங்கள் பற்றிய விரிவான விளக்கப் பட்டியல், ஆளுடைநம்பி ஸ்ரீபுராணம பற்றிய ஆய்வு ஆகியவற்றையும் இணைத்து, 'பெரியபுராண ஆராய்ச்சி' எனும் நூலாக 1948இல் பதிப்பித்தார்

நான்கு பதிப்புக்களைக் கண்ட இவ்வாய்வு நூல் ஆய்வுலகில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது இந்நூலைப் பற்றிக் குறிப்பிடும்போது திரு வி க , 'பெரியபுராணத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் சில வெளிவந்துள்ளன. அவற்றுள் அறிஞர் இராசமாணிக்கத்தின் ஆராய்ச்சியே விழுமியது-விரிந்தது-பொருள் செறிந்தது என்று கூற என் மனம் எழுகிறது பெரியபுராண ஆராய்ச்சி காலக கணக்கின் மீது பெருங்கவலை செலுத்தியிருக்கிறது. காரணம் நமது நாட்டுச் சரித்திரக் காலங்கள் கருக்கொண்டுள்ளமையும் அவை இன்னும் நன்முறையில் உருக்கொள்ளாமையும் ஆகும். இந்நூலாசிரியர் கருவை உருவாக்க விண்ணும் மண்ணும் அதிரச் சுழன்று சுழன்று உழைத்த உழைப்பு அதிகம். அவர்தம் முயற்சியால் பெரியபுராணம் மீண்டுஞ் சரித்திர புராணமாய் உயிர்த்தெழுந்தது. சேக்கிழார் ஒரு பல்கலைக்கழகம் என்பது ஆசிரியரால் நிறுவப்பட்டிருக்கிறது' என்று மகிழ்ந் துரைத்துள்ளார். தமிழ்த் தென்றலின் இத்தகுதியுரை இராச மாணிக்கனாரின் உழைப்பையும் அறிவுத்திறத்தையும் உண்மை தேடும் ஆற்றலையும் உலகுக்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது

தமிழ்நாட்டுச் சமய வரலாற்றில் ஒரு மைல் கல்லாகக் கருதப்படும் இராசமாணிக்கனாரின் பெரியபுராண ஆராய்ச்சி, ஓர் ஆய்வாளர் தம்முடைய ஆய்வுத் தலைப்பை எப்படியெல்லாம் அணுகமுடியும் - அணுகவேண்டும் என்பதற்கான மிக விரிவான வழிகாட்டலை வழங்குகிறது காலஎல்லை நிர்ணயிக்கப்படாத ஆய்வுகள் வரலாற்றுத் தன்மையுடையன ஆகா என்பதால் ஆய்வுப் பொருள் இலக்கியம் சார்ந்ததாக இருப்பினும் அதற்கான கால எல்லை தக்க சான்றுகளின் அடிப்டையில் நிர்ணயிக்கப்பட வேண்டும். பெரியபுராண ஆராய்ச்சியைப் பொருத்தமட்டில் நான்கு கால எல்லைகளை இவ்வறிஞர் வரையறுத்துக் கொள்கிறார்

சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தைப் பாடிய காலம், அவர் பெரியபுராணம் பாடுவதற்கு முதல் நூல்களாக விளங்கிய திருத் தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றைப் பாடிய சுந்தரர், நம்பியாண்டார் நம்பி இவர்கள் காலம், இவ்விலக்கியங்களின் பாடுபொருளாக அமைந்த நாயன்மார்களின் காலம் எனும் இந்நான்கு கால அமைவுகளை நிறுவுதலைத் தம் முதல் கடமையாகக் கருதி, இக்கால நிறுவலுக்கு இலக்கியங்கள், கல்வெட்டுகள், செபபேடுகள், கோயிற்சிற்பங்கள் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டுள்ளார்

சங்க நூல்களில் நாயன்மார் ஒருவர் பெயரேனும் சுட்டப் படாமையின் அறுபத்து மூவர் காலத்தின் மேல் எல்லையாக சங்க இறுதிக் காலமாகிய கி பி 300ஐக் கொள்வதுடன், கீழ் எல்லையாக அந்நாயன்மார்களை விதந்து பாடியுள்ள சுந்தரரின் காலத்தைக் கொண்டுள்ளார். சுந்தரரின் காலத்தை நிர்ணயிக்க அவர் பதிகங்களும் திருத்தொண்டத்தொகையில் அவர் குறிப்பிட்டுள்ள பல்லவ மன்னர் பற்றிய தரவுகளும் உதவியுள்ளன சுந்தரர் பாடிய பல்லவ மன்னரை அடையாளம் காணுதலை அடுத்த நிலையாகக் கொண்டு, அதற்காகப் பல்லவர் கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் ஆராய்ந்து, பல்லவர் மரபுப் பட்டியலைப் பின்பற்றி, அவற்றின் பிழிவுகளைச் சுந்தரர் பாடல் அடிகளுடன் தொடர்புபடுத்திச் சுந்தரர் பாடிய பல்லவ மன்னர் மூன்றாம் நந்திவர்மரே என்று உறுதிபடத் தெரிவிக்கும் இவ்வறிஞர், அம்மன்னரின் காலமான கி பி 840-865யே சுந்தரரின் காலமாகக் கொண்டு, அதையே நாயன்மார் காலக் கீழ் எல்லையாக நிறுவுகிறார். கி பி 300 க்கும் கி பி. 865க்கும் இடைப்பட்டு வாழ்ந்த நாயன்மார்களே சுந்தரரின் திருத்தொண்டத்தொகையில் இடம்பெற்றுள்ளனர் என்பது

உறுதியான நிலையில் சேக்கிழாரின் காலத்தைக் கணித்தல் கடமையாகிறது.

பெரியபுராணத்தில் சேக்கிழார் தம் காலத்து மன்னரின் பெயரைக் குலோத்துங்கர் எனக் குறிப்பதால், அவர், குலோத்துங்கர் என்ற சோழ மன்னர் காலத்தில் வாழ்ந்தவர் என்பதில் அறிஞர்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லை சோழர் வரலாற்றில் மூன்று குலோத்துங்கர்கள் இருந்தனர் முதற் குலோத்துங்கர் கி பி 1070- கிபி 1120 வரை அரசாண்டவர் இரண்டாம் குலோத்துங்கர் கிபி 1133 - 1150 வரை ஆட்சியிலிருந்தார். மூன்றாம் குலோத்துங்கர் கி.பி. 1178இல் அரியணையேறி கி.பி 1218வரை ஆட்சி நடத்தியவர் இம்மூவருள் சேக்கிழார் குறிப்பிடும் குலோத்துங்கர், 'அநபாயன்' எனும் பட்டப் பெயரை உடையவர்.

பெரியபுராணத்தில் இப்பெயர் பத்து இடங்களில் இடம் பெற்றுள்ளது இப்பெயரை உடையவராகக் கல்வெட்டுகளில் சுட்டப்படும் குலோத்துங்கர் இரண்டாம் குலோத்துங்கரே மூன்றாம் குலோத்துங்கருக்கு இவ்விருதுப் பெயர் இருந்தமைக்குக் கல் வெட்டுச் சான்றேதும் கிடைத்திலது. பெரியபுராணம் போலவே மூவருலாவிலும் இரண்டாம் குலோத்துங்கர், 'அநபாயன்' எனும் பெயரால் மூன்றிடங்களில் விளிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டும் இராசமாணிக்கனார், இந்த ஒரு சான்றுடன் நிறைவு கொள்ளாமல், 'மூன்றாம் குலோத்துங்கரே சேக்கிழார் கால வேந்தர்' என்று உரைத்திருந்தார் கூற்றிற்கான காரணங்களை விரிவாக ஆராய்ந்து ஒவ்வொன்றாகத் தக்க சான்றகளின் அடைப்படையில் மறுத்திருக்கிறார்

'அநபாயன்' இரண்டாம் குலோத்துங்கரே என்பதை மேலும் உறுதிபட நிறுவுவதற்காக, அநபாயன் பற்றிய இலக்கிய, கல்வெட்டுச் செய்திகளை ஒவ்வொன்றாக ஒப்பிட்டுக் காட்டி, ஏறத்தாழ ஆறு நிலைகளில் தம் முடிவு சரியானதே என்பதைத் தெளிவுபட நிறுத்தியுள்ளார். ஒரு கருத்துருவை நிலைப்படுத்த, அதுபற்றிய பிறர்தம் மாற்றுக் கருத்துக்களைச் சான்றுகளுடன் மறுப்பதோடு நில்லாது, அக்கருத்தைத் தழுவி நிற்க வல்ல அனைத்துத் தரவுகளையும் தேடித் திரட்டிப் படிப்பார் முன் நிறுத்தி, உண்மை எத்தனை வலிமையானது என்பதை மெய்ப்பிக்கும் இவ்வாய்வு அணுகுமுறை இவ்வறிஞரின் தனித்தன்மையாக முகிழ்த்துள்ளது

சேக்கிழார், சுந்தரர், நாயன்மார் காலங்களை நிறுவிய நிலையில் திருத்தொண்டர் திருவந்தாதி வழங்கிய நம்பியாண்டார் நம்பியின்

காலத்தை நிர்ணயிப்பது இராசமாணிக்கனாருக்கு எளிதான செயலாக அமைந்துவிட்டமையைப் பெரியபுராண ஆராய்ச்சி கொண்டு அறியலாம் நாயன்மார் கால மேல், கீழ் எல்லைகளைச் சுட்டியதோடு நிறைவடையாது, அவர்களை அப்பர்-சம்பந்தருக்கு முற்பட்டவர்கள், அப்பர்-சம்பந்தர் காலத்தவர்கள், அப்பர்-சுந்தரர் காலத்திற்கு இடைப்பட்டவர்கள், சுந்தரர் காலத்தவர்கள் என நான்கு பெரும் காலப்பிரிவுகளில் இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் அடக்கியிருக்கும் முறை அந்நாயன்மார்தம் வாழ்வியலையும் அதை இயக்கி நின்ற அப்போதைய சமுதாயப் பின்புலத்தையும் புரிந்துகொள்ளப் பேருதவி புரிவதை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

பெரியபுராணம் இலக்கிய வடிவம் கொண்ட வரலாற்று நூலே என்பதை நிறுவப் பல்வேறு முதன்மைச் சான்றுகள் இராசமாணிக்கனாருக்கு உதவியுள்ளன திருமுறைகள், கல்வெட்டுகளில் கண்ட நூல்கள், பல்லவர்-சோழர் காலத்துத் தமிழ் நூல்கள், மத்தவிலாசம், அவந்திசுந்தரி கதா முதலிய வடமொழி நூல்கள், சமண்-பௌத்த சமய நூல்கள், ஓவியங்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் இவை அனைத்தும் முனைப்புடன் ஆராயப்பட்டுள்ளமை, ஓர் ஆய்வாளர் எத்தகு தேடல் உணர்வும் முயற்சியும் பரந்துபட்ட அறிவுத்தளமும் உடையவராய் இருந்தல் வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன

இம் முதன்மைச் சான்றுகளின் விரிவான ஆய்வு பெரிய புராணத்திற்கும் அவற்றிற்கும் இடையிலான மூவகை வேறுபாடுகளை புலப்படுத்தின முன்னோர் குறிப்பாகக் கூறியவற்றைத் தெளிவாக விளக்கல், அவர்கள் குறியாத பல புதிய செய்திகளைத் தருதல், அவர்கள் குறித்த சிலவற்றை மாற்றி வழங்கல் எனும் இம்மூவகை வேறுபாடுகளே சேக்கிழாரை, 'இலக்கிய ஆசிரியர்' என்னும் நிலையினின்று, 'வரலாற்றாசிரியர்' எனும் நிலைக்கு உயர்த்துவதாகக் கூறும் இப்பெருந்தகை, இவ்வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறியவும் முயன்று, குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளமையை அவருடைய விளக்கங்களால் அறியமுடிகிறது

சேக்கிழார் தமக்குக் கிடைத்த முதல் நூல்களுடன் நிறைவு கொள்ளவில்லை. அவற்றில் கிடைத்த குறிப்புகள் நாயன்மார் வரலாறுகளை நிறைவுறச் சொல்லப் போதுமானவை அல்ல எனக் கருதியதால் அவ்வறிஞர் நாயன்மார் வரலாற்றோடு தொடர்புடைய இடங்களை நேரில் சென்று ஆராய்ந்தார் அது போழ்து அவர்

பார்வைக்குக் கிடைத்த சிற்பங்கள், ஓவியக் காட்சிகள், கல்வெட்டுகள், கேட்டறிந்த வழங்கு கதைகள் ஆகியன முதல் நூல்களில் தென்பட்ட இடைவெளிகளை நிறைவு செய்ய, குறைகளைக் களைய அவருக்கு உதவின களஆய்வுத் தரவுகளை முதன்மைப்படுத்தி, முதல் நூல் செய்திகளுடன் அவற்றை ஒருங்கிணைத்துத் தம் பெரியபுராணத்தை அவர் உருவாக்கியதால்தான் இத்தகு வேறுபாடுகள் இடம்பெற்றன என்பதை இராசமாணிக்கனார் நிறுவும்போது படிப்பார்க்குச் சேக்கிழார் ஒரு வரலாற்று அறிஞரே என்ற தெளிவேற்படுகிறது.

இத்தெளிவை உண்டாக்க சேக்கிழார் சென்ற வழியெல்லாம் இராசமாணிக்கனார் சென்றுள்ளார் என்பதும் நாயன்மார் வரலாற்றோடு தொடர்புடைய சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுகள் இவையனைத்தையும் இவரும் தீர ஆராய்ந்திருக்கிறார் என்பதும் கூறாமலே விளங்கும். உழைப்பு, பல்கலைப் புலமை, முனைப்பான தேடல், கருத்துக்களை ஒருங்கிணைக்கும் ஆற்றல், ஒப்புநோக்கி உண்மையறியும் தெளிவு ஆகியன இராசமாணிக்கனாரிடம் நிறைவுறக் குடியிருந்தமைக்குப் 'பெரியபுராண ஆராய்ச்சி' மிகச் சரியான சான்றாய் அமைந்துள்ளது.

## சைவ சமய வளர்ச்சி

சமய இலக்கியமான பெரியபுராணத்தை வரலாற்றுச் செய்திகள் அடங்கிய நூலாகவும் அதை உருவாக்கிய சேக்கிழார் பெருமானைத் தமிழ்நாடு முழுவதும் பயணித்துக் கள ஆய்வுகள் செய்து தரவுகள் தொகுத்த வரலாற்றறிஞராகவும் தம்முடைய கடின உழைப்பால் நிறுவமுடிந்த இராசமாணிக்கனாரின் முன், இவ்வாய்வுகளின் வழி குவிந்து கிடந்த ஏராளமான சமயஞ் சார்ந்த வரலாற்றுச் செய்திகள், அடுத்த தடத்தில் அவர் பயணிக்குமாறு செய்தன தொன்றுதொட்டு வழக்கிலிருந்து வரும் சைவ சமயத்தின் வளர்ச்சி நிலைகள் அவர் கருத்தைக் கவர்ந்தன. தென்னிந்தியாவில் சைவ சமயம் வளர்ந்த வரலாற்றை அவர் காலம்வரை யாரும் தொடர்புபடுத்தி ஆராய்ந்திராத நிலையில் கி.பி 300 இல் இருந்து கி பி.1300 வரையிலான சைவ சமய வளர்ச்சி அவர் ஆய்வுப் பொருளானது

தென்னிந்தியாவில் காஞ்சிப் பல்லவர் காலத்தும் பிற்காலச் சோழப் பேரரசர் காலத்தும் உண்டான சைவ சமய வளர்ச்சியைத் தொடராகத் தொகுக்க வாய்ப்பாகத் தம் ஆய்வுப்புலத்தை, பல்லவர்க்கு முற்பட்ட சைவ சமயம், பல்லவர் காலத்திய சைவ சமயம், சோழர்

காலத்திய சைவ சமயம் எனும் மூன்று பெரும் தலைப்புகளின் கீழ் வரையறுத்துக்கொண்ட இவ்வறிஞர், கருத்துத் திரட்டலின்போது சைவத்துடன் நின்றுவிடாமல் அக்காலத்தே தமிழ்நாட்டில் மக்களால் பின்பற்றப்பட்ட பிற சமயங்களான வைணவம், சமணம், பௌத்தம் இவை சார்ந்த செய்திகளையும் வேண்டுமளவு கொண்டு தம் ஆய்விற்குப் பயன்படுத்தியுள்ளார் சமயம் சார்ந்த இலக்கியமான பெரியபுராணத்தை ஆய்வுசெய்தபோது இலக்கியச் செய்திகளை முதன்மைப்படுத்தி அவை வரலாற்றுத் தரவுகள் என நிறுவக் கல்வெட்டுகளைத் துணை கொண்ட பேராசிரியர், சைவ சமய வளர்ச்சிக்கான ஆய்வின்போது கல்வெட்டுகளையும் செப்பேடு களையும் முதன்மைப்படுத்தி இலக்கியத் தரவுகளை அவற்றிற்கான பின்புலமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளமை கருப்பொருளுக்கேற்ப மூலங்களை முதன்மைப்படுத்தும் அவரது ஆய்வுத்திறம் காட்டுகிறது.

பெரியபுராண ஆராய்ச்சியின்போது அப்புராணத்துடன் தொடர்புடைய நாயன்மார்களின் ஊர்கள், அப்பர்-சம்பந்தர்- சுந்தரர் இவர்கள் பயணப்பட்ட ஊர்கள் ஆகியவற்றைக் கண்டு ஆய்வு செய்தமை போதுமானதாக அமைந்தது ஆனால், சைவ சமய வளர்ச்சியை உரியவாறு படம்பிடிக்கத் தமிழ்நாடு முழுவதும் இவ்வறிஞர் பயணப்பட வேண்டியிருநதது. தமிழ்நாடு தவிர்த்த தென்னிந்தியாவின் பிற மாநிலங்களிலும் முககியமான ஊர்களைத் தம் ஆய்விற்காகப் பார்வையிட்டுள்ளமையை நூலில் ஆங்காங்கே குறிப்பாகச் சொல்லியிருக்கிறார் பயண வசதிகள் மிகக் குறைந்திருந்த அந்தக் காலகட்டத்தில் (1940-1950) ஆய்வுக்காகத் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களுக்கும் பயணப்பட்டு, பேருந்து வசதியற்ற பல சின்னஞ்சிறு ஊர்களுக்கு மாட்டு வண்டியிலும் நண்பர்களுடன் அவர்தம் சைக்கிளிலும் சென்று அங்குள்ள கோயில்களை, கல்வெட்டுகளை, சிற்பங்களை ஆராய்ந்து சைவ சமய வளர்ச்சிக்கான சான்றுகளைத் திரட்டியிருக்கும் இப்பேராசிரியரின் பத்தாண்டுக் கால உழைப்புக் கருதத்தக்கது

முதல் நூலாகவோ, வழிகாட்டு நூலாகவோ எதுவுமற்ற நிலையில் தம்முடைய உழைப்பையே முதலாக்கிக் கள ஆய்வையே முற்றிலுமாய் நம்பி, கோயில்களை வரலாற்றுக் களங்கள் எனக் கொண்டு கல்வெட்டுகளின் வெளிச்சத்தில் ஒரு நாட்டின் சமய வரலாற்றைத் தேடிப் பெற்ற முதல் ஆய்வாளராக இராசமாணிக்கனாரைக் குறிப் பிடலாம் கல்வெட்டுகளைப் படிப்பதும் அவற்றிலிருந்து செய்தி திரட்டுவதும் எத்தனை கடினமான செயல் என்பதைக் கல்வெட்டு

களைப் பற்றிய அடிப்படைத் தெளிவுடைய அனைவரும் அறிவர். திருப்பணிகளால் சிதைக்கப்பட்டும் காலத்தின் கைகளில் உருக் குலைந்தும் சுண்ண, வண்ணப்பூச்சுக்களால் மழுங்கடிக்கப்பட்டும் காணப்படும் கல்வெட்டுகளைத் தொடரொழுங்குடன் படிப்பது அரும்பணி.

இவர் ஆய்வு செய்த காலத்தில் இந்தியக் கல்வெட்டாய்வுத் துறை மிகச் சில கல்வெட்டுத் தொகுதிகளையே பாடங்களுடன் வெளியிட்டிருந்தது 1937வரையிலான கல்வெட்டுச் சுருக்கத் தொகுதிகளே இவர் பார்வைக்குக் கிடைத்துள்ளன கிடைத்தவற்றை யெல்லாம் முழுமையுறப் பயன்படுத்திக் கொண்ட இவர், தம் ஆய்வுடன் தொடர்புடைய பெரும்பாலான கல்வெட்டுகளை, அவையிருந்த கோயில்களுக்கே சென்று படித்தறிந்தமையை, 'சைவ சமய வளர்ச்சி' என்னும் நூலின் குறிப்பு விளக்கப்பகுதியில் தாம் அக்கோயில்களுக்குச் சென்ற நாள்களையும் குறிப்பிட்டுப் பதிவு செய்துள்ளார்.

பல்லவர்க்கு முற்பட்ட சைவ சமயத்தின் நிலையைச் சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், இதிகாசங்கள், தொல்காப்பியம், சிந்துவெளி அகழ்வாய்வுச் செய்திகள் இவற்றின் அடிப்படையில் தொகுத்துத் தரும் இவ்வறிஞர், பல்லவர் காலச் சைவ சமய வளர்ச்சியை விளக்க, அதை இரண்டு தலைப்புகளின் கீழ்க் கையாண்டுள்ளார் பல்லவர் ஆட்சிக்காலத்தை முற்காலப் பல்லவர் காலம், பிற்காலப் பல்லவர் காலம் என அவர் பகுத்துக் கொண்டிருப்பது மிகச் சரியே. 'முற்காலப் பல்லவர் காலத்தில் (கி.பி.300-600) பல்லவர்-களப்பிரர்-சோழர்-கதம்பர்- கங்கர்-சாளுக்கியர் போர்கள் நடைபெற்றன-பல்லவரிடமிருந்து காஞ்சி அடிக்கடி கைமாறியது- சோழ, பாண்டிய நாடுகள் உரிமை இழந்தன-உரிமைப் போராட்டங்கள் நடைபெற்றன.

இக்காலத்தில் பௌத்த-சமண சமயங்கள் களப்பிரரால் மிக்க செல்வாக்குப் பெற்றன வைதிகப் பிராமணரால் வேதங்களும் புராணக் கதைகளும் தமிழ்நாட்டில் பரவின. வடநாட்டுப் பாகவத மதம் தமிழகத்திற் பரவியது கோச்செங்கணான் பல சிவன் கோயில்களைக் கட்டினான். ஐயடிகள் காடவர்கோன் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தார். புகழ்ச் சோழர், கூற்றுவ நாயனார் போன்ற அரசர்கள் சிவன் கோவில்களை ஆதரித்தனர். மூர்த்தியாரால் பாண்டி நாட்டில் சைவம் தழைத்தது.

ஐயடிகள், காரைக்கால் அம்மையார், நக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர், கல்லாடதேவர் என்ற அடியார்களின் பாடல்கள் ஏறத்தாழ 70 சிவன் கோவில்களைக் குறித்துள்ளன. பல கோவில்களில் விழாக்கள் நடைபெற்றன; திருமேனிகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. கோவிலில் பண்ணுடைய தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டன. பிராமணர், ஆதி சைவர் முதலிய எல்லா வகுப்பினரும் சிவனடியாராக இருந்தனர். பக்தி ஒன்றுக்கே மதிப்புத் தரப்பட்டது' என்பன போன்ற ஆய்வு முடிவுகள் இவ்வியலின் பிழிவாகத் தரப்பட்டுள்ளன

முதலாம் மகேந்திரவர்மரோடு தொடங்கும் பிற்காலப் பல்லவர் காலத்தில்தான் சைவ சமயம் சார்ந்த கல்வெட்டுகள் கிடைக்கத் தொடங்குகின்றன இராஜசிம்மர் காலத்தில் அவை எண்ணிக்கையில் பெருகிச் சைவம் தமிழ்நாட்டில் வேரூன்றுவதை விளக்குகின்றன. கோயில்களும் சிற்பங்களும் எண்ணிக்கையில் மிகும் காலமும் இதுவே. இவற்றைத் தகவுறப் பயன்படுத்திக் கொண்டுள்ள இவ்வறிஞர் இக்கால இலக்கியங்களையும் ஆழ, அகல ஆய்ந்து செறிவான வரலாற்றுச் செய்திகளை முன் வைக்கிறார்

'சைவ சமய வளர்ச்சி' எனும் நூலில் இரண்டு இயல்களாக அமைந்துள்ள இப்பகுதியின் முதல் இயல், 'தனிப்பட்ட அரசர் எச்சமயத்தவராயினும், அரசாங்க சமயம் சைவ சமயமாக இருந்தது. நந்தி முத்திரை, கட்டுவாங்கக் கொடி, நந்தி முத்திரையிட்ட நாணயங்கள் என்பன இவ்வுண்மைக்குச் சான்றாகும். பல்லவர்கள் பாறைகளைக் குடைந்து கோவில்களை அமைத்தனர்; சிறிய குன்றுகளைக் கோவில்களாக மாற்றினார்கள்; பாறைகளை அடுக்கிக் கோவில்கள் கட்டினார்கள். இப்புதிய முறைகள் பிற்காலச் சோழர் கோவில்கட்கு வழிகாட்டியாயின. பல்லவ அரசர் பலர் சைவராக இருந்ததாலும் நாயன்மார் இக்காலத்தில் வாழ்ந்தமையாலும் தமிழ்நாட்டில் சைவ சமயம் நன்கு பரவியது.

அரசர்-அரச மாதேவியர்-பொதுமக்கள் கோவில்கட்குப் பல அறங்கள் செய்தனர். அவற்றுள் பாடல் பெற்ற கோவில்களும் அடங்கும். இசை, நடனக் கலைகளை வளர்க்க, கோவில்களில் கூத்திகள் இருந்தனர் அவர்கள் கூத்திகள், அடிகள்மார், மாணிக்கத்தார் எனப் பெயர் பெற்றனர்' எனும் வரலாற்று உண்மைகளை முதன்மைப்படுத்துகிறது. இரண்டாம் இயல், பல்லவர் காலச் சிவத்தலங்கள், இக்கால நாயன்மார்கள், அவர்தம் சமயத் தொண்டு,

இக்காலத்து நிகழ்ந்த சமயப் போராட்டங்கள், பிற சமயங்களின் நிலைகள், கோவில்களின் வளர்ச்சி, அவற்றின் வகைகள், அவற்றில் வழிபடப்பட்ட தெய்வ உருவங்கள், விழாக்கள், சமய நெறிமுறைகள், சமயக் கொள்கைகள் என அனைத்தும் கொண்டு விரிந்துள்ளது.

'நாயன்மார் வீட்டுப் பெண்மணிகள் சைவத்தில் மிக்க பற்றுக் கொண்டனர்; தம் கணவருடன் சமய வளர்ச்சிக்காக ஒத்துழைத்தனர். அக்காலப் பெண்கள் அம்மானை முதலிய பலவகை விளையாட்டு களிலும் சிவன் சிறப்பியல்புகளைக் குறிக்கும் பாக்களைப் பாடினர். திலகவதியார், மங்கையர்க்கரசியார், காரைக்கால் அம்மையார் முதலியோர் பக்தி குறிப்பிடத்தக்கது' என இக்காலப் பெண்கள்தம் சமய அறிவும் இவ்வியலில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. நாயன்மார் பாடல்கள் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து அவர்களைச் சைவத்தின் பால் ஈர்த்தமையையும் சைவம் நன்னெறியில் வளரத் தொடங்கிய வரலாற்றினையும் இவ்வியலில் தெளிவான சான்றுகளின் அடிப்படையில் இராசமாணிக்கனார் புலப்படுத்தியுள்ளார்.

சோழர் காலத்தில் கோயில்களின் எண்ணிக்கை பன் மடங்காகியது முதலாம் ஆதித்தரில் தொடங்கி மூன்றாம் இராஜராஜர் காலம்வரை விஜயாலய மரபில் வந்த அனைத்துச் சோழ மன்னர்களும் கோயில் கட்டும் திருப்பணிக்குத் துணையிருந்தனர். கோயில்கள் பெருகியதால் அவற்றில் பதிவான கல்வெட்டுகளின் எண்ணிக்கையும் பல்லாயிரக் கணக்கில் அமைந்தது இக்கல்வெட்டுகளின் வழி கிடைத்த சைவ சமயம் தொடர்பான வரலாற்றுச் செய்திகளின் திரட்சியையும் செறிவையும் பன்முகப்படுத்த நான்கு தலைப்புகளைத் தேர்ந்துள்ளார்

கோயில்கள் தொடர்பான பொதுச் செய்திகள் அனைத்தையும் சோழர் கால இந்தியாவில் சமய நிலை,சோழர் சமய நிலை, அரசர்-அரசமாதேவியர் திருப்பணிகள், சிற்றரசர் திருப்பணிகள், அலுவலர்-குடிகள் திருப்பணிகள், கோவில்களின் வளர்ச்சி, கோவிலாட்சி, எளிய கோவில்கள் கவனிக்கப்பட்ட முறை எனும் உள்தலைப்புகளில் பொதிய வைத்துச் சோழர் காலச் சைவ சமயமாய்க் காட்டியுள்ளார்.

சிற்பங்களின் வழி சமயம் வளர்க்கப்பட்ட முறையை ஆகமங்கள், சிற்ப நூல்கள் பின்னணியில் பல்வேறு கோயில்களை முன்னிறுத்தி, 'கோயில்கள்-மடங்கள்; சமய நிகழ்ச்சி' எனும் தலைப்பின் கீழ் விரிவாக விளக்கும் இவர் தாராசுரத்திலுள்ள இராஜராஜேசுவரத்தின் நாயன்மார் சிற்பங்களையும் குறித்துள்ளார். சைவ சமய ஊற்றுக்களாய் விளங்கிய இந்நாயன்மார்கள் வரலாறு அக்காலச் சமுதாயத்தில் எங்ஙனம்

போற்றப்பட்டது என்பதை அப்பெருமக்களின் படிமங்கள் பல தளங்களைச் சேர்ந்த மக்களாலும் தமிழ்நாடெங்கிலுமான கோயில்களில் எழுந்தருளுவிக்கப்பட்டிருந்த நிலைகளையும் அப்படிமங்களுக்கு வழிபாடு நிகழ்த்த அவர்களால் அளிக்கப் பட்டிருந்த கொடைகளையும் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார் நாற்பத்தைந்திற்கும் மேற்பட்ட ஊர்க் கோயில்களில் நாயன்மார் திருமேனிகள் விளங்கியமையைக் கல்வெட்டுச் சான்றுகளின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்

ஆடல், பாடல், திருமுறைகள் ஓதல் எனக் கலை சார்ந்த வழிபாடு இக்காலத்தில் முதன்மைநிலை பெற்றமையையும் இச்சிறப்பான மாற்றத்திற்குச் சோழப் பேரரசும் சமுதாயமும் துணை நின்ற பாங்கையும் இராசமாணிக்கனாரின், 'சைவ சமய வளர்ச்சி' நன்கு பதிவுசெய்துள்ளது. பல்லவர் காலத்திலேயே கோயில் வழிபாட்டு முறையில் திருமுறை ஓதல் சிறப்பிடம் பெற்றிருந்தமையைச் சுட்டும் பேராசிரியர், சோழர் காலத்தில் திருமுறைகளின் செல்வாக்கு உச்சத்தை அடைந்திருந்தமையைப் பல்வேறு சான்றுகள் பெய்து நிறுவுகிறார்.

தஞ்சாவூரில் தாம் எடுப்பித்த திருக்கற்றளியான இராஜ ராஜீசுவரத்தில் திருப்பதிகம் விண்ணப்பிக்க நாற்பத்தெட்டுப் பிடாரர்களை முதலாம் இராஜராஜர் பணியமர்த்தி இருந்தமையையும் திருப்பதிகங்களைத் தேவரடியார், பிடாரர், தளியிலார், தளிச்சேரிப் பெண்டுகள், பதியிலார், பாணர், காந்தர்வர் எனப் பல்வகைத் தொழில் சார் கலைஞர்கள் பாடியமையையும், இப்பதிக ஓதலுக்கு இசைக் கருவிகள் இசைக்கப்பட்டமையையும் கல்வெட்டுச் சான்றுகள் வழி காட்டும் இவர், மூவர் திருமுறைகளையும் நரலோக வீரன் என்பார் செப்பேடுகளில் எழுதச் செய்திருந்தமையையும் குறிப்பிட்டுள்ளார். திருமுறைகளின் இத்தன்னிகரற்ற செல்வாக்கிற்கு அவை தொகுக்கப் பட்டமையும், பின்னாளில் அவற்றை அடிப்படையாய்க் கொண்டு பெரியபுராணம் செய்யப்பட்டமையும்தான் காரணங்களாக அமைந்தன என்று உறுதிபடக் கூறும் இவர், கோயில்களில் படித்து விளக்கப்பட்ட அக்காலச் சமய நூல்களையும் கல்வெட்டுத் தரவுகளின் வழிக் கண்டறிந்து இவ்வியலில் அடையாளப்படுத்திச் சோழர் காலமே சைவ வளர்ச்சியின் உச்சம் கண்ட காலம் என்று முடிவுகாண்கிறார்

மூன்றாம் இயலில் சமயம் வளர்க்கும் நிறுவனங்களாகச் சோழர் காலத்தில் தோன்றி, விளங்கி, பல்கிப் பெருகிய திருமடங்களைப் பற்றியும் குகைகளைப் பற்றியும் பகுப்பாய்வு முறையில் பல செய்தி

களைத் தொகுத்துத் தந்துள்ள இவ்வறிஞர் இம்மடங்களின் பணிகளையும் இவற்றின் வரலாற்றையும் திறம்படக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குகைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது 'இக்குகைகள் பெரும் பாலும் சிவன் கோவில்களுக்குள் கட்டப்பட்டவை; பாதுகாப்பு மிக்கவை; திருமுறைகளில் வல்ல சைவத் துறவிகளைத் தலைவர் களாகப் பெற்றவை; திருச்சிற்றம்பலமுடைய முதலியார், தவசி-தம்பிரான் தோழர், புகலிவேந்தர் இருதய தேவர் என்ற பெயர்களைத் கொண்ட துறவிகள் சில குகைகட்குத் தலைவர்களாக இருந்தார்கள். சீகாழியில் இருந்த குகையில் முதலியார்-திருவையாறுடையார் என்பவர் இருந்தார் அவருடைய சீடர்கள் திருமுறைகளைப் பண்ணுடன் பாடுவதில் சமர்த்தர்; அவர்கள் திருவிடைவாய்க் கோவிற் குகையில் திருமுறைகளை ஓதினார்கள் சில குகைகளில் தவசிகள், ஆண்டார்கள், யாத்ரிகர் என்பவர் உண்பிக்கப்பட்டனர்' என்றுரைக்கும் இராசமாணிக்கனார், இவ்வியலில், அக்காலத்து நிகழ்ந்த குகையிடிக் கலகத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

சோழர் காலச் சைவ இலக்கியம் நான்காம் இயலின் தலைப்பாகும் 'சைவத் திருமுறைகள் பன்னிரண்டில், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் பாடிய முதல் எட்டுத் திருமுறைகளும் 10ஆம் திருமுறையாகிய திருமந்திரமும் பல்லவர் காலத்தவை. 11ஆம் திருமுறையில் உள்ள காரைக்கால் அம்மையார், ஐயடிகள், சேரமான்பெருமாள், நக்கீரதேவர், பரணதேவர், கல்லாட தேவர், கபிலதேவர் ஆகியோர் இயற்றிய பாடல்களும் பல்லவர் காலத்தவை. அவை நீங்கலாகவுள்ள 11ஆம் திருமுறைப் பாடல்களும் 9ஆம் திருமுறையும் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணமாகிய 12ஆம் திருமுறையும் சோழர் காலத்திற் செய்யப்பட்ட திருமுறைகளாகும்' என்றுரைக்கும் இவர், அவ்விலக்கியங்களின் ஆசிரியர்களைப் பற்றியும் உள்ளீடு பற்றியும் விரிவுபடக் குறிப்பிட்டுள்ளார். தக்கயாகப் பரணி, கல்லாடம் ஆகிய நூல்களையும் திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்களையும் இவ்வியலில் ஆராய்ந்து, சோழர் காலத்தில் நேர்ந்த சைவ சமய வளர்ச்சியின் ஏற்றமே இச்சாத்திரங்கள் எண்ணிறந்து தோன்றக் காரணம் என்றுரைத்துள்ளார்.

மிக விரிவான முறையில் ஆராய்ந்து முதன்முறையாக அழுத்தமான சான்றுகளின் அடிப்படையில் ஒரு சமயத்தின்

காலநிரலான வளர்ச்சியை வடிவப்படுத்தியிருக்கும் பேராசிரியர், *அச்சமயத்தின் உள்ளீடான சைவ சித்தாந்தத்தின்* வளர்ச்சியையும் சைவ இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் தெளிய விளக்கியுள்ளார். நூலின் முத்தாய்ப்பாகச் சைவரது சமுதாய வாழ்க்கையும் சொல்லப் பட்டுள்ளது இந்த வாழ்க்கைப் படப்பிடிப்பிற்குப் பெருமளவிற்குப் பெரியபுராணமும் ஓரளவிற்குப் பிற திருமுறைகளும் உதவியுள்ளன. கல்வெட்டுச் செய்திகளையும் இடையிடையே பயன்படுத்திக் கொண்டுள்ளமை, இலக்கியமும் கல்வெட்டும் இணைய நடக்கும் தன்மையன எனும் அவர் நம்பிக்கையைப் புலப்படுத்துமாறு உள்ளது

இராசமாணிக்கனாரின் பெரியபுராண ஆராய்ச்சியும் சைவ சமய வளர்ச்சியும் ஆராய்ச்சி உலகில் அவருக்குச் சிறந்ததோர் இடத்தைப் பெற்றுத்தந்தன. 'இராசமாணிக்கனார் தமது பெரிய புராணம் பற்றிய நூலில் நில ஆய்வாளரின் வரலாற்றுக் கண்ணோட்டத்தை வலியுறுத்தி, சேக்கிழாரை முற்றிலும் புதியதொரு கோணத்தில் காட்டியுள்ளார்' என்று கல்வெட்டறிஞர் வேங்கடசுப்பையரும், 'வரலாற்று ஆராய்ச்சியில் இராசமாணிக்கனாருடைய சாதனை மிகவும் போற்றத்தக்கதாகும். சேக்கிழாரைப் பற்றிய அவரது வரலாற்றுச் சித்திரம் அவரது புலமைக்கும் ஆராய்ச்சித் திறனுக்கும் தென்னிந்திய வரலாற்றிலும் கல்வெட்டுத் துறையிலும் அவருக்கு இருந்த விரிந்த அறிவுக்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றது' என்று எஸ்.வையாபுரிப்பிள்ளையும், 'காலத்தை வென்று வாழும் சேக்கிழாரின் பெரியபுராணத்திற்கு வரலாற்றுப் பின்னணியைத் தந்த முதல் ஆராய்ச்சியாளர் இராசமாணிக்கம் இவர் ஆராய்ச்சி சேக்கிழார் நூலுக்கு ஒருவிதப் புத்துயிர் அளித்தது என்று கூறல் மிகையாகாது' என்று திரு.வி.கலியாணசுந்தரனாரும் இவ்வாராய்ச்சியாளரின் பங்களிப்பைப் பாராட்டிக் கருத்துரைத்துள்ளனர்

இப்பெரியாரின் உழைப்பில் விளைந்த சைவ சமய வளர்ச்சி எனும் நூலை ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்கித் தம் கருத்துக்களைப் பெய்துள்ள பேராசிரியர் தி.லீலாவதி, 'முப்பது ஆண்டுகட்கு முன்னர் கருவி நூல்கள் அருகிக் கிடைத்த நிலையிலும், களஆய்வு என்பது அறிவியல் நோக்குடன் மேற்கொள்வது கடினமான செயல் என்று கருதப்பட்ட காலச் சூழலிலும், டாக்டர் அவர்கள் நேரடியாக ஆய்வுக் களங்களை மேற்பார்வையிட்டு, கல்வெட்டுகளைப் படியெடுத்து ஆதாரங்கள் திரட்டிய தன்மையினை நோக்கும்போது, உண்மையாய்வு, மலர்ப் பாதையன்று என உணர்ந்து வியக்கின்றோம்.

கிடைத்த சான்றுகளை அவர்கள் வகை, தொகைப்படுத்தி முடிவுகள் கண்டுள்ள ஆய்வுப்போக்குச் சிறந்த ஆய்வுநெறியின் வெளிப் பாடாகிறது. இன்றைய ஆய்வேடுகளுக்கு முன் வழிகாட்டியாய் நிலவுகிறது என்ற உண்மையையும் மறுக்க இயலாது. பட்டினத்துப் பிள்ளையார்,

> "........*நின்*
> *தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்*
> *தென்னையும் எழுத வேண்டுவன்*"

எனக் கோயில் நான்மணிமாலையில் இறைஞ்சி நின்றார் இராசமாணிக்கனார் அவர்கள் தம் ஆய்வுப் பெருநூலினை அறிவு உலகத்திற்கு வழங்கியதன் வாயிலாக வரலாற்று உலகில் நிலைத்த இடத்தினை 'இறைஞ்சாமலே' பெற்று நின்று உயர்கின்றார் எனில் அது மிகையுரையன்று' எனக் கூறியிருப்பது இராசமாணிக்கனாரின் ஆய்வுத்திறம் காட்டும் கண்ணாடியாக அமைந்துள்ளது.

# 4
# வரலாற்றாய்வுகள்

**எ**து வரலாறு? எவற்றிடமிருந்து, யாரிடமிருந்து இவ்வரலாற்றைப் பெறுவது? பெறப்படும் இவ்வரலாறு யாருக்காக, எதற்காக? இவை போல் பல கேள்விகள் பல்வேறு விடைகளுடன் வரலாற்று வரைவியல் நூல்களில் உலகெங்கிலுமாய்ப் பதிவாகியுள்ளன. இவ்வினாக் களுக்கான ஒருமித்த விடைகளை உலகம் இன்றளவும் உருவாக்க வில்லை ஏனெனில் வரலாற்றின் அமைப்பும் தன்மையும் அத்தகையன. மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்து அவனை நெறிப்படுத்தி நடக்க வைக்கும் ஒழுகலாறாக வரலாறு இருப்பதால், அதைப் பதிவுசெய்யவும் பகிர்ந்து கொள்ளவும் நாட்டு நலம் கருதுவார் தொடர்ந்து முயன்று வந்துள்ளனர் தமிழ்நாட்டில் அத்தகு முயற்சியினைத் தொய்வின்றிக் கைக்கொண்டவர்களுள் இராசமாணிக்கனார் குறிப்பிடத்தக்கவர்

தமிழிலக்கியம் பயின்று, தமிழாசிரியராக வளர்ந்து, தமிழறிஞராக மலர்ந்தபோதும் இராசமாணிக்கனாரின் பெரும்பாலான படைப்புகள் வரலாற்று நோக்கிலேயே அமைந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கும் இப்பெருந்தகையின் நாற்பத்து மூன்று நூல்கள் வரலாற்றைப் பொருளாகக் கொண்டு அமைந்தவை என்பதும் பதினொரு நூல்கள் இலக்கியப் பொருள் பற்றி எழுந்தவையாயினும் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டவை என்பதும் வியப்பூட்டும் உண்மைகளாகும் தமிழ்நாட்டில், இதுவரை தோன்றிய எந்தத் தமிழறிஞருக்கும் இந்தப் பெருமையில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 'தமிழருக்கு வரலாற்று உணர்வில்லை; வரலாற்றில் நாட்டமும் இல்லை' எனும் பொதுவான கூற்றை உடைத்தெறிவதே தம் நோக்கமாய்க் கொண்டார் போல இவர் உழைத்திருப்பதைக் கண்ணுறும்போது வரலாற்றின் மீது இவர் கொண்டிருந்த நம்பிக்கையும் ஈடுபாடும் தெளிவாகப் புலப்படுகின்றன.

இராசமாணிக்கனாரின் முதல் நூலே வரலாற்று நூல்தான். 'நாற்பெரும் வள்ளல்கள்' என்னும் தலைப்பில் 1930இல் வெளியாகி, 1938இல் மறுபதிப்புக் கண்ட இந்நூல், அவருடைய இருபத்து மூன்றாம் வயதில் எழுதப்பட்டதாகும் இந்நூலின் தொடக்கத்தில் 'ஆக்கியோன் அறிவிப்பு' என்ற தலைப்பின் கீழ், 'இந்நூல் தந்நலங் கருதாத் தனிப்பெரு வள்ளல்களாய்த் தமிழ்நாட்டிற் பெருமையுற்று விளங்கிய பாரி, ஆய், அதியன், குமணன் என்போரது வரலாற்றைக் கூறுவது. இது புறநானூற்றைப் பெரும்பான்மை தழுவியும் அகநானூறு, நற்றிணை முதலிய பிற இலக்கியங்களைச் சிறுபான்மை தழுவியும் ஆராய்ந்து எழுதப்பெற்றதாகும். இதில், பண்டைத் தமிழ் வேந்தர், வள்ளல்கள், குடிகள், பரிசிலர், புலவர் என்பார்தம் நாகரிக வாழ்க்கையும் குணாதிசயங்களும் நிலப்பகுதிகளின் தோற்றம், இயற்கை வனப்பு இன்னபிறவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன' என்று உரைத்துள்ளார்

அவரால் எழுதப்பெற்று 1940வரை பதிப்பிக்கப் பெற்ற முதல் பத்து நூல்களுள் எட்டு நூல்கள் வரலாற்று நூல்களே புலவர்கள், அரசர்கள், இந்திய விடுதலைப் போராட்டத் தலைவர்கள், அறிஞர்கள் இவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பார்க்குப் பயனுறுவிதத்தில் வழி காட்டுமாறு எளிய தமிழில் சுவைபடக் கட்டுரைகளாகவும் சிறு நூல்களாகவும் ஆக்கியுள்ளார். 1934 இல் வெளியிடப்பட்டுள்ள 'நவீன இந்திய மணிகள்' என்னும் நூலின் தொடக்கத்தில், 'அறிவிப்பு' எனும் தலைப்பின் கீழ், 'இச்சிறு நூல் நவீன இந்திய மணிகளாகிய ஏழு பெரியார்கள் வரலாற்றைப் பள்ளிக்கூட மாணவர்க்குரிய முறையில் இனிய, எளிய தமிழ் நடையில் எடுத்து இயம்புவதாகும். இவ்வரலாறுகள் மாணவர் வாழ்க்கையைச் செவ்வைப்படுத்தும் என்னும் துணிபுடையேன்' என்று எழுதியுள்ளமை நூலாசிரியரின் நோக்கத்தை உள்ளங்கைக் கனியாய் முன் வைக்கிறது

1938இல் வெளியிடப்பட்டிருக்கும் 'நாற்பெரும் புலவர்கள்' நூலின் 'ஆக்கியோன் அறிவிப்பு', 'இச்சிறுநூல் சீத்தலைச் சாத்தனார் கபிலர், பரணர், நக்கீரர் என்னும் பெரும் புலவர் நால்வரைப் பற்றிக் கூறுவது. இந்நால்வரும் பெரும் புலவர் என்பது சங்க நூற் பயிற்சி உடையவர் அனைவர்க்கும் ஒப்ப முடிந்த முடிபாகும். இப்பெரியார்தம் வரலாறுகளால் அக்கால அரசர், வள்ளல்கள், புலவர், தமிழ் மக்கள் முதலியோர் நாகரிகம், குணாதிசயங்கள், இன்னபிறவும் இனிதின் அறியலாம் நூல்கள் வாயிலாக இவற்றை அறிந்தவர் மிகச் சிலரே ஆவர். ஆதலின், மாணவர் உலகமும் வெளி உலகமும் எளிதில்

இவற்றை அறிய வேண்டும் என்னும் பேராவலே இதனை எழுதுமாறு என்னைத் தூண்டியது' என்றுரைக்கின்றது

தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக இளைஞர்களும் மாணவரும் நாட்டு வரலாற்றை அறிந்திருக்க வேண்டும் என்பதில் இராசமாணிக் கனார் கொண்டிருந்த அக்கறை அவருடைய தொடக்கக் கால வரலாற்று நூல்களில் மிகத் தெளிவாகப் பதிவாகியுள்ளது. 1940க்கும் 1950க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் அவர் எழுதி வெளியிட்ட வரலாற்று நூல் களில் அவருடைய விடுதலைப் போராட்ட உணர்வையும் புரிந்து கொள்ள முடிகிறது 1946இல் வெளியிடப்பட்ட 'சிவாஜி' என்ற நூலில் 'ஒரு நாட்டு இளைஞர் வீரம், நாட்டுப்பற்று, அஞ்சாமை முதலிய நற்பண்புகள் பெற்று விளங்க வேண்டுமாயின், தம் தாய்நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட பெருமக்கள் வரலாறுகளைப் படித்துணரல் வேண்டும். விரைவில் விடுதலை பெற்று ஒளிர நிற்கும் நம் தாய் நாட்டு மாணவர் இந்நற்பண்புகளைப் பெறுதல் தேவையன்றோ?

அவர்களை எதிர்கால வீரர்களாக்க-நாட்டுப் பற்றுடையவராக்க - அஞ்சாத ஆண்மையாளராக்க வல்ல வரலாறுகள் பல அவற்றுள் ஒன்று, உரிமை வேட்கை கொண்டு தனியரசைத் தோற்றுவித்த சிவாஜியின் சீரிய வரலாறு மாணவர் உலகம் இதனைப் படித்துப் பயன்பெறுமாக' என்று குறிப்பிட்டுள்ள இவர், தாம் எழுதிய சிறுவர்க்கான வரலாற்று நூல்களில் கூட அவற்றிற்கேற்ற அளவில் இந்திய நாட்டு வரைபடம் ஒன்றையும் உரிய குறிப்புகளுடன் இணைத்திருப்பது வரலாற்றுப் புவியியலில் 1940களிலேயே இவர் கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாக உள்ளது.

1949இல் மறுபதிப்புக் கண்டுள்ள, 'பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு' எனும் நூலின் முகவுரையில் நேருவைப் பற்றிய வரிவடிவத்தை ஒரு பத்தி அளவில் அமைத்து, 'இந்திய மக்கள் உள்ளமாகிய கோவிலில் காந்தியடிகட்கு அடுத்த இடத்தைப் பெற்றிருப்பவர் ஜவாஹர் என்றே கூறலாம் இங்ஙனம் மக்களது அகக் கோவிலில் இடம்பெற்ற தியாக வீரரது வரலாறு உரிமை பெற்ற இந்திய நாட்டு இளைஞர்க்கு ஏற்றதே அன்றோ? அவ்வரலாறு அவ்விளைஞர்க்கு நாட்டுப்பற்று-தியாக உணர்ச்சி- நாட்டு முன்னேற்றத்திற்குரிய துறைகளில் உழைக்க ஊக்கம் முதலியவற்றை நல்கும். அவர்கள் வாழ்வினை ஒளிரச் செய்யும்' என்று நேருவின் வரலாற்றைத் தாம் எழுத முனைந்தமைக்கான காரணத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இளைஞர் நலம் நோக்கிய இவரது இந்தச் சிந்தனை இறுதிக் காலம்வரை இவருக்கு இருந்தமையை 1963இல் இவர் வெளியிட்டுள்ள, 'ஆற்றங்கரை நாகரிகம்' எனும் நூல் மெய்ப்பிக்கிறது. 'மாணவர் தென்னிந்திய வரலாற்றையும் தமிழ் நூல்களையும் கல்வெட்டுகளையும் படித்துத் தம் தாய்நாட்டுச் சிறப்பை நன்கு அறிய வேண்டும் என்பதே இந்நூல் எழுதப்பெற்றதன் நோக்கமாகும்' என்று அந்நூலின் முகவுரையில் தம் எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளார் இராசமாணிக்கனார். தமிழ் மாணவர்கள் தமிழ் உணர்ச்சியும் நாட்டுப்பற்றும் வரலாற் றார்வமும் உடையவர்களாய் இருக்க வேண்டும் என்று இராசமாணிக்கனார் விரும்பினார். அதற்கேற்பவே அவருடைய தொடக்கக் கால வரலாற்று நூல்களுள் சில அமைந்தன. எடுத்துக்காட்டாக அவர் 1949இல் வெளியிட்ட, 'இராஜேந்திர சோழன்' எனும் நூலைக் குறிப்பிடலாம் 'தென்னாட்டுப் பெருமக்கள்' எனும் நூலில், 'நமது தமிழ் நாட்டில் ஒவ்வொரு துறையிலும் தக்க அறிஞர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தமிழ் மாணவர் உணர்ந்து, இப்பெருமக்களைப் போலத் தாமும் உயர வேண்டும் என்னும் நல்லுணர்ச்சி பெறவேண்டும் என்னும் கருத்தாற்றான் இந்நூல் வெளியிடப்பெற்றது' என்று அவர் எழுதியுள்ளமை, மாணவர் முன்னேற்றத்தில் வரலாறு எந்த அளவிற்குப் பயன்படுமென்று அவர் நம்பியிருந்தார் என்பதைப் புலப்படுத்துவதாக உள்ளது.

தமிழ்நாட்டு வரலாற்றை எழுதப் புகுந்த அறிஞர்கள் அனைவருமே அரச மரபுகளின் அடிப்படையில்தான் வரலாற்றுக் கண்ணோட்டத்தை அமைத்துக்கொண்டனர் ஆனால், இராசமாணிக்கனார் தம்முடைய, 'ஆற்றங்கரை நாகரிகம்' என்னும் நூலில் உலக நாகரிகங்களின் போக்கிலேயே தமிழ்நாட்டிலும் ஆற்றங்கரைகளிலேயே நாகரிகம் வளர்ந்து செழித்தமையைப் பாலாற்றங்கரை நாகரிகம், காவிரிக்கரை நாகரிகம், வையைக்கரை நாகரிகம் என முப்பெரும் பிரிவுகளில் விவரித்துள்ளார். 'ஆற்றங்கரைப் பண்பாடு' எனும் இந் நூலின் இறுதி இயல் இம்முப்பெரும் நதிக்கரைகளிலும் நின்று நிலவிய மக்கள் வாழ்க்கையின் சுருக்கமான படப்பிடிப்பாக அமைந்துள்ளமை, ஒரு பறவைப் பார்வையில் தமிழர் பண்பாடு அறிய விழைவார்க்கு விருந்தாக விளைந்துள்ளது.

## சிந்துவெளி நாகரிகம்

வரலாற்றைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இளைஞர்க்கும் மாணவர்க்குமான சிறுசிறு நூல்களைப்

படைத்தளித்த இராசமாணிக்கனார், வரலாற்று ஆர்வலர்கட்கும் ஆய்வாளர்கட்கும் ஆசிரியர்கட்கும் பயன் தரத்தக்க விதத்தில் அழுத்தமான வரலாற்று நூல்களையும் உருவாக்கினார். அத்தகு நூல்களுள் முதலில் உருவானது மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் 1941இல் முதற்பதிப்புக் கண்ட இந்நூலே தமிழரிடைச் சிந்துவெளி நாகரிகம் பற்றிய பரவலான விழிப்புணர்வை உண்டாக்கியதெனலாம் சர்.ஜான் மார்ஷல், முனைவர் ஈ கே.ஹெச்.மக்கே கே. என் தீக்ஷித் இவர்தம் ஆய்வுகளை உள்வாங்கிச் சிந்துவெளி நாகரிகம், உலக நாகரிகம் குறித்த அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் பழுதறப் பயின்று, அகழாய்வுச் செய்திகளைப் படிப்பார்க்கு எளிதில் விளங்குமாறு, பொருள் நலம் குன்றாமல் அதே சமயம் சுவைபட எழுதியுள்ள இவரது ஆற்றல் ஹீராஸ் பாதிரியாரால், 'மகத்தான சாதனை' எனப் பாராட்டப் பெற்றுள்ளது.

ஏழுமுறை மறுபதிப்புச் செய்யப் பெற்ற இந்நூல் பதினேழு இயல்களைக் கொண்டமைந்தது முதல் இயலில், 'புதைபொருள் ஆராய்ச்சி' என்றால் என்ன என்பதை மிக எளிமையான தொடர்களால் விளக்கி, அத்தகு ஆராய்ச்சிகள் நடைபெற்ற உலகளாவிய இடங்களைச் சுட்டி, அங்குக் கிடைத்த புதைபொருட்கள் எங்ஙனம் அவ்வவ்விடங்களின் நாகரிகங்களை மீட்டுருவாக்கம் செய்ய உதவின என்பதை விளக்கி, இந்தியாவிலும் அத்தகு ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளமையைத் தொட்டுக்காட்டி, சிந்துவெளி நாகரிகத்தை இவர் அறிமுகப்படுத்தியிருக்கும் பாங்கு, படிப்பார்க்கு அகழாய்வு பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை உண்டாக்கிவிடுகிறதெனில் அது மிகைக் கூற்றாகாது

சிந்துவெளியில் புதையுண்ட நகரங்களைப் பற்றி எழுதும்போது படிப்பார் அப்பகுதி சார்ந்த புவியியல் அறிவு பெறுவது அவர்க்குத் தெளிவு தரும் என்ற நோக்கோடு, சிந்து யாறு, பஞ்சாப் மண்டலம், சிந்து மண்டலம், கீர்தர் மலைத்தொடர், அகழப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொஹெஞ்சொ-தரோ, சான்ஹூ-தரோ, சக்பூர்பானி ஸியால், அம்ரி, அலிமுராத், பாண்டிவாஹி, கோட்லா நிஹாங்கான் இவையிருக்கும் நிலப்பகுதி பற்றிய விவரங்கள் ஆகியவற்றை ஒரு நில வரைபடம் கொண்டு விளக்குமாறு போலச் சுட்டி விவரித்துள்ளார். பார்வைப்புலன் நிறைவிற்காக '4500 ஆண்டுகட்கு முன் இந்தியா' என்ற தலைப்புடன் வரைபடம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது

சிந்துவெளிக் கண்டுபிடிப்புகளுக்குள் ஆழும் முன், நூலைப் படிப்பார் இந்தியாவெங்கிலும் இத்தகு நாகரிகச் சிதைவுகள் பரந்துபட்ட அளவில் பரவியிருப்பதை உணருமாறு, 'பிற மண்டலங்களின் புதைபொருள்கள்' என்ற தலைப்பில் கங்கை, நருமதை, தபதி, கோதாவரி, கிருஷ்ணை, காவிரி, தாமிரபரணி, பெரியாறு இவற்றின் பாய்ச்சல் பகுதிகளையும் அங்கு நிலவிய நாகரிகங்களையும் தொட்டுக்காட்டி, ஆங்காங்கு நடந்த மேனாட்டார் அகழாய்வு நிகழ்ச்சிகளைச் சுருங்கக் கூறி, அதுபோல் 'நம் நாட்டுச் செல்வர்களும் அறிஞர்களும் இத்தகைய துறைகளில் ஆர்வங்காட்டி உற்சாகமும் ஊக்கமும் கொண்டு உழைத்தால், பிற நாடுகளைவிட நம் நாடு பலவகையான அற்புத விவரங்களை உலகுக்கு விளக்கி வியக்கவைக்கும் என்பதில் ஐயமில்லை' என்ற தம் அவாவையும் எதிர்பார்ப்பையும் வெளியிட்டுள்ளார்

படிப்போர்க்கு எளிதில் விளங்குமாறு புதையுண்ட நகரங்களின் அமைப்பு, அவற்றில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கட்டடச் சிதைவுகள், கிணறுகள், செய்குளம், செங்கற்கள், வீட்டுப்பொருள்கள், விளையாட்டுக்கருவிகள், முத்திரைகள், அவற்றின் வழி அறியப்பட்ட சிந்துவெளிக் கால விலங்குகள், பறவைகள் அக்கால மக்களின் உணவு, உடை, அணிகலன்கள், அவர்தம் வாணிபம், விளையாட்டுகள், தொழில்கள், கலைகள், சமயநிலை, இடுதல்-சுடுதல் பழக்கம், அவர்தம் எழுத்துக்கள் ஆகியவற்றை நிரல்படத் தொகுத்துத் தந்துள்ளார்.

புதையுண்ட நகரங்கள் பற்றிய அகழாய்வுச் செய்திகளைத் தாம் படித்தவாறே, அவ்வாய்வுகளைச் செய்த அறிஞர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களின் அடிப்படையிலேயே இந்நூலை இராசமாணிக்கனார் செய்துள்ளபோதும், தேவையான இடங்களில் நூலெங்கனும் தம்முடைய ஆய்வுச் சிந்தனைகளை உரியவாறு பொருத்திக் காட்டியுள்ளார். சிந்துவெளி நாகரிக வெளிப்பாடுகளுடன் தமிழிலக்கியச் சிந்தனைகளை ஒப்பிட்டுக் காட்டியிருக்கும் இடங்கள் குறிப்பிடத்தக்கன. 'உடன் இறக்கும் வழக்கம்' பற்றிச் சுட்டுமிடத்து நற்றிணை, குறுந்தொகைப் பாடலடிகளையும் மணிமேகலைப் பாடலடிகளையும் அடிக்குறிப்பில் இணைத்திருக்கும் இடம் இங்குக் கருதற்பாலது.

இவ்வாய்வு நூலின் பல இடங்களில் இராசமாணிக்கனார் சிந்துவெளி நாகரிகம் பற்றிய தம்முடைய கருத்துக்களை உரிய சான்றுகளின் அடிப்படையில் குறித்திருந்தபோதும், மிக முக்கியமான

கருத்தாகக் கொள்ளத்தக்கது ஒன்றுண்டு. 'பிராமி எழுத்துக்கள் தமிழ்மொழிக்கென்றே அமைக்கப்பட்டுப் பின்னர் வடமொழிக்கும் பயன்படும்படி புதிய குறிகள் உண்டாக்கப்பட்டன' என்னும் அவருடைய தீர்மானமான முடிவு, பி.என். சுப்பிரமணிய அய்யரின், 'பிராமிய லிபி முதலில் வடமொழிக்காக ஏற்படவில்லை என்றும் உயிர் எழுத்துக்களுள் அ, இ, உ ஆகிய மூன்றுக்கும் அதிகச் சிறப்பை அளிப்பதும் - மெய்யெழுத்துக்களுள் வர்க்க எழுத்துக்களைக் கொள்ளாததுமான ஒரு பாஷைக்கென அமைக்கப்பட்டுப் பின்னால் வடமொழிக்கு உபயோகப்படும்படி புதிய குறிகள் உண்டாக்கப்பட்டன என்றும் எண்ண வேண்டியுள்ளது. இந்தியாவிலுள்ள மொழிகளுள் இவ்விதம் உள்ளது 'தமிழ்' ஒன்றுதான். அங்ஙனமாயின், பிராமி முதலில் தமிழுக்கென அமைந்த லிபியாக இருத்தல் கூடுமா?' எனும் கேள்விக்குச் சரியான விடையாக அமைந்துள்ளது.

இன்றளவும் பிராமி வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்ததா அல்லது தமிழர் பயன்படுத்திப் பின் மௌரியரால் கொள்ளப்பட்டதா என்பது குறித்து உலக அளவிலான விவாதங்கள் கல்வெட்டறிஞர் களுக்கிடையில் நடந்துகொண்டுதான் உள்ளன கடந்த இருபதாண்டு களில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலுமாய்க் கண்டறியப்பட்ட புதிய பிராமி கல்வெட்டுகளும் பானையோடுகளில் அமைந்த பொறிப்புகளும் பின்னைய கருத்துக்கு வலிமையூட்டும் சான்றுகளைத் தந்துள்ளன.

இராசமாணிக்கனார் 1941இல் வெளிப்படுத்திப் போந்த இத்தெளிவான முடிவையொட்டியே இன்றைய கண்டுபிடிப்புகள் கண்காட்டுவது குறிப்பிடத்தக்கது. இந்தியத் தொல்லியல்துறைக் கல்வெட்டுப் பிரிவின் ஓய்வு பெற்ற இயக்குநர்கள் திரு கே வி இரமேஷ், திரு மு து சம்பத், இந்தியத் தொல்லியல் துறையின் சென்னை வட்ட மேனாள் கண்காணிப்பாளர் திரு தியாக. சத்திய மூர்த்தி, அதே துறையைச் சேர்ந்த கல்வெட்டாய்வாளர் திரு. சு. இராஜவேல் இவர்கள் 'பிராமி எழுத்துக்கள் தமிழர் கண்டுபிடிப்பாகவே இருத்தல் வேண்டும்' என்று கருதுகின்றனர் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. கா. இராஜனும் இக்கருத்தையே தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் வலியுறுத்தியுள்ளார் 2005இல் வலிமை பெற்று வரும் ஒரு கருத்தை ஏறத்தாழ அறுபதாண்டுகளுக்கு முன்னரே தம்முடைய ஆழ்ந்தகன்ற ஆய்வநுபவத்தால் கண்டுணர்ந்து உறுதிபட உரைத்திருக்கும் இராசமாணிக்கனாரின் நுண்மாண் நுழைபுலம் ஈண்டு கருதத்தக்கது.

**பல்லவர் வரலாறு**

1944இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் பதிப்பாக இராசமாணிக்கனார் எழுதி வெளியிட்ட 'பல்லவர் வரலாறு', அப்பெருந்தகையின் வரலாற்றாய்வுக் கண்ணோட்டத்திற்கு இன்றளவும் உரைகல்லாக விளங்குகிறது. ஏறத்தாழப் பத்து மறுபதிப்புகள் கண்டுள்ள இந்நூலை அறிமுகப்படுத்துமிடத்து, 'இவ்வாராய்ச்சி நூல் தமிழகத்திற்குப் புதிய முறையில் தரப்படும் தமிழ் விருந்தாகும். பல்லவரைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் பலவும் கட்டுரைகள் பலவும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன ஆயின், அவற்றிற் காணப்பெறும் செய்திகள் அனைத்தும் நன்கு ஆராய்ந்து தமிழில் இதுகாறும் செம்மையுற எழுதப்படவில்லை.

காலஞ்சென்ற வரலாற்றுப் பேராசிரியர் திரு.பி.டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் ஏறத்தாழ 20 ஆண்டுகட்கு முன்னர்த் தமிழில் பல்லவர் வரலாற்றை வெளிப்படுத்தினார்கள். அவ்வரலாற்று நூற்குப் பிறகு வெளிப்போந்த ஆராய்ச்சி நூல்கள் பல; சிறந்த கட்டுரைகள் பல; கிடைத்த கல்வெட்டுச் செய்திகள் பல. இவற்றை உளங்கொண்டு இந்நூல் எழுதப்பெற்றதாகும்' என்று இவர் கூறியுள்ளமை, 'வரலாறு அவ்வப்போது நிகழும் புதிய கண்டுபிடிப்புகளால் தொடர்ந்து புதுக்கப்படுவது' எனும் அறிஞர் கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

அறுபத்தாறு நூல்கள், இருபத்து மூன்று கல்வெட்டுத் தொகுதிகள், ஆராய்ச்சி இதழ்கள், திங்கள் இதழ்கள் இவற்றைப் பயின்று ஆழக் கற்ற பிறகே பல்லவர் வரலாறு எழுத முனைந்த இராசமாணிக்கனார், தம் இயல்பிற்கு ஏற்பப் பல்லவர் நகரங்களுள் பலவற்றை நேரிடையாகப் பார்வையிட்டு அங்குள்ள கோயில்களையும் கல்வெட்டுகளையும் ஆராய்ந்துள்ளார். அவருடைய நூலில் அவர் ஆய்வுசெய்த இடங் களாகக் காஞ்சிபுரம், மாமல்லபுரம், வல்லம், மண்டகப்பட்டு, பாகூர், திருச்சிராப்பள்ளி, திருவதிகை ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. ஏழு நில வரைபடங்கள் நூலில் இணைக்கப்பட்டுள்ளன அவற்றுள் ஒன்று பல்லவர் குடைவரைக் கோயில்கள் உள்ள ஊர்களைச் சுட்டுவதாகும்.

இருபத்தாறு இயல்களில் உருவாக்கப்பெற்றுள்ள இராசமாணிக்கனாரின் இவ்வரலாற்று நூலைக் குறிப்பிடுமிடத்து, 'இந்நூல் அயராத அவர் உழைப்புக்கு அழியாச் சின்னமாகும்' என்று ஹீராஸ் பாதிரியாரும், 'வரலாற்று நூல்களையும் செய்திகளையும் பயன்படுத்திக் கொள்வதில் தனித்தன்மையைக் காட்டியுள்ளார். அறிஞர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் தொடர்பாக,

யார் சொல்வதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், புதிதாக ஆராய்ந்து நுணுக்கமாகச் சீர்தூக்கிப்பார்த்து, தம்முடைய சொந்த முடிவுக்கு வருவது இராசமாணிக்கனார் இயல்பு' என்று பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையும், 'டாக்டர் இராசமாணிக்கனார் வரைந்த 'பல்லவர் வரலாறு' என்னிடம் இருந்தது. அதனைக் 'கல்கி' ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி என்னிடமிருந்து எடுத்துச் சென்றார். மூன்று மாதங்களுக்குப் பிறகு, 'அப்புத்தகம் என்னிடமே இருக்கட்டும். நான் எழுதும் சிவகாமியின் சபதத்திற்குத் தேவைப்படுகிறது. நீங்கள் வேறு ஒன்று வாங்கிக் கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டார். இதைக் கொண்டு டாக்டர் அவர்களின் ஆராய்ச்சிச் சிறப்பை நன்கு அறியலாம்' என்று திரு தொ மு பாஸ்கரத் தொண்டைமானும் கருத்துரைத்துள்ளனர்

இராசமாணிக்கனாரின் 'பல்லவர் வரலாறு' பல புதிய வரலாற்று முடிவுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது. அவற்றுள், இடைக்காலப் பல்லவர் போர்கள், இரண்டாம் கந்தவர்மன் மீட்ட 'கடிகை', நெடுமாறன், முதலாம் விக்கிரமாதித்தன் போர் (நெல்வேலிப் போர்), இராஜசிம்மன் காலத்துப் போர்கள் என்பன குறிக்கத்தக்கன

பிராகிருதச் செப்பேடுகளைக் காஞ்சிபுரத்திலிருந்து வெளியிட்ட முற்காலப் பல்லவர்கள் போலன்றி வடமொழியில் செப்பேடுகளை வெளியிட்டவர்களான இடைக்காலப் பல்லவர்களுள் பலர் ஆந்திரப் பகுதியிலிருந்தே அவற்றை வழங்கியுள்ளனர் இதற்கான காரணத்தைக் கூறவரும்போது, 'இடைக்காலப் பல்லவருட் பலர், ஏறத்தாழத் தமது காலம் முழுவதுமே (கி பி. 340-575) குப்தர், வாகாடகர், கதம்பர், சாளுக்கியர், சோழர் என்பவரோடு ஓய்வின்றிப் போர் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டதாலும் அடிக்கடி தமது பேரரசின் சில பகுதிகள் பகைவர் கைப்பட்டமையாலும் தமது தலைநகரமே கைமாறியதாலும் தம் செப்பேடுகளையும் காஞ்சியிலிருந்து விடுத்திலர் என்பது நன்கு அறியத்தக்கது' என்று குறிப்பிட்டுள்ளார். ஏறத்தாழ இதே காலகட்டத்தில் (கி.பி. 400-450) வெளியானதாகக் கருதப்படும் காளிதாசரின் இரகுவம்சத்தில் சோழர்கள் பற்றியும் காவிரி பற்றியும் குறிப்புள்ளது ஆனால் காஞ்சி பற்றியோ, பல்லவர் பற்றியோ குறிப்பேதுமில்லை இவ்விரண்டையும் இணைத்துப் பார்க்கும்போது இராசமாணிக்கனாரின் கூற்று ஏற்கத்தக்கதாகவே உள்ளது என்கிறார் பேராசிரியர் மா ரா. சிவஅரசி.

மூன்றாம் நந்திவர்மரின் வேலூர்ப்பாளையச் செப்பேடு இடைக்காலப் பல்லவ அரசர்களுள் ஒருவரான இரண்டாம் கந்தவர்மர்,

இருபிறப்பாளர்தம் கடிகாவைச் (கல்லூரியைச்) சத்தியசேனன் என்ற அரசனிடமிருந்து மீட்டார் என்கிறது. அதே பட்டயத்தில் அடுத்த கூற்றாக, குமாரவிஷ்ணு காஞ்சியைக் கைப்பற்றிய செய்தி காணப்படுகிறது இவ்விரு செய்திகளையும் தம் பல்லவர் வரலாற்றில் குறிப்பிடும் இராசமாணிக்கனார், 'கடிகா' என்ற சொல்லை ஆராய முற்பட்டு, கடிகா என்பது யாது என்று தமக்குத் தாமே வினவிக்கொண்டு விடைபெற முயன்று அதில் குறிப்பிடத்தக்க வெற்றியும் பெற்றுள்ளார்.

''கடிகா' என்பது கல்லூரியையும் அஃது இருந்த ஊரையுமே குறிக்கும். அது (காஞ்சியில் கல்லூரி இருப்பினும்) காஞ்சியைக் குறிக்காது காஞ்சி, 'பல்லவனாம்புரீ' என்று தெளிவாகக் கதம்பரது தாளகுண்டாக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. 'மயூரசர்மன் பல்லவனாம்புரீ(காஞ்சி) அடைந்து கடிகாவில் சேர்ந்தனன்' என்று தெளிவுற அதே கல்வெட்டுக் குறித்துள்ளது. ஆதலின், 'கடிகா' என்று வேலூர்ப்பாளையம் செப்பேட்டில் காணப்படுவதும் இரண்டாம் கந்தவர்மனால் கைப்பற்றப்பட்டதும் காஞ்சி அன்று; மேலும் அவனுக்குப் பின்வந்த அவன் மகனான குமார விஷ்ணு காஞ்சியைக் கைப்பற்றினான் என வரும் கல்வெட்டுத் தொடரும் இம்முடிவிற்கு அரண்செய்தல் காண்க.

வேலூர்ப்பாளையப் பட்டயத்தில், 'கடிகா' எனத் தனித்து வந்திருத்தலால், இது வடஆர்க்காட்டுக் கோட்டத்தில் பாணபுரத்திற்கு ஏழு கல் தொலைவில் உள்ள கடிகாசலம் எனப்படும் சோழசிங்கபுரமே ஆகும் இதனைக் 'கடிகை' என்றே திருமங்கையாழ்வார் குறித்துள்ளார். வடமொழிச் சொல்லான 'சீதா' என்பது தமிழில் 'சீதை' என வருதல் போலக் 'கடிகா' என்னும் வடசொல் தமிழில் 'கடிகை' எனப்பட்டது. வட ஆர்க்காட்டுக் கோட்டத்தில் உள்ள திருவலம் கல்வெட்டு ஒன்று (இரண்டாம் நந்திவர்மன் காலத்தது) இந்த இடத்தில்(கடிகாசலத்தில்) இருந்த கடிகையையே குறித்தலைக் காணலாம் இங்குச் சிறந்த பெருமாள் கோவில் இருக்கிறது. இங்கு வைணவர்க்கென்று ஒரு கல்லூரி (கடிகா) இருந்திருத்தல் இயல்பே. இக்கடிகாவை இரண்டாம் நந்திவர்மன் ஆதரித்தான் என்பது தெரிகிறது. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் 'கடிகா' என்றது கடிகாசலத்தைக் குறித்ததெனின், இவன் பெயரனான முன்றாம் நந்திவர்மன் காலத்தில் வேலூர்ப்பாளையப் பட்டயத்தில் 'கடிகா' என்ற சொல் கடிகாசலத்தையே குறித்ததாதல் வேண்டுமன்றோ?'

இதன்வழி இராசமாணிக்கனார் தரும் புதிய செய்திகளை பின்வருமாறு முறைப்படுத்தலாம் கடிகா என்பது காஞ்சி அன்று. கடிகா என்பது கல்லூரியையும் அஃது இருந்த ஊரையுமே குறிக்கும் கல்லூரி இருந்த ஊர் கடிகாசலம் எனப்படும் சோழசிங்கபுரமே ஆகும் கடிகாசலத்தையும் அதைச் சுற்றியிருந்த நிலப்பகுதியையும் இரண்டாம் கந்தவர்மன் வாகாடகரிடமிருந்து கைப்பற்றினான். இராச மாணிக்கனாரின் இக்கருத்தைக் காஞ்சிப் பல்லவர்களைப் பற்றி அரிய நூலொன்றைப் படைத்திருக்கும் ஆர். கோபாலன், 1990இல் பதிப்பிக்கப்பட்டிருக்கும் தமிழ்நாடு அரசின் 'தமிழ்நாட்டு வரலாறு பல்லவர்-பாண்டியர் காலம்' எனும் நூலில் தாம் எழுதியுள்ள பல்லவர் வரலாறு எனும் பகுதியில் ஏற்றுப் போற்றியிருப்பது இங்குக் கருதத்தக்கது இவ்வாய்வு பற்றிச் சுட்டும்போது, 'ஒரு பொருளை எடுத்துக்கொண்டு ஆய்ந்து ஒரு முடிவுக்கு வருமுன், அதைப்பற்றிப் பல கோணங்களில் ஆய்வு செய்வது வியப்பாக அமைகிறது. துரித முடிவு என்பது இராசமாணிக்கனாருடைய ஆய்வில் இருப்பதில்லை. 'கடிகா என்பது காஞ்சி அன்று' என்ற தலைப்பில் அவர் தம் ஆய்வுத்திறனை மிகச் சிறப்பாகக் காட்டியுள்ளார்' என்கிறார் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியர் ஏ என் பெருமாள்

பல்லவர் வரலாறு பற்றி ஆய்ந்தெழுதிய அறிஞர்கள் ஹீராஸ் பாதிரியார், ஆர் கோபாலன், சி.மீனாட்சி, துப்ரெய்ல், பி டி.சீனிவாச ஐயங்கார், சாரி இவர்களின் நூல்களினின்று ஆங்காங்கே கருத்து மாறுபடும் இராசமாணிக்கனார் தம்முடைய புதிய சிந்தனைகளுக்கு அடித்தளமாகக் கல்வெட்டுச் சான்றுகளையும் இலக்கியத் தரவுகளையும் முன் வைத்துள்ளார். 'சலசயனம், தலசயனம்' என்பவற்றின் பொருள் தெரியாமல் ஹீராஸ் பாதிரியார், 'மல்லைத் தலசயனம் என்பது மகாபலி புரத்தின் பழைய பெயர்' என்று தமது ஆராய்ச்சி மிக்க நூலில் தவறாக எழுதிவிட்டார்' என்று குறிப்பிடும் இவர், 'சலசயனப் பெருமாள் என்பதற்கு 'நீர் அருகில் பள்ளி கொண்டுள்ள பெருமாள்' என்பது பொருளாகும். இங்ஙனமே தரையில் பள்ளி கொண்ட பெருமாள் கோவில் 'தலசயனம்' எனப்படும். இக்கோவிலைத் திருமங்கை யாழ்வார் பாடியுள்ளார். இக்கோவில் பிற்காலத்தில் விஜயநகர மன்னரால் புதுப்பிக்கப்பட்டது' என்று தெளிவுபடுத்தியுள்ளார். தேவார காலத்து இசைக்கருவிகளை இவர் வரிசைப்படுத்தியிருக்கும் இடமும் குறிப்பிடத்தக்கது.

காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் காணப்படும் சிவபெருமானின் ஆடல்தோற்றம் ஒன்றை அடையாளம் காணமுடியாத

நிலையில், 'இது, நாட்டிய நூலில் உள்ள 108 வகைக் கரணங்களில் சேராதது' என்று டி.ஏ.கோபிநாதராவ் தம்முடைய நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார் இக்கருத்தைத் தம் நூலில் எடுத்தாண்டு, சிவபெருமானின் இது போன்ற அரிய ஆடல் தோற்றங்களைக் குறிப்பது போலவே அப்பர் பெருமாள், 'அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாததோர் கூத்து' எனப் பாடியுள்ளார் என்று இலக்கியம் கொண்டு சிற்பக்காட்சியை விளக்கியிருக்கும் இராசமாணிக்கனாரின் தனித்தன்மை, 'பல்லவர் வரலாறு' நூலெங்கினும் விரவியுள்ளது.

இது போலவே பல்லவர் நாட்டில் ஏற்பட்ட பஞ்சங்களைப் பற்றிப் பேசுமிடத்து, மணிமேகலை குறிப்பிடும் காஞ்சி நகர்ப் பஞ்சம் பற்றியும் பெரியபுராணம் சுட்டும் திருவீழிமிழலைப் பஞ்சம் பற்றியும் சுட்டி, இப்பஞ்ச காலத்தில் கோயில் பண்டாரம் மக்களுக்குத் துணை நின்றதை ஆலங்குடியிலுள்ள சோழர் காலக் கல்வெட்டொன்றின் துணையோடு எடுத்துக்காட்டி, வீழிமிழலையில் சம்பந்தரும் அப்பரும் பஞ்சம் தீர்க்கக் காசு பெற்றமையும் இத்தகையதே என விளக்குமிடமும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றாகும்.

இலக்கியம், கல்வெட்டு இரண்டையும் உரியவாறு ஒப்பிட்டு நோக்கினால் அவை ஒன்றுபடும் இடங்கள் மிகுதியாக இருப்பதை ஆய்வாளர் அறியமுடியும். ஆனால் இத்தகு நோக்கலுக்கு இரண்டு துறைகளிலும் ஆழ்ந்த புலமை இருத்தல் இன்றியமையாதது. இராசமாணிக்கனார் அத்தகு புலமை பெற்றிருந்தமையாலேயே அவரால் மிக எளிதாக இலக்கியங்களின் உண்மைத்தன்மையையும் இலக்கியப் பதிவுகள் கவிநயம் பூசப்பெற்ற வரலாற்றுச் சுவடுகளே என்பதையும் நிறுவமுடிந்தது

'பல்லவர் வரலாறு' எழுதப்பட்ட காலத்திற்குப் பிறகு, கடந்த அறுபதாண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் பல்லவர் தொடர்பான கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பல புதிய உண்மைகளை முன் வைத்திருந்தபோதும், இராசமாணிக்கனாரின், 'பல்லவர் வரலாறு' தெரிவித்திருக்கும் முடிவுகளில் அவை பெரிய மாற்றங்களை விளைவித்துவிடவில்லை. தமிழ்நாடு அரசால் 1990இல் வெளியிடப்பட்டுள்ள, 'தமிழ்நாட்டு வரலாறு பல்லவர் - பாண்டியர் காலம்' எனும் வரலாற்று நூல் பல்லவர் வரலாறு பேசும் பகுதியில் இருபத்தொரு இடங்களுக்கு மேல் இராசமாணிக்கனாரின் நூலை மேற்கோளாகக் கையாண்டுள்ளமை ஒன்றே அந்நூலின் நிலைப்புத் தன்மை சுட்டப் போதுமானதாகும்.

இராசமாணிக்கனாரின் வரலாற்றாய்வு நூல்களில் முதலில் வைத்து எண்ணத்தக்கது பல்லவர் வரலாறே ஆகும். எளிய, இனிய நடையும் தரவுகளை முத்துக் கோத்தாற் போல் தொடரொழுங்கு கெடாமல் இணைத்திருக்கும் பாங்கும் விவாதங்களைச் சுவைபட நிகழ்த்தி, முந்தைய கருத்துக்களை மென்மையாக மறுத்து, புதிய கருத்துக்களை இலக்கிய, கல்வெட்டு, செப்பேட்டுச் சான்றுகள் கொண்டு வலிமையுடன் முன் நிறுத்தியுள்ள முறையும் இராசமாணிக்கனாரின், 'பல்லவர் வரலாறு' நூலைத் தமிழ்நாட்டு வரலாற்றாய்வாளர்களிடையே அழுத்தமாகக் காலூன்றச் செய்துவிட்டது எனலாம்.

## சோழர் வரலாறு

வரலாற்றாய்வு நூல்கள் வரிசையில் இவருடைய மூன்றாம் நூலாக வெளிவந்தது சோழர் வரலாறு. 1947இல் முதற்பதிப்புக் கண்ட இந்நூல் மூன்று பாகங்கள் கொண்டது 1952இல் மறுபதிப்புச் செய்யப்பட்ட இந்த நூலிற்கு முன்னுரை வழங்கியுள்ள பேராசிரியர் கே ஏ.நீலகண்ட சாஸ்திரியார், 'வித்வான் மா இராசமாணிக்கம் தம் நூலை நல்ல ஆராய்ச்சி முறையில் எளிய நடையில் யாவருக்கும் பயன்படக்கூடிய வழியில் எழுதியிருக்கிறார்கள் என்பது சில பக்கங்களைப் படித்தாலே விளங்கும். நவீன ஆராய்ச்சி நூல்களை அவர்கள் நன்கனம் கற்றறிந்திருப்பதோடு, சுயமாகவும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டவர்கள். இம்மாதிரி நூல்கள், அவ்வப்போது கிடைக்கும் ஆய்ந்த தீர்மானங்களை எல்லோரும் எளிதில் அறிந்து கொள்வதற்கு வேண்டிய நல்ல கருவிகளாகும்' என்று குறிப்பிட்டுள்ளார்

'சோழர் வரலாறு' நூலை 25.1 1947இல் படித்து முடித்த நிலையில், 'நடுநிலையில் நெடுநாளாய்ந்து, பழம்பாடல், இடைக்காலச் சான்றோர் நூல், கல்வெட்டு, செப்பேடுகள் அனைத்தும் துழாவி, தற்கால ஆராய்ச்சியாளர் கருத்துக்களை அலசி, நேர்மை வழுவாத நன்முடிபுகளைக் கண்டு வெளியிட்ட தமிழ்ச் சரித வரிசையில் தங்கள் கட்டுரைகள் சிறப்பிடம் பெறுவதில் ஐயமில்லை என்றும் தம் நட்பையும் நலனையும் விரும்புகிறேன்' என்று அகம் குளிர்ந்து இளசை கிழார் நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் எழுதியமை இராசமாணிக்கனாரின் உழைப்பிற்கும் ஆய்வுத் திறத்திற்கும் உகந்த பாராட்டாக அமைந்தது.

'சோழர் வரலாறு' நூலை உருவாக்கிய வரலாறு கூறுமிடத்துப் பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியாரின் 'சோழர்கள்' நூலையும்

திரு டி ஏ.கோபிநாதராவின் 'சோழ வம்ச சரித்திரச் சுருக்கம்' எனும் சிறிய நூலையும் குறிப்பிட்டு, 'தனிப்பட்ட முறையில் அறிஞர் சிலர் தனித்தனிச் சோழ அரசரைப் பற்றிக் கல்லூரி வகுப்புகட்குப் பயன்படும் வகையில் சில நூல்களை வெளியிட்டுள்ளனர். இவை அனைத்தின் துணையைக் கொண்டும் ஆண்டுதோறும் புதியனவாக வெளிவந்துள்ள கல்வெட்டறிஞர் அறிக்கைகளைக் கவனித்தும் தமிழ் நூல்களைப் பன்முறை ஆராய்ந்தும், ''தமிழ்ப் பொழில்'', ''செந்தமிழ்'' முதலிய திங்கள் வெளியீடுகளில் வந்துள்ள புதிய கல்வெட்டுகளை ஆராய்ந்தும் தஞ்சை - கங்கைகொண்ட சோழபுரம்-திரிபுவனம்-தாராசுரம் முதலிய இடங்களில் உள்ள சோழர் திருக்கோவில்களையும் கல்வெட்டு களையும் நேரிற் பார்வையிட்டும் இந்நூல் வரிசை எழுதப்பட்டுள்ளது' என்று தம் முயற்சியின் அருமையைப் படிப்பார் உணருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

சோழர்களைப் பற்றிப் பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்த நிலையில் தாமும், 'சோழர் வரலாறு' எழுத நேர்ந்தமைக்கான காரணம் விளக்குமிடத்து, 'ஆராய்ச்சி என்பது முடிவற்றது நாளும் வளர்ந்து வருவது. ஆதலின், மேற்கண்ட நூல்கள் வெளிவந்த பிறகு சில வரலாற்றுச் செய்திகள் புதியனவாக அறிஞரால் வெளியிடப்பெறுதல் இயல்பே அன்றோ? அங்ஙனம் இன்றளவும் வெளிவந்துள்ள குறிப்புகளும் பிறவும் வரலாற்று முறைக்கும் தமிழ் முறைக்கும் மாறுபடா வகையில் நன்கு ஆய்ந்து வெளியிடலே இந்நூலின் நன்னோக்கமாகும்' என்று கூறியுள்ளார்.

மூன்று பாகங்களாய் அமைந்துள்ள இந்நூலின் முதற்பாகம், சங்க காலச் சோழர்களைப் பதின்மூன்று தலைப்புகளின் கீழ் விரிவாக ஆராய்ந்துள்ளது. வரலாற்று வரைவியலில் இராசமாணிக்கனார் பெற்றிருந்த ஆழ்ந்த பயிற்சியும் வியத்தகு தெளிவும் இந்நூலின் முதல் இயலிலேயே பளிச்சிடுகின்றன. 'சோழர் வரலாற்றுக்குரிய மூலங்கள்' எனும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வியல், ஒரு தேர்ந்த வரலாற்று வரைவியலாளரின் கண்ணோட்டத்தில் வடிவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

மூன்று காலகட்டங்களில் அமையும் சோழர் வரலாற்றைச் செவ்வனே வடிவமைக்க, அவ்வக் காலங்களில் முதன்மைப்படும் மூலங்களுக்கு இராசமாணிக்கனார் முக்கியத்துவம் தந்துள்ளார். சங்க காலச் சோழர் வரலாறு எழுதச் சங்க இலக்கியங்களையும் காப்பியங் களையும் வெளிநாட்டார் பயணக் குறிப்புகளையும் பெரிதும்

சார்ந்துள்ள இவர், இடைக்கால வரலாற்றை எழுதச் செப்பேடுகளின் உதவியை நாடியுள்ளார். துணைக்குப் பாலி, தமிழ், வடமொழி நூல்களும் திருமுறைகளும் நாலாயிரப் பிரபந்தமும் பிற தமிழ் இலக்கியங்களும் கொள்ளப்பட்டுள்ளன பிற்காலச் சோழர் வரலாற்றை அறிய, 'ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பெருந்துணை புரிகின்றன' என்று அறிவித்து, உடன், சோழர் வரலாற்றை உள்ளவாறு உணரப் பேருதவி செய்வன வரலாற்றுக்கு மூலமாக அமைந்துள்ள கோவில்களே ஆகும்' என்றும் தெரிவிக்கிறார்

தமிழ்நாட்டு வரலாற்றாசிரியர்கள் எவரும் கருதாத இப்புதிய சிந்தனைத் தளம் இராசமாணிக்கனாரின் தனிப்பெரும் கண்டறிதல் எனலாம். கோயில்களையே சான்றுக் களங்களாய்க் கொண்டமையால் தான், 'இக்கோவில்களை முற்றப் பரிசோதித்துச் சோழர் காலச் சிற்ப, ஓவிய, கட்டடக் கலைகளின் வளர்ச்சியைச் சிறந்த முறையில் ஆராய்ந்து நூல் எழுதினோர் எவருமில்லை என்பது வருந்தத்தக்க செய்தியாகும்' என்று அவரால் தெளிவுபடக் கூறமுடிந்தது. கோயில்கள் சார்ந்த ஆய்வு தமிழ்நாட்டு வரலாற்றுக்கு எவ்வாறெல்லாம் உதவக்கூடும் என்பதை, 'கோவில்களில் உள்ள பல வகைச் சிற்பங்களைக் கொண்டு சோழர் சிற்பக்கலை உணர்வை அறியலாம். ஓவியங்களைக் கொண்டு சோழர் கால ஓவியக்கலை வளர்ச்சியை அறியலாம். மக்களுடைய நடை, உடை, பாவனை, அணிகள் முதலியன அறியலாம்; கோவில் கட்டட அமைப்பைக் கூர்ந்து நோக்கி, பல்லவர் காலக் கட்டடக்கலை, சோழர் காலத்தில் தொடர்புற்று வளர்ந்து வந்தது என்பதை உணரலாம்' என்று வகைப்படுத்தி விளக்கியுள்ளார்.

இராசமாணிக்கனாரின் 'சோழர் வரலாறு' நூலைப் படிப்பார் எவரும் தமிழ்நாட்டில் சோழ மரபு சங்க காலந்தொட்டு கி.பி. 1280வரை தொடர்ந்து இருந்தமையை அறிவதுடன், தமிழ்நாட்டின் பெருமையைப் பல்லாற்றானும் பல பரிமாணங்களில் உலகளாவிய அளவில் உயர்த்தியவர்கள் சோழர்களே என்பதையும் தெளிவர். சங்க இலக்கியப் பின்புலமற்றவர்கள்கூடச் சங்க காலத்தில் தமிழ்நாட்டில் நிலவிய அரசியல், மக்கள் வாழ்க்கை அறிய உதவுமாறு முதல் பாகத்தின் இறுதி இயல் அமைக்கப்பட்டுள்ளது முப்பத்தாறு பக்க அளவில் சங்க கால வாழ்க்கைச் சூழலை விளக்கும் இவ்வியலில் அன்றைய புகாரும் இன்றைய புகாரும் ஒப்பிடப்பட்டிருப்பது சிறப்பாகும். மேற்பரப்பாய்வு, கோயிலாய்வு, முக்கியமான ஊர்களில் மூத்த குடிமக்களுடன் கலந்துரை எனப் பலவழிகளில் அவர் தரவுகள் திரட்டியிருப்பதை இவ்வியலின் உள்ளீடு வெளிச்சப்படுத்துகிறது.

இரண்டாம் பாகத்தின் தொடக்கத்தில், 'சோழரது இருண்ட காலம்' என்ற தலைப்பில் தமக்குக் கிடைத்த அனைத்துச் சான்றுகளையும் முழுக்கப் பயன்படுத்திக்கொண்டு சங்க காலத்திற்குப் பின்னும் விஜயாலய எழுச்சிக்கு முன்னுமாய், அதாவது கி.பி.200-கி.பி.850 வரையிலமைந்த சோழர் வரலாற்றை இயன்றவரையில் உருவாக்கித் தந்துள்ளார் இப்பெருந்தகை. இக்காலகட்டத்திற்குரிய சோழர் வரலாற்றை இந்த அளவிற்கு விரிவுறத் தமிழில் வெளியான வேறெந்த சோழர் வரலாற்று நூலும் கொண்டிருக்கவில்லை என்பது இராசமாணிக்கனாரின் உழைப்பிற்கும் தரவுத் தேடலில் அவர் காட்டிய முனைப்பிற்கும் சிறந்த சான்றாகும்

இக்காலகட்டத்தில் தன்னிகரற்று விளங்கிய கோச்செங்கட் சோழனின் வரலாற்றைப் பல சான்றுகளின் அடிப்படையில் விரிவுற விளக்கியுள்ள இராசமாணிக்கனார், பல்லவ அரசரான புத்தவர்மனுடன் போரிட்ட சோழ அரசர் கோச்செங்கணானாகலாம் என்று இலக்கியச் சான்றுகளின் பின்னணியிலும் வேலூர்ப்பாளையம் செப்பேட்டின் அடிப்படையிலும் கருத்துத் தெரிவித்துள்ளார். இக்கருத்துப் பின்னாளைய வரலாற்றாசிரியர்களால் கூடுதல் சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது

இரண்டாம் பாகத்தின் பெரும்பகுதியும் மூன்றாம் பாகம் முழுமையும் விஜயாலய மரபுச் சோழ அரசர்களின் வரலாற்றினைக் கொண்டுள்ளன விஜயாலயர் தொடங்கி மூன்றாம் இராஜேந்திரர் வரையிலான அனைத்துச் சோழ அரசர்களின் வரலாற்றையும் விதந்து பேசும் இப்பகுதியில், சோழப் பேரரசர்கள் சிலரின் கோயிற்பணிகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன சோழர் வரலாறு பேசும் வேறெந்தத் தமிழ் நூலும் இந்த அளவில், சோழர் கோயில்களைப் பற்றிய தரவுகளைக் கொண்டிருக்கவில்லை முதல் இராஜராஜரின் வரலாற்றை விரித்துரைக்கும் பகுதியில் அவ்வேந்தர் தஞ்சாவூரில் எழுப்பிய இராஜ ராஜீசுவரத்தைப் பற்றி மிக விரிவாகப் பதினாறு பக்கங்களில் கட்டுரைத்துள்ள இப் பேராசிரியர் 1934 செப்டம்பரில் தாம் இக்கோயிலை நேரிடையாய்ப் பார்த்து ஆராய்ந்தமையையும் அது போழ்து, 'சோழர் கோயில் பணிகள்' என்னும் அரிய நூலை எழுதிய ஜே.எம். சோமசுந்தரம் பிள்ளை உடனிருந்தமையையும் அடிக்குறிப் பொன்றில் சுட்டியுள்ளார்.

இராஜேந்திர சோழரின் கங்கைகொண்ட சோழபுரத்தை 25.4 1942 இல் பார்வையிட்ட இராசமாணிக்கனார், அம்மன்னரின் வரலாற்றைச் சொல்லும் பகுதியில், தம்முடைய நேரிடை ஆய்வில் கிடைத்த தரவு

களைப் பரவலாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் கங்கைகொண்ட சோழீசுவரத்தைப் பற்றியும் மாளிகைமேட்டைப் பற்றியும் கங்கை கொண்ட சோழபுரத்தைச் சூழ உள்ள சிற்றூர்களின் இன்றைய நிலை பற்றியும் அவர் பகிர்ந்து கொண்டிருக்கும் செய்திகள் அரியவை. ஆங்கிலத்திலும் தமிழிலுமாய் வெளியாகியிருக்கும் பிற சோழர் வரலாற்று நூல்களில் காணப்பெறாதவை குறிப்பாக மாளிகை மேட்டைப் பற்றியும் கங்கைகொண்ட சோழீசுவரர் கோயிலின் அன்றைய நிலை குறித்தும் இராசமாணிக்கனார் தெரிவித்துள்ள கவலை தோய்ந்த கருத்துக்களும் அவற்றைச் சீர் செய்வதற்கான வழி காட்டல்களும் அவரை வெறும் வரலாற்றாசிரியராக மட்டும் நிறுத்தி விடாது, சமுதாய அக்கறையுடைய பொறுப்புள்ள மனிதராகவும் வெளிக்கொணர்கின்றன

இராசமாணிக்கனாரின் 'சோழர் வரலாறு' மூன்று வகையில் தனித்தன்மையது தமிழ்நாட்டில் இதுநாள்வரையும் வெளிவந்துள்ள சோழர் வரலாற்று நூல்களில் இதுவே சோழர்களைத் தோற்றந்தொட்டு முடிவுவரை விரிவாகப் படம்பிடிக்கும் ஒரே நூலெனலாம். சங்கச் சோழர்களுக்கும் விஜயாலய மரபுச் சோழர்களுக்கும் இடைப்பட்டு வாழ்ந்த சோழ மரபினரைக் கிடைத்திருக்கும் அனைத்துச் சான்றுகளின் துணை கொண்டும் திரட்டி முன்வைக்கும் முதல் தமிழ் நூலும் ஒரே தமிழ் நூலும் இதுவேயாகும் நாயன்மார்களுள் ஒருவராகக் கருதப் பட்டு, சமயப் போர்வையில் சிக்கியிருந்த கோச்செங்கட் சோழரை நன்கு வெளிக்கொணர்ந்து, அவர் வரலாற்றை வெளிச்சப்படுத்தும் சான்றுகளைத் தேடித் தொகுத்து, அவரது ஆற்றலையும் வெற்றி களையும் சிறப்புக்களையும் ஆய்வுநெறியில் நின்று விதந்தோதி யுள்ளமை குறிப்பிடத்தக்க முயற்சியாகும் தேவையான இடங்களை யெல்லாம் நேரில் பார்வையிட்டு ஆராய்ந்து, அவற்றை நூலில் உரிய இடங்களில் உரியவாறு இணைத்து வரலாற்றைக் கள ஆய்வுகள் செழுமைப்படுத்துமாற்றைத் தெளிவுபட விளக்கியிருக்கும் பாங்கு இந்நூலின் மற்றொரு தனித் தன்மையாக மிளிர்கிறது.

## தமிழ்நாட்டு வடஎல்லை

இந்தியா விடுதலை பெற்ற நிலையில், மொழிவாரி மாகாணப் பிரிப்பு பற்றிய குரல்கள் ஒலிக்கத் தொடங்கிய காலகட்டத்தில், 'தமிழ்நாட்டு வடஎல்லை' என்னும் நூலை இராசமாணிக்கனார் எழுதி வெளியிட்டார். 1948இல் வெளியான இந்நூலின் முன்னுரையில்,

'தமிழ்நாட்டு வடஎல்லை எனப் பெயர் கொண்டு வெளிவரும் இந்நூல் இலக்கியம் - வரலாறு - கல்வெட்டுக்கள் என்பவற்றைத் துணையாகக் கொண்டு ஆராய்ந்து எழுதப்பெற்றதாகும். சங்க காலப் புலவர் முதல் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த படிக்காசுப் புலவர் ஈறாக எல்லாத் தமிழ்ப்புலவரும் 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய வடமொழிப் புலவரும் வேங்கடமே தமிழக வடஎல்லை என்பதை வற்புறுத்திச் சென்றனர். வரலாறும் கல்வெட்டுக்களும் வடபெண்ணையாறே தமிழகத்தின் வடஎல்லை என்பதை வலியுறுத்துகின்றன சித்தூர் - தென்நெல்லூர் ஜில்லாக்கள் தொண்டை நாட்டின் பகுதிகளே என்பதை அவ்விரு ஜில்லாக்களிலும் உள்ள கல்வெட்டுக்கள் மெய்ப்பிக்கின்றன.

இந்த உண்மைகளைத் தமிழரும் தெலுங்கரும் உணர்ந்து - மண்ணாசை மறந்து - நேர்மையான முறையில் அமைதியும் அறமும் துணைசெய்யத் தமிழ்நாட்டின் இரு கண்களாகிய திருவேங்கடம் - திருக்காளத்தி ஆகிய இரண்டையும் தன் அகத்தே பெறும் தமிழ் மாகாணத்தைப் பிரிக்க நன்முறையில் முயலவேண்டும் என்பதைக் குறிப்பதே இவ்வாராய்ச்சி நூலின் நோக்கமாகும்' என்று மிகத் தெளிவான முறையில் நூல் எழுதிய காரணத்தை வெளியிட்டுள்ளார் இவர் நோக்கம் பலர் முயற்சிக்குப் பிறகும் நிறைவேறாமல் போனது எனினும், வரலாற்று உண்மைகள் உரிய காலத்தே இவரால் துணிவுடன் முன் வைக்கப்பட்டமையும், அவற்றை அகழ்ந்தெடுக்க இப்பெருந்தகை மேற்கொண்ட அருமுயற்சியும், 'நாட்டைக் காப்பதும் சமுதாயத்தை வழிநடத்துவதும் நல்லறிவாளர் கடமை' எனும் கோட்பாட்டினர் இவர் என்பதை நன்கு புலப்படுத்துகின்றன

'தமிழ்மொழி பற்றியும் இலக்கியம் பற்றியும் பேசவும் எழுதவும் நாட்டில் சிலருண்டு. ஆனால், தமிழர் வரலாற்றைப் பற்றிப் பேசவோ, எழுதவோ ஆட்களில்லை. தமிழகத்து வரலாறு தமிழர்களாலும் மற்ற வர்களாலும் நன்கு அறியப்படல் வேண்டும் அதனை அறிந்தால்தான மொழி, இலக்கியம், சமுதாயம், சமயம் பற்றிய தெளிவு பிறக்கும்' எனக் கூறும் இராசமாணிக்கனார் அதையே தம் குறிக்கோளாய்க் கொண்டு, வாழ்நாள் பணியாய் எண்ணற்ற வரலாற்றுப் படைப்புகளை உருவாக்கித் தந்துள்ளார் முதன்மைச் சான்றுகளைப் பரவலாகப் பயன் படுத்தி, இரண்டாம் நிலைச் சான்றுகளைப் பழுதறப் பயின்று, வரலாற்று வரைவியல் வழி நின்று அறிவியல் கண்ணோட்டத்துடன் அவர் உருவாக்கித் தந்திருக்கும் ஆய்வு நூல்கள் தமிழர்க்கு அப்பெருந்தகை வழங்கிச் சென்ற இணையற்ற வரலாற்றுக் கொடைகளெனலாம்

# 5
# கோயிலாய்வும் கல்வெட்டாய்வும்

**கோ**யில்கள் வரலாற்றுக் களங்கள் என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடையவர் இராசமாணிக்கனார் அதனாற்றான் 'சோழர் வரலாறு' நூலில் வரலாறு எழுதுவதற்கான முதன்மைச் சான்றுகளுள் ஒன்றாய்க் கோயில்களைக் குறித்துள்ளார் வரலாற்று நோக்கிலமைந்த அவருடைய ஆய்வு நூல்கள் அனைத்திலும் அவ்வவ் வரலாற்றிற்குரிய கோயில்களைப் பார்வையிட்டமை, அங்குப் படித்த கல்வெட்டுகளைப் பற்றிய செய்திகள், ஆங்குள்ள கட்டட அமைப்புகளை, சிற்பங்களை ஆராய்ந்து பெற்ற தரவுகள் இவை தவறாமல் இடம்பெற்றிருக்கக் காணலாம். கோபுரம், விமானம், மண்டபம், தூண், தோரணம் என ஒரு கோயில் சார்ந்த முதன்மையான கட்டட அமைப்புகள் அனைத்தையும் ஆராய்ந்து அவை வரலாற்றுப் போக்கில் பெற்ற மாறுதல்களையும் குறித்துள்ளார்

'சோழர் வரலாறு' நூலில், முதலாம் இராஜராஜரின் இராஜ ராஜீசுவரம், முதலாம் இராஜேந்திரரின் கங்கை கொண்ட சோழீசுவரம், இரண்டாம் இராஜராஜரின் தாராசுரம், மூன்றாம் குலோத்துங்கரின் திரிபுவன வீரேசுவரம் ஆகிய கோயில்களை மிக விரிவான நிலையில் ஆராய்ந்து எழுதியுள்ளார் சோழர் காலக் கோபுரங்களைப் பற்றிய கண்ணோட்டமும் விமானங்களைப் பற்றிய குறிப்பும், இராஜ ராஜீசுவரத்தின் பல்வேறு காலக் கட்டமைப்புகள் பற்றிய தெளிவான சுட்டலும் குறிப்பிடத்தக்கவை தாராசுரம் கோயிலின் நாயன்மார் சிற்பங்கள் இவருடைய கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. பெரியபுராண ஆராய்ச்சிக்கும் சைவ சமய வளர்ச்சி கூறவும் இச்சிற்பத் தொடரை இவர் நன்கு பயன்படுத்தியுள்ளார்.

1947இல் வெளியான இவரது, 'ஆராய்ச்சிக் கட்டுரைகள்' எனும் நூலில் 'தமிழகத்துக் கோயில்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையின் தொடக்கத்தில், 'தமிழகத்தில் இன்றுள்ள கோவில்கள் எப்போது தோன்றின? அவற்றிற்கு மூலம் என்ன?

கோவிற்கலை உணர்வு தமிழர்க்கே உரியதா? பண்டைக் காலத்திற் கோவில்கள் எவற்றிற்குப் பயன்பட்டன? என்பன போன்ற கேள்விகட்கு விடை காணலே இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் நோக்கமாகும்' என்று தெரிவித்துள்ள இவர், கட்டடக்கலை நூல்களைப் பலவாகப் பயின்றுள்ளமை, இக்கட்டுரையில் தரப்பட்டுள்ள அடிக் குறிப்புகளாலும் உள்ளீட்டாலும் அறியக்கிடக்கின்றது

'தென்னாட்டுக் கட்டடக்கலை தமிழகத்திற்கே உரியது' எனும் கோட்பாடுடைய இவர், இதே நூலில் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், ஏகாம்பரநாதர் கோயில், விழுப்புரம் - புதுச்சேரிப் பெரு வழியிலுள்ள திரிபுவனைக் கோயில், திருஆண்டார் கோயில் இவற்றைப் பற்றி விரிவான கட்டுரைகள் எழுதியுள்ளார். திண்டிவனத்திற்கு அருகிலுள்ள திருவக்கரைக் கோயில் பற்றிய இவரது கட்டுரை 'எல்லோரும் வாழ வேண்டும்' என்னும் நூலில் வெளியாகியுள்ளது. இவற்றுள் திரிபுவனைக் கோயிலும் திருஆண்டார் கோயிலும் 1-6-1941 இல் புதுவைக் கல்விக் கழகத்து நண்பர்கள் துணையுடன் ஆராயப்பட்டன திரிபுவனைக் கோயில் ஆய்வில், 'மதிற் சுவரெடுத்த வேலையாட்களின் அறியாமையால் கல்வெட்டுப் பகுதிகள் பல, வைப்பு முறையினின்றும் நீங்கிக் கண்டவாறு கண்ட இடங்களில் வைத்துக் கட்டப்பட்டுள்ளமை கல்வெட்டறிஞர் உள்ளத்தைக் கலக்குவ தாகும் இப்பழங் கோவிலைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கற்கள் கோவிலுக்கு அண்மையில் இன்றும் சிதறிக் கிடக்கின்றன' என்று கோயில் அன்றிருந்த நிலைமையைத் துன்பத்தோடு பகிர்ந்துகொள்ளும் இவர், அக்கோயிலின் மண்டபப் படிகளில் தாம் கண்ட சிற்பங்களின் செழுமை ப்பற்றியும் பதிவுசெய்துள்ளார்.

## திருஆண்டார் கோயில்

திருஆண்டார் கோயில் பற்றிக் குறிப்பிடும்போது, 'திரிபுவனையை அடுத்துள்ள இந்தச் சிற்றூரில் உள்ள சிவன் கோவில் பழைமை வாய்ந்தது. கோயிலின் நான்கு மதிற்சுவர்களும் இப்பொழுது இடிந்துகிடக்கின்றன மதில் நீளம் சுமார் 150 கெஜம்; அகலம் சுமார் 100 கெஜம். கனம் 4 $^{1}/_{2}$ அடி. இம்மதில் சிற்சில இடங்களில் 6 அடி உயரம் வரை இருக்கின்றது. பல இடங்களில் தரைமட்ட அளவு இடிந்திருக்கிறது' என்று மதிற் சுவர் தொடங்கி விமானம் ஈறாகக் கோயிலின் அனைத்துப் பகுதிகள் பற்றியும் தம் பார்வைக்குக் கிடைத்த தரவுகளை நன்கு பதிவுசெய்துள்ளார். விமானத்தைக் குறிப்பிட

நற்றமிழில், 'இறையிடம்' என்னும் புதிய கலைச்சொல்லைப் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

திருஆண்டார் கோயிலின் சுற்றாலைத் திருமுன்கள், இறையிடம் இவற்றில் இடம்பெற்றிருந்த சிற்பங்களைப் பற்றிய இவருடைய விரிவான வண்ணனைகள் சிற்பஇயலிலும் இவருக்குப் பயிற்சி இருந்தமையை மெய்ப்பிக்கின்றன ஆடற்சிற்பங்கள், இறைத் திருமேனிகள், மனித உருவங்கள், விலங்குகள், அழகூட்டல்கள் என இனம் பிரித்துச் சிற்பங்களை விளக்கும் முறை கட்டுரைப் படிப்பாரைத் திருஆண்டார் கோயிலை ஒரு முறை வலம் வந்தது போன்ற உணர்விற்கு ஆட்படுத்துவது சுட்டத்தக்கது. மேற்குச் சுவரிலுள்ள சிற்பங்களை விவரிக்குமிடத்து, சுவரில் செதுக்கிய நிலையிலும் தனித்துச் செதுக்கிச் சுவரில் இடம்பெறச் செய்த நிலையிலும் ஆறு இடங்களில் சிற்பங்கள் இருந்தமையைக் கூறியுள்ளார். இவற்றில் அடையாளம் காணமுடியாத சிற்பங்கள், விளங்கரத நிலையிலிருந்த சிற்பங்கள் இவற்றையும் சுட்டிக்காட்டியிருப்பது இவருடைய ஆய்வு நேர்மைக்குச் சான்றாகும்

## திருவக்கரை

திருவக்கரை பயணத்தைக் கூறுமிடத்து, 'திருவக்கரை மிகச் சிறிய கிராமம். அங்கு நான்கு அல்லது ஐந்து தெருக்களே உண்டு. ஆற்றைக் கடந்து கோவிலை அடையும் பாதை நெடுக அழிந்த கற்சிலைகளின் பகுதிகளும் கற்பாறைகளும் கற்சிலைகளும் மரம் போன்ற கற்பாறைகளும் சிதறிக் கிடக்கும் காட்சி, 'திருவக்கரை பழைமையும் பெருமையும் பெற்றிருந்த ஊர்' என்பதை அறிவிப்பது போலக் காணப்பட்டது' என்று குறிப்பிடும் பேராசிரியர், இக்கோயில், 'ஏனைய சிவத்தளிகளைப் போலவே பெரிய கோவிலாக இருக்கின்றது. புறச்சுவர்கள் பழுதுபட்ட நிலையில் உள்ளன. திருச்சுற்றுகள் முட்செடிகள் முளைக்க இடம் தந்துவிட்டன திருச்சுற்றைச் சுற்றுவோர் கால்களில் முள்தைக்கப் பெறாமல் உள்சென்று மீளுதல் அருமை' எனக் கோயில் அன்றிருந்த நிலையை அப்படியே படம்பிடித்துள்ளார்.

கோயில் தூண்களை ஆராய்ந்த நிலையில், 'எல்லாத் தூண் களிலும் அழகிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் நடனம், இசை இவற்றிற் பங்கு கொண்டுள்ளமை, பழந் தமிழர் நடனக்கலையையும் இசைக்கலையையும் நமக்கு அறிவித்து ஊக்குவன போலக் காணப்படுகிறது. வெளித் தூண்களில் எல்லாம்

உடற்பயிற்சிக்கு உரிய பலவகை விளையாட்டுகள், மாடுகளை ஏறி அடக்கல், ஒரே தட்டின் மீது நால்வர் நிற்றல் முதலியன செதுக்கப்பட்டுள்ளன. இவற்றால் பழந்தமிழர் உடற்பயிற்சி முறைகளில் கொண்டிருந்த கவலை நன்கு வெளியாகிறது' என்று பழஞ்சிற்பங்கள் வழித் தமிழர் பண்பாடு வெளிச்சமாகும் வகை காட்டியுள்ளார்

'திருக்கோயில்' திங்களிதழில் வெளியாகியுள்ள, 'தமிழ் நூல்களில் சிற்பக்கலை I' (1964), 'தமிழ் நூல்களில் சிற்பக்கலை II' (1967) எனும் இரண்டு கட்டுரைகளும் சிற்பக்கலையில் இவருக்கிருந்த ஈடுபாட்டையும் தோய்வையும் தெளிவையும் காட்டுவதுடன், நூல்களை நுணுகி ஆராய்ந்து கருத்துத் தேடல் செய்வதில் இவருக்கிருந்த வல்லமையையும் புலப்படுத்துகின்றன. இத்தகு அடிப்படைச் செய்திகளை அறிந்திருந்தமையால்தான் இவரால் திருக்கோயில்களை அநுபவிக்கவும் அவற்றில் பிரதிபலித்த சமுதாயச் சுவடுகளை மக்களுக்கு எடுத்துக்காட்டவும் முடிந்தது.

## ஏகாம்பரநாதர் கோயில்

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலைப் பற்றிய கட்டுரையில், 'திருவேகம்பம் பல்லவர் காலத்தில் சிறிய அளவிலும் பின்னர்ச் சோழர் ஆட்சியில் விரிவடைந்தும் அதன் பின்னர் விஜயநகரத்தார் ஆட்சிக்காலத்தில் மிக்க விரிவடைந்தும் இருத்தல் வேண்டும் என்பது அக்கோவிலில் உள்ள கல்வெட்டுக்களைக் கொண்டும் கட்டட அமைப்பு முறைகளைக் கொண்டும் துணியலாம். இன்றைய கோவிலுக்குள் கவனிப்பாரற்றுப் பாழடைந்து கிடக்கும் (நந்தவனத்திற்குள் இருக்கும்) நடராசர் கோவில், உருமாறி இடிந்து கிடக்கும் அம்மன் கோவில், திருச்சுற்று மாளிகை என்னும் பகுதிகள் சோழர் காலத்தன வாகும் ஏனைய பெருக்கங்கள் பிற்காலத்தனவாகும்' என்று தெளிவுறத் தெரிவித்திருப்பதைப் படிக்கையில், இவருக்குக் கோயில் கட்டடக் கலையிலும் பயிற்சி இருந்தமை உள்ளங்கைக் கனியாய் விளங்கும்

இப்பயிற்சியின் வெளிப்பாடாக அமைந்துள்ளது 1958இல் வெளியாகியுள்ள இவரது 'கட்டடக்கலை' எனும் கட்டுரை. இதில் சங்க காலந்தொட்டு நாயக்கர் காலம் வரையிலான கோயில் கட்டட அமைப்புகள் ஆராயப்பட்டுள்ளன. பல்லவர்களின் ஒற்றைக் கற்கோயில்களைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, 'ஒவ்வொரு வகைக் கோவிலும் ஒரு வகை விமான அமைப்புடையது. இக்கற்கோவில்கள்

பல்லவர் காலக் கட்டடச் சிறப்பை அறியச் செய்வனவாகும் இவை பழைய செங்கற் கோவில்களைப் பார்த்து அமைக்கப்பெற்றவை' என்று விளக்கியுள்ளார்.

இது போலவே பல்லவர் காலத் தூண்களையும், 'நாற்புறமும் ஒரே அளவுடைய சதுரத் தூண்கள் ஒரு வகையின; அடியிலும் மேலும் பருத்து இடையில் சிறிதளவு சிறுத்த தூண்கள் மற்றொரு வகையின; நிற்கின்ற சிங்க வடிவில் அமைந்த தூண்கள் பிறிதொரு வகையின; உட்கார்ந்துள்ள சிங்க வடிவில் அமைந்த தூண்கள் ஒரு வகையின' என வேறுபடுத்திக் காட்டியுள்ளமை இவரது கள ஆய்வுத் திறம் காட்டுகிறது

'மணலில் புதையுண்ட கோவில்கள் ஓர் ஊரில் இருந்தன. அந்த ஊரின் பெயர் இப்போது எனக்கு நினைவில் இல்லை. மேற்பகுதியிலிருந்து மணலை மட்டும் அகழ்ந்து எடுத்துவிட்டுக் கோயில்களின் கோபுரங்களும் பிற உச்சிப்பகுதிகளும் கண்ணில் படும்படிச் செய்திருந்தனர் அவற்றைக் சாண்பதிலும் ஆராயும் அவரது சிந்தையில் அவற்றைப் படம்பிடித்துக் கொள்வதிலும் என் தோழர் கண்ணும் கருத்துமாக இருந்தார்' என்று இராசமாணிக்கனாரின் கோயிலாய்வு முறை பற்றி, 'இனிய தோழர்' என்ற தம் கட்டுரையில் ஆட்சிச்சொற் காவலர் திரு.கீ இராமலிங்கனார் குறிப்பிட்டிருப்பதும் இங்குக் கருதத்தக்கது.

## கல்வெட்டுப் புலமை

கோயில்களை வரலாற்றுக் களங்களாகக் கருதியபோதும், கோயில் சார்ந்த கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றில் அடிப்படைத் தெளிவு பெற்றிருந்தபோதும், கோயில் வளாகத்தில் இராசமாணிக்கனாரைப் பெரிதும் கவர்ந்தவை கல்வெட்டுகளே. ஒரு நாட்டின் வரலாற்றை ஐயத்திற்கிடமின்றி எழுதுவதற்கு, எடுத்துச் சொல்வதற்குத் தகுதி வாய்ந்த முதன்மைச் சான்றுகளாக அவர் கல்வெட்டுகளையே நம்பினார் அவருக்குக் கல்வெட்டுகளில் எப்படி ஆர்வம் ஏற்பட்டது? அவற்றைப் படிக்க எவ்வாறு பயின்றார்? யார் யாரிடம் பயிற்சி பெற்றார் என்பனவற்றை அறியக்கூடவில்லை. தம்முடைய வாழ்க்கை வரலாற்றில் தம் அறிவு வளர்ச்சிக்குக் காரணமானவர்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் பெயர் சுட்டி விரிவான அளவில் அவர் நன்றி பாராட்டியிருப்பதைப் பார்க்கும்போது, கல்வெட்டுகளை அவராகவே முயன்று படித்துப் பயின்று பயிற்சிபெற்றதாகவே கருத வேண்டியுள்ளது.

'மொஹெஞ்சொ - தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்' நூலை எழுதத் தொடங்கிய காலத்திலேயே (1941) அவருக்குக் கல்வெட்டுகளில் நாட்டம் ஏற்பட்டுவிட்டதை உணரமுடிகிறது. அந்நூலில் சிந்துவெளி எழுத்துக்களுக்கென்று தனியே ஓர் இயல் ஒதுக்கி, மிக விரிவான அளவில் அவற்றைப் பற்றித் தாம் அறிய நேர்ந்தவற்றைக் குறிப்பிட்டுள்ளார் பிராமி எழுத்துக்களைப் பற்றிய அவருடைய தெளிவான கண்ணோட்டம் வியப்பூட்டுவதாய் உள்ளது 1944இல் பல்லவர் வரலாற்றிற்காக உழைத்த காலத்தில் அவர்தம் கல்வெட்டுகள் காணப்படும் பல கோயில்களை நேரில் கண்டு ஆராய்ந்தமையை நூலின் அடிக்குறிப்புகளில் அவர் பதிவு செய்துள்ளார்.

1947இல் வெளியான, 'ஆராய்ச்சிக் கட்டுகரைகள்' எனும் நூலில் இடம்பெற்றுள்ள காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், ஏகாம்பரநாதர் கோயில் பற்றிய கட்டுரைகளில் மிக விரிவான அளவில் அக்கோயில்களின் கல்வெட்டுகளைப் பற்றியும் அவை தெரிவிக்கும் வரலாற்றுச் செய்திகள் குறித்தும் எழுதியுள்ளார். அரசரும் காலமும், நாட்டுப் பிரிவுகள், கோவிலுக்கு விடப்பட்ட தானங்கள், தானம் விடப்பட்ட பசுக்கள் வகை, கோவில் இடையர், கோவில் அர்ச்சகர் பெயர்கள், கோவிலில் நடைபெற்ற விசேட பூசைகள், வழக்கில் இருந்த அளவைகள், பண்டாரம், நாணயம் முதலியன, பொதுச் செய்திகள், கல்வெட்டுகளிலுள்ள செய்யுட்கள் எனச் சிறுசிறு தலைப்புகளின் கீழ் ஏகாம்பரநாதர் கோயில் கல்வெட்டுத் தரவுகள் பிரித்துத் தரப்பட்டிருக்கும் பாங்கு எளியாரும் விளக்கம் பெறுமாறு அமைந்துள்ளதெனலாம்.

இதே கட்டுரையில், கல்வெட்டுப் பாடங்களில் கிடைத்த அரசர்களின் மெய்க்கீர்த்திகளையும் தந்துள்ளார். முதல் இராஜாதி ராஜன், முதற் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் இவர்தம் மெய்க்கீர்த்திகள், அவை எந்த ஆட்சியாண்டின என்ற குறிப்புடன் இவர் கட்டுரையில் பதிவாகியுள்ளன. இத்தனை சோழ அரசர்களின் மெய்க்கீர்த்திகள் ஒருசேர ஒரே கட்டுரையின் வாயிலாகத் தமிழில் மக்கள் பார்வைக்குத் தரப்பட்டமை தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவே முதல்முறை எனலாம். இதனால், கல்வெட்டு ஆர்வலர்கள் தாங்கள் கோயில்களில் படிக்க நேர்ந்த கல்வெட்டுகள் எந்தச் சோழ மன்னருக்குரியவை என்பதை எளிதாகக் கண்டறியும் வாய்ப்பமைந்தது. இக்கோயில் கல்வெட்டுகளின் பிழிவைக் கல்வெட்டு எண், கல்வெட்டுள்ள இடம், அரசன் பெயர், ஆட்சியாண்டு, கி பி ஆண்டு,

அறச்செயல் என்ற தலைப்புகளின் கீழ் அட்டவணைப்படுத்தியிருக்கும் முறை இக்கோயில் தொடர்பான ஆய்வுகளில் முனைவோருக்குப் பெரும்பயன் தருவது உறுதி

பல இதழ்களில், குறிப்பாக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் வெளியீடான, 'திருக்கோயில்' திங்களிதழில் தாம் ஆய்வு செய்த திருக்கோயில்களின் கல்வெட்டுச் செய்திகளைக் கட்டுரைகளாக இவர் தொடர்ந்து எழுதியுள்ளார்; தொண்டை நாட்டுக் கோயில்களுள் பல இவர் ஆய்வுக்கு உட்பட்டு, அக்கோயில்களின் கல்வெட்டுகள் வரலாற்று வெளிச்சம் பெற்றமையை, 'நக்கீரர் கழகம் மேற்கொண்ட புலவர்கள்-கவிஞர்கள் சுற்றுலாவில் பங்கு கொண்டு, 'திருப்பாலைவனம்-பழவேற்காடு' சுற்றுலாவிற்கும், அடுத்து 'திருவாலங்காடு-பழையனூர்-திருப்பாசூர்-திருவள்ளூர்' முதலிய இடங்களுக்கும் பேராசிரியர் அவர்கள் வருகை தந்து, தலைமை ஏற்று வழிநடத்தி அந்தந்த ஊர்த் திருக்கோயில்களின் கல்வெட்டுகளின் சிறப்பினைச் சான்றுகளுடன் எடுத்துரைத்தார்கள்' என்று சிறுவை நச்சினார்க்கினியன், 'நான் அறிந்த பேராசிரியர்' எனும் கட்டுரையில் கூறியுள்ளமையால் அறியமுடிகிறது.

இராசமாணிக்கனாரின் இத்தொண்டு அரசிற்குக் கல்வெட்டுகளின் சிறப்பை உணர்த்தியது. 'அறநிலையத் துறையின் வழித் திருப் பாலைவனம்-திருவாலங்காடு கோயில்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ.10,000 வழங்கிக் கோயில் கட்டடங்களைச் செப்பம் செய்தார்கள் இக்கல்வெட்டுக் குறிப்புகள் பல்கலைக்கழக ஆய்வு ஏட்டில் இடம்பெற்றன' திருப்பாசூர்க் கோயில் அறங்காவலர்கள் இராச மாணிக்கனாரின் உதவியை நாடித் தம் கோயில் கல்வெட்டுகளை அவர் படிக்குமாறு செய்து அதை ஒரு நூலாகவும் வெளியிட்டு மகிழ்ந்தனர் இது போலவே காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் மின்விளக்குத் திருவிழா அமைந்த நாளான 10-1-1943இல் கோயில் நிர்வாக அலுவலரின் வேண்டுகோளை ஏற்று அவ்வூர் மக்களுக்கு விளங்குமாறு அங்குள்ள கல்வெட்டுகளின் பெருமையையும் அவை வழங்கும் வரலாற்றுத் தரவுகளையும் பேராசிரியர் எடுத்துச் சொல்லியதை அறிய முடிகிறது.

இவருடைய களஆய்வுகளுக்கும் கல்வெட்டாய்வுகளுக்கும் அந்தந்த ஊர்ப் புலவர் பெருமக்களும் தமிழாசிரியர்களும் கலைக் கழகத்தினரும் அரசு அலுவலர்களும் ஊர்ப் பெருமக்களும் இவருடைய மாணவர்களும் துணை நின்றமையைத் தம்முடைய

ஒவ்வொரு கட்டுரையிலும் தவறாமல் குறித்திருக்கிறார். திரிபுவனை ஆய்வுக்குச் சென்றபோது அவ்வூர்க் காவல்துறை ஆய்வாளர் உடனிருந்து ஒத்துழைத்தமையையும் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் ஆய்வில் அக்கோயில் அலுவலர் தமிழறிஞர் திரு.ஜே.எம். சோமசுந்தரம்பிள்ளை அவர்களே உடன் வந்து வேண்டுவன செய்து தந்தமையையும் அடிக்குறிப்புகளில் நன்றியுணர்வுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இவருடைய தொடக்கக் காலக் கல்வெட்டாய்வுகள் இவர் எழுதிய ஆய்வு நூல்களின் தேவைக்காகவும் சில கருத்துக்களின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்வதற்காகவுமே நிகழ்த்தப்பட்டன. அதனால், முதன்மை வாய்ந்த பல்லவர் கோயில்கள், சிறப்புக்குரிய சோழர் கோயில்கள் இவைகளில் மட்டுமே இவருடைய கல்வெட்டாராய்ச்சி நிகழ்த்தப்பட்டது நாளடைவில் கட்டுரைகள், பொழிவுகள், பிறர் கூற்று இவற்றின் வாயிலாக இவருடைய கல்வெட்டாய்வுத் திறமும் கோயிற்கலைப் புலமையும் வரலாற்றறிவும் தெரிய நேர்ந்த தமிழ்நாட்டுப் பெருமக்கள் தத்தம் ஊர்த் திருக்கோயில்களில் உள்ள கல் வெட்டுகளை இராசமாணிக்கனார் வந்து படித்து எடுத்துரைக்க வேண்டும் என்று அவாவத் தொடங்கினர். இதன் விளைவாகத் தமிழ்நாடு முழுவதும் அவர் பயணிக்க வாய்த்தது. பல ஊர்க் கோயில்கள் அவர் பார்வை வட்டத்துக்குள் வந்தன. ஏறத்தாழ ஐம்பதிற்கும் மேற்பட்ட கோயில்களை ஆராய்ந்து அவற்றின் கல்வெட்டுப் பிழிவுகளை அவர் கட்டுரைகளாக்கியுள்ளார்.

'திருக்கோயில் கல்வெட்டுக்கள்' என்னும் அவருடைய கையெழுத்துப்படி கோயில் சார்ந்த அவருடைய ஆய்வுகளின் திரட்சியாக அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் அவர் கண்டறிந்த செய்திகளை ஒருங்கிணைத்து அரசியல், சமயம், சமுதாயம் என்னும் முப்பெருந் தலைப்புகளின் கீழ்த் தனித்தனிக் கட்டுரைகளாக உருவாக்கினார். 'ஒவ்வொரு நூற்றாண்டிலும் தோன்றிய கல்வெட்டுகள் அந்நூற்றாண்டிலிருந்த அரசியல் நிலையையும் சமய நிலையையும் சமுதாய நிலையையும் பெரிதளவு அறிவிக்கும் நிலையில் அமைந்துள்ளன' என்பது அவர் கருத்து.

## ஊர்ப்பெயராய்வு

இதற்கேற்பவே கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து அவர் திரட்டிய ஊர்ப்பெயர்கள் பல்வேறு கட்டுரைகளுக்குக் கருத்து முதல்களாகி

யுள்ளமையைக் காணமுடிகிறது 'ஊர்களின் பழைய பெயர்களும் இன்றுள்ள பெயர்களும்' (1962), 'தமிழகத்துப் பழம் பெரும் பண்புகளையும் பெயர்களையும் பாதுகாருங்கள்' (1962), 'ஊர்ப் பெயர்களின் மரூஉ' (1963) 'ஊர்ப்பெயர்கள் உணர்த்தும் வரலாறு' (1965), 'சோழர் பொதுப் பெயர்களைக் கொண்ட ஊர்கள்' (1965-66) 'ஊர்ப் பெயர்கள்' (1966), 'பழைய பட்டங்களைப் பெயர்களாகப் பெற்ற ஊர்கள்'(1967) எனும் தலைப்புகளில் பல்வேறு இதழ்களிலும் மலர்களிலும் வெளியாகியுள்ள அவரது ஊர்ப்பெயராய்வுக் கட்டுரைகள், கல்வெட்டு, இலக்கியம் இவற்றில் அப்பெருந்தகை பெற்றிருந்த ஆழமான புலமையை வெளிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் 'ஊர்ப்பெயராய்வு' ஒரு தனித்துறையாக வளர்ந்து அதற்கென்றே அகில இந்திய அளவில் ஒரு கழகம் அமைந்திருப்பதையும் **(Place Name Society of India)** அது ஆண்டுதோறும் மாநாடுகள் நடத்தி, ஆய்விதழ் வெளியிடுவதையும் எண்ணிப்பார்க்கும் போது, ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே, ஊர்ப்பெயராய்வின் தேவை, முக்கியத்துவம் கருதி அத்துறையில் தடம்பதித்த இராசமாணிக்கனாரின் 'எதிர்கால நோக்கு' வியப்பூட்டுகிறது.

சமயம் பற்றிய இவரது கல்வெட்டாய்வுக் கட்டுரையில் காணப்படும் 'தளிப்பரிவாரம்' பற்றிய குறிப்புகள் அரிதானவை; சிறப்பானவை. ஆந்திர மாநிலக் கபோதீசுவரர் கோயிலில் காணப்படும் முதலாம் மகேந்திரவர்மரின் கல்வெட்டிலிருந்து கம்பவர்மரின் திருவொற்றியூர்க் கல்வெட்டு வரை பல மன்னர்களின் கல்வெட்டுகளை ஆராய்ந்து தளிப்பரிவாரம் பற்றிய தரவுகளைத் தொகுத்துள்ளார். 'தளி ஆழ்வார்கள்', 'தளிப்பணி செய்யும் மாணிகள்' எனத் தளிப்பரிவாரம் தொடர்புடையனவாய்க் கிடைத்த பிற சொல்லமைப்புகளையும் தம் கட்டுரையில் சுட்டி விளக்கியுள்ளமை இவரது பரந்துபட்ட கல் வெட்டறிவைப் புலப்படுத்துமாறு உள்ளது.

கல்வெட்டுகளின் அடிப்படையில் திருக்கோயில் வளர்ச்சி பற்றி எழுதிய முதல் தமிழறிஞராக இராசமாணிக்கனாரைத்தான் குறிப்பிட முடியும். மிக எளிமையாக யாவரும் புரிந்து கொள்ளுமாறு இக்கட்டுரையை அவர் உருவாக்கியுள்ளார். 'சாதாரணமாக ஒவ்வொரு கோவிலும் கருவறை, நடு மண்டபம், முன்மண்டபம் இவற்றைப் பெற்றிருக்கும் பிறகு கோவிலைச் சுற்றிலும் ஒரு திருச்சுற்றும் மதிலும்

அமைப்புறும், அத்திருச்சுற்றில் கருவறையை அடுத்துக் கோவில் சொத்துக்களைக் கண்காணிக்கும் சண்டேசுவரருக்குக் கோவில் அமைக்கப்படும். அத்திருச்சுற்றில் வலம் வரும் முறையில் பல தெய்வங்கள் இடம்பெறும். மதிலில் ஒன்று முதல் நான்கு வாயில்கள் கோவிலுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கும். வாயில்மீது சிறிய கோபுரங்கள் அமைக்கப்படும். முதலாம் இராஜேந்திரன் காலம்வரை கருவறைக்கு மேலுள்ள விமானம் உயர்த்திக் கட்டப்பட்டது.

பிற்காலத்தில் விமானம் தாழ்த்தப்பட்டுக் கோபுரங்கள் உயர்த்தப்பட்டன. பெரிய கோவில்களுள் நந்தவனங்களும் திருக்குளங்களும் உண்டாயின. பெரிய கோவில்களில் இரண்டாம் திருச்சுற்றும், மூன்றாம் திருச்சுற்றும் கட்டப்பட்டன. அச்சுற்றுகளில் அரசர், சிற்றரசர் முதலியோர் எடுப்பித்த சிறிய கோவில்கள் இடம்பெற்றன. கோவில்கள் செல்வாக்கில் பெருகப் பெருக அவற்றில் பல மண்டபங்கள் ஏற்பட்டன.'

வரலாற்று மீட்டுருவாக்கத்திற்கு இன்றியமையாத அடிப்படைச் சான்றுகளுள் தலையாயவை கல்வெட்டுகளே என்னும் உண்மையை உறுதிப்படுத்துமாறு இராசமாணிக்கனாரின் 'கல்வெட்டுகளும் சமுதாய வரலாறும்' என்ற கட்டுரை எழுதப்பட்டுள்ளது இக்கட்டுரையின் உள்தலைப்புகள் ஒவ்வொன்றும் தனிக் கட்டுரைகளாக உருவாக்கம் பெறும் தகுதியுடையவை சமுதாய உரிமைகள், பெண்டிர்நிலை, உடன்கட்டையேறல், அடிமைகள், திருமணத் திருத்தம் என்பன குறிப்பிடத்தக்கவை

## கல்வெட்டுகளும் தமிழ்க் கல்வியும்

கல்விநிலை பற்றிய பகுதியில், 'கல்வெட்டுகளும் தமிழ்க் கல்வியும்' என்றொரு உள்தலைப்பிட்டுப் பல அரிய செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார். இத்தொகுப்பு பிற வரலாற்று நூல்களில் ஒருசேரக் காணக் கிடைக்காததாகும். 'கி.பி. 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வேணாட்டு அரசனாக இருந்த சேரமான் பெருமாள் வஞ்சி மார்த்தாண்டன் என்பவன் பாடிய பாடல்கள் மாயூரத்தை அடுத்து மூவலூர் சிவன் கோயில் கோபுரவாயிலில் கல்வெட்டாகக் காட்சியளிக்கின்றன.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் தென்காசிப் பகுதியை ஆண்ட அதிவீரராம பாண்டியன், திருவண்ணாமலைப் புலவன் சிதம்பரநாதன்

என்பவனுக்கு நிலமளித்ததாக ஒரு கல்வெட்டுக் கூறும் அதிவீரராம பாண்டியனுக்குப் பின் வந்த வரதுங்கராம பாண்டியனுக்கு அவைப் புலவராக விளங்கியவர் காசிக்கலியன் கவிராயர் என்பவர் இவர் அப்பாண்டியனைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் தென்காசி விஸ்வநாதர் கோவில் கோபுரத்தில் வெட்டப்பட்டுள்ளன' என்பன போன்ற தரவுகள் அக்காலகட்டத்தில் தமிழ் இலக்கியம் பற்றிய புதியதொரு பார்வைக்கு வித்திட்டன சுவடி இலக்கியங்களைப் போலவே கல்வெட்டிலக்கியங் களும் இருப்பதைத் தமிழ் உலகு உணர்ந்தது.

கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு, 'வழக்கு வீழ்ந்த நூல்களும் புலவர்களும்' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை, கல்வெட்டு களில் கரைந்திருந்த எண்ணற்ற இலக்கியங்களையும் அவற்றைப் பாடிய புலவர் பெருமக்களையும் முதன்முறையாக மக்கள்பார்வைக்குக் கொணர்ந்தது காங்கேயன் எனும் சிற்றரசன் மீது கொடிக் கொண்டான் பெரியான் ஆதித்ததேவன் பாடிய பிள்ளைக் கவி பிரபந்தம், கரியமாணிக்க ஆழ்வான் மீது பாடப்பெற்ற கப்பற்கோவை, திருஆழிப் பரப்பினான் கூத்தன் பாடிய சிந்துப் பிரபந்தம், பாண்டிக் கவிராசர் பாடிய வீரமாலை, உத்தண்ட வேலாயுதக் கவியின் திருவதிகைக் கலம்பகம், குறட்டி வரதய்யன் பாடிய திருவல்லை அந்தாதி என்பன இவர் வழி வெளிப்பட்ட கல்வெட்டிலக்கியங்களுள் குறிப்பிடத்தக்கன

'தமிழ் நூற் செய்திகளும் கல்வெட்டுகளும்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இவருடைய மற்றொரு கட்டுரை பல அறியப்படாத செய்திகளைத் தமிழ்நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதாய் அமைந்துள்ளது. யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம் என்ற செய்யுள் இலக்கண நூல்கள் இரண்டையும் செய்தவர் அமிதசாகரர் என்பதும் இவர் குணசாகரரின் மாணவர் என்பதும் யாப்பருங்கலப் பாயிரத்தால் அறியப்படும் செய்திகளாகும். இச்செய்திகள் உண்மை என்பதை நீடூர்ச் சிவன் கோயில் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துவதாகக் கூறும் இராசமாணிக்கனார், அமிதசாகர முனிவரைக் கொண்டு காரிகை செய்வித்தவனுடைய வழித்தோன்றல், காரிகைக் குளத்தூர் மன்னவன் என்ற கல்வெட்டுச் செய்தியையும் குறிப்பிட்டு, பாண்டிநாட்டுக் கழுகு மலைக் கல்வெட்டுகள் இரண்டால், குணசாகரர் என்ற சமண ஆசிரியர் தம் சமயக் கொள்கைகளைப் பரவச் செய்யச் சிலரை நியமித்தனர் என்பது அறியப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது போலவே ஒட்டக்கூத்தர், சேனாவரையர், ஞானமிர்தம் நூலாசிரியர் வாகீச முனிவர் இவர்கள் காலத்தையும் கல்வெட்டுகளின்

துணையோடு கண்டறிய முயன்றுள்ளார். 'இதுகாறும் கூறப்பெற்ற கல்வெட்டுச் செய்திகளால், பல்லவர் காலம் முதல் பிற்பட்ட காலம்வரை, தமிழகத்தில் எண்ணிறந்த புலவர் பெருமக்கள் இருந்து, தமிழ்ப்பணி செய்துவந்தனர் என்பதும், தமிழ்க் கல்விக் கூடங்கள் மிகப் பலவாக இருந்திருத்தல் வேண்டும் என்று ஊகிக்கக் கல்வெட்டுகளிற் காணப்படும் புலவர் பெயர்களே தக்க சான்று என்பதும் நன்கு அறியப்படும்' என்று அவர் கூறியிருப்பதை யாரே மறுக்கமுடியும்?

இவருடைய 'கல்வெட்டுகள்' என்னும் கட்டுரை, மிக எளிமையாக இந்தியக் கல்வெட்டுகளைப் பற்றிய வரிவடிவத்தைத் தருவதுடன், தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளைப் பற்றிய காலநிரலான அறிமுகத்தையும் முன்வைக்கிறது. கல்வெட்டுகள் உணர்த்துவன யாவை என்பது பற்றி விளக்குமிடத்து, 'கல்வெட்டுக்கள் அனைத்தும் வேந்தர்தம் போர்ச்செயல், அரசியல் அமைப்பு, கொடைச் சிறப்பு, சமயநிலை, நாட்டு நடப்பு, உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம், கைத்தொழில், பயிர்த்தொழில், நாட்டு விளைபொருள்கள், அயல்நாட்டு உறவு, நாட்டில் வழங்கிய எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலிய அளவைகள், பலவகை ஆடைகள், அணிகள் முதலியன பற்றிய விவரங்களை நமக்குத் தெரிவிக்கின்றன. இவற்றுடன், இலக்கியங்களில் உள்ள பல விளங்காத பகுதிகட்கும் கல்வெட்டுக்கள் விளக்கம் தருகின்றன' என்று குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியங்களில் உள்ள விளங்காத பகுதிகட்கும் கல்வெட்டுகள் விளக்கம் தருமாற்றிற்குச் சிறந்த சான்று ஒன்றையும் இக்கட்டுரையில் இராசமாணிக்கனார் தந்துள்ளார் 'தன் மைந்தனது தேர்க்காலில் பசுக்கன்று அகப்பட்டு இறந்தமைக்காக, அம்மகன் தன் ஒரே மைந்தன் என்பதையும் கருதாது அவனைத் தேரூர்ந்து கொன்ற மனுநீதிச் சோழனது வரலாறு முழுமையும் - அதாவது, அரசன் ஏவற்படி அரசகுமாரனைக் கொல்ல மனம் வராது தானே தற்கொலை செய்துகொண்ட அமைச்சன் செயல் உள்பட - எந்தத் தமிழ் நூலிலும் கூறப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.

இந்த விவரங்களை எல்லாம் நமக்குத் தரும் நூல் பெரியபுராணம் ஒன்றுதான் அந்நூலாசிரியர் இவ்விவரங்களை எங்கிருந்து பெற்றார் எனின், அவருக்குச் சிறிது முன்னர்ப் பொறிக்கப் பெற்ற திருவாரூர்க் கோவிலில் உள்ள பெரிய கல்வெட்டிலிருந்துதான் எனக் கூறலாம் சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர் மேற்சொன்ன கல்வெட்டு இவ்விரண்டாம் குலோத்துங்கனுக்குத் தந்தையான விக்கிரம

சோழன் காலத்தில் பொறிக்கப்பட்டது. மனுவேந்தன் ஆணையை நிறைவேற்ற மனமில்லாது இறந்த அமைச்சனது பரம்பரையினருள் ஒருவன் விக்கிரம சோழனுக்கு அமைச்சன். அவன் பெயர் பாலையூருடையான் சந்திரசேகரன் ஆதிவிடங்கனான குலோத்துங்க சோழ மாவலி வாணராயன் என்பதாகும் '

ஒரு சமயத்தின் வளர்ச்சியையும் எழுச்சியையும் கல்வெட்டு களின் பின்னணியில் உருவாக்கித் தந்த ஒரே தமிழறிஞர் என்ற பெருமையையும் இராசமாணிக்கனாரே பெறுகிறார் இவருடைய பெரியபுராண ஆராய்ச்சி, சைவ சமய வளர்ச்சி எனும் இரண்டு ஆய்வு நூல்களும் தமிழ்நாடு தழுவிய கல்வெட்டுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பிறந்தவை. சேக்கிழாரை வரலாற்று ஆசிரியராக நிறுவவும் நாயன்மார்கள் தமிழ்நாட்டு மக்களிடம் பெற்றிருந்த செல்வாக்கினை வெளிக்கொணரவும் கட்டடம், சிற்பம், செப்புத்திருமேனி எனப் பல்துறை சார்ந்து சமயம் விரவிப் படர்ந்தமையை எடுத்துக்காட்டவும் இவருக்குக் கல்வெட்டுகளே பெருந்துணை புரிந்துள்ளன அச்சிட்டு வெளியிடப்பட்டிருந்த கல்வெட்டுகளோடு, நாயன்மார்களின் வாழ்வோடு தொடர்புடையன வாயிருந்த ஊர்களின் கோயில்களிலிருந்த கல்வெட்டுகளையும் இவர் படித்து, ஆராய்ந்து 'தகவல் பெற்றமையையும் நூல் அடிக்குறிப்புகளில் காணமுடிகிறது. 'சைவ சமய வளர்ச்சி' நூலில் தம் தரவுகளுக்குரிய சான்றுகளாக இவர் சுட்டியுள்ள கல்வெட்டுகள் எண்ணிக்கையில் இருநூறுக்கும் மேற்பட்டனவாகும்.

## கல்வெட்டறிஞர் பர்னல்

கல்வெட்டுகளைப் பற்றிக் கட்டுரைத்தமையுடன் நில்லாது, அக்கல்வெட்டுகளைப் படித்தறிந்து, அவற்றை வெளியிட்ட அறிஞர்களையும் மக்கள் அறியுமாறு செய்துள்ள இராசமாணிக் கனாரின் தொண்டு பாராட்டத்தக்கது. இத்துறையில் மிகுபணி செய்த டாக்டர் பர்னல் பற்றிய கட்டுரையில், அவரின் பல்வேறு கல்வெட்டாய்வுப் பணிகளைச் சுட்டியுள்ள பேராசிரியர், 'Elements of South Indian Paleography' என்னும் அவரது நூலைக் குறிப்பிடும்போது 'இந்நூலில் அவர் கி.பி 4ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டுவரையில் தென்இந்தியாவில் தோன்றிய கல்வெட்டுக்களை நன்கு ஆராய்ந்து எழுத்துக்களின் பலவகை வளர்ச்சி பற்றி விரிவாகக் கூறியுள்ளார். அந்நூல் முதலில் 1874இல்

வெளியிடப்பட்டது. முதற் பதிப்பின் பின் அவர் பல இடங்களுக்கு நேரே சென்று அறிஞர் பலர் கருத்துக்களை அறிந்து 1878இல் விரிவான இரண்டாம் பதிப்பினைக் கொணர்ந்தார். அந்நூலில் தாம் அதுகாறும் படித்த பலதுறை ஆராய்ச்சி அறிஞர்களுடைய கருத்துக்களை நன்கு பயன்படுத்தியுள்ளார்' என்று கூறியுள்ளமை கல்வெட்டாய்வில் பேராசிரியருக்கிருந்த அறிவின் பரப்பையும் எழுத்தமைவுகளில் அவர் பெற்றிருந்த தெளிவையும் சுட்டவல்லதாகும்.

விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே அக்காலத்துத் தமிழறிஞர்கள் கோயிற்கலை ஆய்விலும் கல்வெட்டாய்விலும் ஈடுபாடு காட்டினர். அவர்களுள் கல்வெட்டுகளைக் களத்திற்கே சென்று படிக்கும் ஆற்றல் பெற்றிருந்தவர்கள் மிகச் சிலரே கல்வெட்டாய்வைத் தொடர்ந்து தம்முடைய படைப்புகளுக்கான பின்புலமாகக் கொண்டு தமிழும் வரலாறும் பல புதிய தரவுகளைப் பெறுமாறு செய்த அறிஞர் பெருமக்கள் அவருள்ளும் சிலரே அத்தகு சிலருள் தலையாயவராய்க் குறிப்பிடத்தக்கவர் இராசமாணிக்கனார் என்பது அவர் விட்டுச் சென்றிருக்கும் நூல்களால் புலப்படும் உண்மையாகும்

# 6
# மாணவர் தோழர்

சிறந்த கல்வெட்டறிஞர்களுள் ஒருவராகவும் குறிப்பிடத்தக்க வரலாற்று ஆய்வறிஞராகவும் தமிழாய்ந்த பெருமகனாராகவும் விளங்கிய இராசமாணிக்கனார், மிகச் சிறந்த ஆசிரியராகவும் திகழ்ந்தார் அவருடன் பணியாற்றியவர்களும் அவரிடம் பயின்றவர் களும் அவருடைய பயிற்றுவிக்கும் திறம் பற்றியும் மாணவர்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பெருந்தகையாகவே அவர் இறுதிவரை இருந்தமை குறித்தும் மிகுந்த மரியாதை உணர்வுடன் குறிப்பிட்டுள்ளனர்.

## நல்லாசிரியர்

'1929 இல் சர் தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் 5ஆம் வகுப்பில் படிக்கும்போது தமிழ்ப் பாடம் எடுத்தவர்கள் பேராசிரியர் அவர்கள் சிவந்த மேனி, கத்தரித்து விடப்பட்ட கருமையான மீசை, புன்சிரிப்பு, தூய வெள்ளுடை, அமைதியான நடை, அக்கால நிலையின் வழி கையில் பிரம்பும் அழகு செய்யும். பிரம்பு பயனற்று விளங்கும். நான் செய்த நற்றவம் என் கண்கள் அவரைக் காதலித்தன அக்காதல் பிணைப்பு அவர் மறையும்வரை தொடர்ந்தது அக்காலம், ஆசிரியர் மாணவர் தொடர்பு, ஒரு பொற்காலம். மாணவர்களை அவரவர் தகுதிக்கு ஏற்ப தோழனாக, தம்பியாக, மகனாக அரவணைப்பது பண்பாக இருந்தது. என்னை, 'தம்பி' என்று அழைத்தார்' என்று தம் ஆசிரியரையும் அவரிடம் தாம் கொண்டிருந்த பிணைப்பையும் அடையாளப்படுத்தியுள்ளார் சிறுவை நச்சினார்க்கினியன்.

'பெயருக்காக ஆசிரியராய் இராது, பேரும் பீடும் உடைய ஆசிரியராய், உரைக்கப்படும் பொருளை உள்ளத்தில் அமைத்து, விரையாது, வெகுளாது, விரும்பி முகமலர்ந்து, கொள்வோர் கொள்வதை அறிந்து, அவர் உள்ளம் கொளக் கோட்டமில் மனதுடன்,

கற்றுத் தந்ததால் மாணவர் தேனில் விழுந்த தும்பியாயினர். இராசமாணிக்கனாரை ஆசிரியராக அடைய 'யாம் எந்நோற்றோம் கொல்' என நாளும் மாணவர் வாழ்த்துப்பா இசைப்பாராயினர் இராசமாணிக்கனாரை நினையாத - நினைந்து நெகிழாத மாணவர் நெஞ்சம் இருத்தற்கரியதாகும்' என்பார் பேராசிரியர் அ சங்கர வள்ளிநாயகம்

'எங்கள் ஆசிரியர் டாக்டர் மா.இராசமாணிக்கனார் தம் வகுப்புகளை மிகத் திறமையுடன் நடத்துவார்; பாடங்களை இனிதாக விளக்கிக் கூறுவார். இடையிடையே நகைச்சுவையை உண்டாக்கித் தமிழ்மீது மாணவர்களை ஆர்வங்கொள்ளச் செய்வார் தமிழ் இலக்கணம் கடுமையானது என்னும் கருத்தை மாற்றி, அதனை எளிமையாகத் தெரிந்த சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்தி விளக்கும் அரிய திறன் பெற்றிருந்தார்

அவர் கட்டுரை எழுதப் பயிற்சியளிக்கும் முறையே தனியானது. மாணவர்களை அவரவர்களுக்கு நன்கு தெரிந்த ஒன்றைக் குறித்து நினைவுகூரச் செய்வார் பின்னர் கட்டுரையை வரையத் தொடங்கு வதற்கு முன்பு பல சிறுசிறு தலைப்புகளைக் குறிப்புகளாக இடச் சொல்வார் இப்படிக் குறிப்புகள் இட்டும் பத்திகள் பிரித்தும் ஒழுங்காகவும் சீராகவும் மாணவர்களைக் கட்டுரை அமைக்கத் தயார் செய்துவிடுவார்! மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணத்தை இனிப்பாகச் சொல்லி, எளிய முறையில் விளக்கி, ஆங்கிலத்துடன் ஒப்பிட்டுக்காட்டி, வகுப்புகளுக்கு ஏற்ற வகையில் அதனை ஆயத்தப்படுத்தித் திறமையுடன் புலப்படுத்தி விடுவது இராசமாணிக்கனாருக்குக் கைவந்த கலையாகும்' என்று தம் ஆசிரியரின் திறம் பற்றி மகிழ்ந்துரைத்துள்ளார் திரு மா.சு. சம்பந்தம்.

மதுரைத் தியாகராசர் கல்லூரியின் தமிழ்த்துறையில் இராச மாணிக்கனாருடன் பணியாற்றிய பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார் பேராசிரியரைப் பற்றிக் குறிப்பிடும்போது,

*'இல்லாத மாணவர்பால் இரக்கமிகக் காட்டிடுவர்,*
*செல்வாக்கால் பிறர் அவர்கட் குதவிசெயத் தூண்டிடுவர்;*
*அல்லாமல் தாமுமவர்க் குதவிடுவார் ஆனவரை,*
*இல்லாமல் சொல்லவிலை, இதனையான் நன்கறிவன்'*

*'எம்ராச மாணிக்கர் இயற்றியநூல் ஒன்றன்று,*
*நம்மாண வர்தமக்கே நல்கியநூல் நூறாகும்;*
*செம்பாக உரைநடையில் செய்தவையோ பலவாகும்;*
*அம்மம்ம! ஒருநொடியும் ஓய்ந்திருந்த தில்லையவர்!'*

என்று பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது

1928ஆம் ஆண்டு தம்முடைய 21ஆம் வயதில் தியாகராசர் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்த காலந்தொட்டு, தம்முடைய இறுதிக்காலம் வரை அவருடைய சிந்தையெல்லாம் மாணவர் நலமே குடியிருந்தது பணி தொடங்கிய காலத்திலும் சரி, பேரறிவாளராக முதிர்ந்த காலத்தும் சரி, 'இளைஞர்களே இந்த நாட்டை வழிநடத்தப் போகிறார்கள்; அவர்கள் உயர்வே நாட்டுயர்வாக இருக்கப்போகிறது' என்னும் கருத்தில் அவர் உறுதிகொண்டிருந்தமையை இக்கால கட்டத்தில் அவரால் எழுதி வெளியிடப்பட்ட, பதிப்பிக்கப்பட்ட நூல்கள் மிகத் தெளிவாகப் படம்பிடிக்கின்றன

மாணவர்களுக்காக அவர் வெளியிட்ட நூல்களை மூவகைப் படுத்தலாம் முதல் வகையின பாடநூல்கள் இரண்டாம் வகையின வரலாற்று நூல்கள். மூன்றாம் வகையின பொது அறிவு வளர்க்கும் கட்டுரை நூல்கள் இவர் வாழ்ந்த காலத்தில் கல்வெட்டறிஞராகவும் வரலாற்றாய்வாளராகவும் தமிழிலக்கிய வல்லுநராகவும் ஒருசேர விளங்கிய பேராசான்கள் யாரும் மாணவர்க்கான இத்தகு முயற்சிகளில் ஈடுபட்டாரில்லை இவ்வகையிலும் இராசமாணிக்கனார் தனித் தன்மையராகவே ஒளிர்ந்தமை நெஞ்சில் இருத்தத் தக்கது

## பாடநூல்கள்

அரசினர் பாடத்திட்டத்திற்கு ஏற்ப பள்ளி மாணவர்களுக்காக இவரால் எழுதப்பெற்ற முதல் நூல் 'பொற்கால வாசகம்' என்னும் பெயர் கொண்டது இவர் தமிழாசிரியராகி நான்கு ஆண்டுகளுக்குள் எழுதப்பெற்ற இந்நூல் 1932இல் வெளியிடப்பட்டது 'தமிழ்நாட்டு மாணவ, மாணவிகட்குத் தமிழ்ப்பற்றையும் உலக அறிவையும் நாட்டுப்பற்றையும் நாட்டு முன்னேற்றத்திற்குரிய பல துறைகளையும் மிக விரிந்த அளவில் உணர்த்த, அவர்களால் நம் தாய்நாடு பொன்னாடாகிக் காலமும் பொற்காலமாகப் பொலிவுறுமென்னும் சீரிய நோக்கோடு, இந்நூலுக்குப் 'பொற்கால வாசகம்' என்னும் பெயர் புனையப்பட்டது' என்று இந்நூலின் பெயர்க் காரணத்தை இவர் விளக்கியுள்ளார்.

இந்நூலில் மொழிநடைப் பயிற்சி, விநோதச் செடிகள், மின்சாரமும் அதன் பயன்களும், ஆகாயவிமானங்கள், உழைப்பால் உயர்ந்தோர், சூரிய மண்டலம், பத்திரிகையின் பயன், அச்சுத் தொழில், தென்னாட்டு அசோகன், மாதர் முன்னேற்றம் என்று பல தலைப்புகளில் அரிய செய்திகள் தரப்பட்டுள்ளன. 'உண்மையான மொழிநடைப் பயிற்சி பெற ஓரளவு இலக்கணப் பயிற்சி அவசியம். இலக்கணம் அறிந்திராவிடின், நடை நன்கு அமையாது.. பல இலக்கிய நூல்களைப் படிக்கப் படிக்கச் சுவை பொருந்திய நடை - எல்லோராலும் விரும்பத்தக்க நடை - உங்களுக்குத் தானாகவே அமையும் ஆழ்ந்த அறிவு நல்ல நூல்களைக் கற்பதாலேயே நன்கமையும்' என்று இப்பாடநூலில் பேராசிரியர் குறித்திருப்பது கற்பித்தலில் அவருக்கிருந்த ஆளுமைக்குச் சான்றாகும்.

1946இல் மூன்றாம் படிவ (எட்டாம் வகுப்பு) மாணவர்களுக்காக இளங்கோ வாசகம் வெளியிடப்பெற்றது இப்பாடநூலில் உள்ள ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் அரும்பொருள், கேள்விகள், இலக்கணம், பயிற்சி என்னும் நான்கும் தரப்பட்டுள்ளன. இதே ஆண்டில் பாண்டியன் பைந்தமிழ்க் கோவையும் வெளியாகியுள்ளது. இதில் பல அறிஞர்கள் எழுதிய பயனுள்ள கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இது நான்காம், ஐந்தாம் படிவங்களுக்கு உரியதாக இரு நூல்களாய் அமைந்தது.

1948இல் இவரால் வெளியிடப்பட்ட தாமரை வாசகம் நெடுங்காலம் பள்ளி மாணவர்களின் பகலவனாக விளங்கியது பேராசிரியர் விவேகானந்தர் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் எழுதப்பெற்ற இதன் திருத்திய பதிப்புகள் 1960 வரை வெளியாகியுள்ளமை இந்நூல் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் பெற்ற பெரும் வரவேற்பிற்குச் சான்றாகவுள்ளது. 'இந்நூல் ஒரு தாமரை மலருக்கு ஒப்பாகும். இதன்கண் உள்ள ஒவ்வொரு பாடமும் மலரின் தனித்தனி இதழாகும் தாமரை மலரின் அழகை அநுபவித்தல் போல மாணவர் உலகம் அறிவுக் களஞ்சியமாகவுள்ள இத்தாமரை வாசகத்தை அநுபவித்துப் பயன்பெறத் தமிழ்த்தாய் அருள்புரிவாளாக' என்று இதன் முகவுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்

ஆறாம் படிவ மாணவர்களுக்கான தாமரை வாசகம் நூலில், மாமல்லபுரத்துச் சிற்பங்கள், இந்தியாவுக்கு வழிகண்ட வீரர், டேவிட் லிவிங்ஸ்டன், பாண்டியன் நெடுஞ்செழியன், ஜினோவா வீரர், அரசு துறந்த இளங்கோ எனும் பயனுள்ள பல கட்டுரைகள் எளிய, இனிய

நடையில் தரப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் உரிய நில வரைபடங்கள் இணைக்கப்பட்டுள்ளன இது, மாணவர்க்குப் பாடம் பயிலும்போதே, அப்பாடம் தொடர்பான ஊர்கள் அல்லது நாடுகளின் நிலவியல் அமைப்பைத் தெரிந்து கொள்ளப் பேருதவியாக அமைந்தது

இவ்வாசகத்தில் எழுதப்பெற்றுள்ள, 'மாணவர் குறிக்கோள்' என்ற பாடம் வளரும் தலைமுறையினரிடம் இராசமாணிக்கனார் என்ன எதிர்பார்த்தார், எவற்றைப் பதிவு செய்ய விழைந்தார் என்பனவற்றை மிகத் தெளிவாகப் படம்பிடித்துள்ளது 'மாணவர் இளமைப் பருவத்தினர் ஆவர்.

இளமைப் பருவமே வாழ்க்கை என்னும் கட்டடத்தின் அடிப்படை அடிப்படை வன்மையாக அமைக்கப்படின், அதன்மீது கட்டப்படும் கட்டடம் வன்மையுடையதாக இருக்கும் அது போல இளமைப் பருவத்தில் மாணவரிடம் அமையும் பண்புகளே பெரும்பாலும் அவர்தம் ஆயுள் அளவும் நிலைத்திருக்கும் இது நோக்கியே 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்னும் பழமொழி எழுந்தது '

## அறிவு ஆற்றல் ஒழுக்கம்

மாணவர் அறிவு, ஆற்றல், ஒழுக்கம் என்னும் மூன்றிலும் தம்மை உறுதியுடையவராகச் செய்து கொள்வதை அவர் விரும்பினார் 'வகுப்பில் நடைபெறும் பாடங்களைக் கொண்டும் நூல் நிலையத்தில் உள்ள நூல்களைக் கொண்டும் தம் அறிவினை வளர்த்துவரும் மாணவர், அன்றன்று உலகில் நடைபெறும் செய்திகளையும் அறியக் கடமைப்பட்டவர் ஆவர்.' அவர்கள் வெறும் ஏட்டுக் கல்வியுடன் நின்றுவிடக்கூடாது; எதையும் சிந்தித்து அறியும் ஆற்றல் பெற வேண்டும் 'பகுத்தறிவு என்பது மனிதப் பிறப்பின் சிறப்புச் செல்வமாகும் இதனை வளர்த்தல் மாணவர் கடனாகும் எந்தப் பாடத்தையும் இயலும் அளவு தம் அறிவுகொண்டு ஆராய்தல் வேண்டும்; ஐயங்கள் தோன்றின், ஆசிரியரைக் கொண்டு தெளிதல் வேண்டும். இளைஞர் எந்த நூலை எடுத்து வாசிப்பினும் எச் சொற்பொழிவைக் கேட்பினும் கண்கொண்டு எதனைக் காணினும் அவை அனைத்திலும் தம் அறிவினைச் செலுத்தி இயலுமளவு ஆராய்ந்து உண்மை காண முயலவேண்டும்' என்பதே அவர் கருத்தாக அமைந்தது

இதற்காகவே தாம் பணியாற்றிய கல்வி நிறுவனங்களில் இருந்த மாணவர் மன்றங்களைச் செயலூக்கம் உள்ளவையாக மாற்றி யமைத்தார். 'கல்லூரித் தமிழ் மன்றத்தில் பல்வேறு கூட்டங்களும் விழாக்களும் நடப்பதுண்டு திரு.வி.க., சேதுப்பிள்ளை போன்ற பெரியவர்களை வரவழைப்பதுண்டு. திரு வி.க. இருமுறை தமிழ் மன்றத்துக்கு வந்து சிறப்பித்துள்ளார் திரு.வி க , இராசமாணிக்கத்துக்கு மிகவும் வேண்டியவர்; இவரிடம் பெருமதிப்புக் கொண்டவர். மாணவர் கூட்டங்களிலே நான் தலைமை வகித்து இராசமாணிக்கனாரும், அவர் தலைமை வகித்து நானும் பேசுவதுண்டு தமிழ்த்துறையில் அனைவரும் சமம்' என்று விவேகானந்தர் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. ஜகந்நாத ஆச்சாரியார் குறித்துள்ளார்.

மாணவர்க்கு ஆய்வுகளில் ஆர்வம் ஏற்படுத்துவதற்காக அவர்களைத் தம் ஆய்வுப் பயணங்களின்போது உடன் அழைத்துச் சென்றார் 'மதுரையில் பணியாற்றியபோது தஞ்சைவாணன் ஆண்ட மறைநாடு, மதுரையைச் சூழவுள்ள சமணர் குகைகள், கொற்கை, மதுரையிலிருந்து மேற்குத் திசையாக வையை நதி செல்லும் வழி, அதன் தொடக்க ஊற்று உள்ள இடம் ஆகிய இடங்களுக்குத் தம்முடன் பணியாற்றிய ஆசிரியர், மாணவர்களுடன் ஆய்வுப் பயணம் மேற்கொண்டார். அவர்தம் நாவாற்றலை வளர்க்கவும் திறனை ஊக்குவிக்கவும் கல்லூரியில் தியாகராசர் இலக்கிய மன்றம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்' என்கிறார் தியாகராசர் கல்லூரியில் அவருடன் பணியாற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் சுப அண்ணாமலை.

மாணவர்கள் அறிவு வளர்ப்பதுடன் ஆற்றலும் பெருக்க வேண்டுமென அவர் எதிர்பார்த்தார். ஆற்றல், 'உடல் வலிமை, மனவலிமை முதலாகப் பல வகைப்படும் நாடோறும் உடற்பயிற்சி செய்யின் உடல் வலிமை பெறும், நோய்கள் அணுகா; 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' அன்றோ? அஞ்சாமை, பொறுமை முதலிய நற்குணங்கள் மனவலிமையை வளர்ப்பனவாகும். மனவலிமை உடைய இளைஞன் தன் உள்ளத்திற்கு மாறானவற்றை ஏற்கான்; உள்ளதை உள்ளவாறு உரைப்பான்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வளரும் சிறார்கள் விடாமுயற்சி உடையவர்களாய் அமைதல் வேண்டுமென அவர் நினைத்தார். 'விடாமுயற்சியே எத்தகைய கடின

வேலையையும் எளிதில் வெற்றிபெறச் செய்ய வல்லது. விடாமுயற்சியால் வெற்றி பெற்ற உலகப் பெரியார்களின் உண்மை வரலாறுகளை மாணவர் ஊன்றிப் படித்தல்வேண்டும் ஐம்பது ஆண்டுகளாக விடாமுயற்சியுடன் இந்தியத் தலைவர்கள் அமைதியாகப் போரிட்டதன் பயனாகத்தான் நாம் இன்று விடுதலை பெற்று வாழ்கிறோம்' என்று விடாமுயற்சியின் பெருமையையும் சிறப்பையும் அவர் வலியுறுத்தியுள்ளார்

இவருடைய, மல்லிகை வாசகம் 1958இல் முதற்பதிப்புக் கண்டது பள்ளி ஆசிரியர்களின் பேராதரவைப் பெற்ற இப்பாட நூல், வெளியான நான்காண்டுகளுக்குள் ஏழு பதிப்புகள் கண்டது. தமிழ்நாட்டு அரசர்கள், தமிழர் வாழ்க்கை, இந்தியத் தலைவர்கள், உலக அறிஞர்கள், கைத்தொழில், பயிர்த்தொழில் எனப் பல்துறை சார்ந்த கட்டுரைகள் இதில் இணைக்கப்பட்டுள்ளன. 'இளைஞர் இயக்கங்கள்' என்னும் கட்டுரை, கிறித்துவ இளைஞர் கழகம், கிறித்துவப் பெண்கள் கழகம், செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் இயக்கம் எனும் அமைப்புகள் பற்றிய விளக்கமான செய்திகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மல்லிகை வாசகத்தின் தொடக்க வகுப்புகளுக்கான நூல்களில் அறிவூட்டும், வழிகாட்டும் கதைகள் பல சொல்லப்பட்டுள்ளன. நான்காம் வகுப்புப் பாடநூல் கொடைவள்ளல் குமணன், தேசிங்கு மன்னன், நண்பர் நால்வர், வீரத்தாய், அறிவுள்ள அமைச்சன், அறிவு திருந்திய இளைஞன், போலிச் சாமியார், சொல் தவறாத பேரரசர் எனும் கதைகளைக் கொண்டுள்ளது வாழ்க்கையைச் செம்மைப்படுத்த வல்ல இவற்றுடன், 'அவ்வையார்' பற்றிய சிறு நாடகமும் இணைக்கப் பட்டுள்ளது. மல்லிகை வாசகம் மூன்றாம் வகுப்புப் புத்தகத்தில் உள்ள, 'எங்கள் வீடு', 'எங்கள் படிப்பகம்', 'என் நண்பர்கள்' எனும் பாடங்களும், 'எல்லோரும் உடன்பிறந்தவர்' எனும் பாடலும் அவற்றைப் பயிலும் இளம் உள்ளங்களில் நல்ல பண்பு விதைகளை, சிந்தனைகளை விதைப்பனவாக் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மணிமாலை, வையை வாசகம், மதிவளர் மாலை முதலிய பாடநூல் வரிசைகள் இவரால் பதிப்பிக்கப்பட்டவை. இவற்றுள் தமிழ் மணிமாலை புலவர்கள் பு. செல்வராசன், சி. முருகேசன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு சென்னையில் பதிப்பிக்கப்பெற்றது வையை வாசகம் வித்துவான் நா. கோவிந்தனை ஆசிரியராகக் கொண்டு மதுரையில் வெளியானது.

## இலக்கணப் பயிற்சி

இலக்கிய அறிவுடன் இலக்கண அறிவும் இளைஞர்க்கு இன்றியமையாதது என்பது இராசமாணிக்கனார் கருத்து. அதன் விளைவாகவே மாணவர்க்குப் பயன்படுமாறு சிறுவர் சிற்றிலக்கணம், இளைஞர் இலக்கணம், பைந்தமிழ் இலக்கணமும் கட்டுரையும், கல்லூரித் தமிழ் இலக்கணம், செய்யுள் உரைநடைப் பயிற்சி நூல் என மாணவர்தம் கல்வித் தேவைகளுக்கேற்ப இலக்கணப் பயிற்சி நூல்களைப் படைத்தளித்தார். ஐந்தாம் வகுப்பு மாணவர்கட்கு உதவுமாறு இவரால் எழுதப்பெற்ற 'சிறுவர் சிற்றிலக்கணம்' நூல், 'சிறார்க்கு ஏற்ற முறையில் மிக எளிதில் விளங்குமாறு, இனிய நடையில் பொருத்தமான உதாரணங்களோடு' எழுதப்பட்டிருப்பதாகப் பாலக்காட்டு அரசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் எஸ். ஆறுமுகம் கூறியுள்ளார்

இப்பெரியார் அந்நூலுக்கான தம் முன்னுரையில், 'இவ்வாசிரியர் வேற்றுமையைப் பற்றிய பகுதியில் உதாரணங்களிலேயே வேற்றுமை உருபுகளைத் தடித்த எழுத்துக்களில் காட்டுவதோடு நில்லாது, கீழே பெயரையும் வேற்றுமையையும் பிரித்துக்காட்டி விளக்கியிருப்பதும் புதுமாதிரியாகும். 'நிறுத்துக் குறிகள்' இளமையிலேயே மாணவர் அறிந்துகொள்ள வேண்டியவையாதலின், இந்நூலிற் சேர்க்கப் பட்டிருப்பதும் அவசியமே இலக்கணத்தை எட்டிக்காயென நினைக்கும் இக்கால மாணவ, மாணவிகட்கு இவ்விலக்கண நூல் இனிப்பை அளிக்குமென்னும் துணிபுடையேன்' என்று கூறியிருப்பது இலக்கண நூலின் அமைப்பு முறையில்கூட இராசமாணிக்கனார் சிலவாகவேனும் புதிய உத்திகளைக் கையாண்டுள்ளமையைப் புலப்படுத்தும்.

இதே நூலில் தம் உரையாக, 'இக்கால மாணவர் மனநிலையைக் கவனித்தே இலக்கண விதிகளை அவர்களுக்குப் பழக்கமான உதாரணங்களைக் காட்டி விளக்கி அமைத்தல் வேண்டும். ஒவ்வொரு பகுதியின் கீழும் அப்பகுதியைப் பற்றிய வினாக்களையும் பயிற்சியையும் தந்து, சிறுவர் மனத்தினின்றே விடையை வருவித்தல் வேண்டும்' என்று கூறும் இராசமாணிக்கனார், 'இலக்கணம் மொழிப்பற்றையும், மொழியைப் பற்றிய ஒழுங்கையும் சாறாகத் தரும் இனிய கனி என்று எண்ணி மகிழுமாறு இலக்கண நூல் திருத்த முறையில் எழுதப்பட வேண்டும்' என்று இலக்கணப் பாடம் குறித்த தம் எண்ணங்களை மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

அவர் நூல்கள் அவர் நோக்கிற்கேற்ப அமைந்தவாறே, அவர் இலக்கண வகுப்புகளும் அமைந்திருந்தமையை அவரிடம் பயின்ற பேராசிரியர் இளஞ்செழியனார் விளக்குகிறார். 'தமிழ் இலக்கணப் பாடங்களை மாணவர்கள் வேப்பங்காய் என எண்ணி வெறுத்த நாட்கள் அவை. ஆனால், இனிய புலவர் இராசமாணிக்கனார் வகுப்பு எடுக்கத் தொடங்கிய சில நாட்களுக்குள் மாணவர்களின் இந்த மனப்போக்கை அடியோடு மாற்றிவிட்டார். அவருக்கு முன்னர் இலக்கணப் பாடங்களை எடுத்த ஆசிரியர்களில் பலர் தற்காலத்தில் வழங்காத - சங்க காலம் முதலிய பண்டைக்காலத்தில் மட்டுமே வழங்கி வந்த மாணவர்களுக்கு விளங்காத பெயர்களையே இலக்கண விதிகளுக்கு உரிய எடுத்துக்காட்டுகளாக அளித்து வந்தனர். பொருள் விளங்காத பெயர்களில் மாணவர்களுக்கு ஈடுபாடு இருக்க முடியாது அல்லவா? ஆனால், ஆசிரியர் இராசமாணிக்கனாரோ மாணவர்களின் வீடுகளில் நாள்தோறும் பயன்படுத்தப்படும் பண்டங்களின் பெயர்களையே விதிகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் எடுத்துக்காட்டுகளாகத் தருவார் ஆகவே, மாணவர்கள் அவ்விதிகளையும் விதிவிலக்குகளையும் மிக எளிதில் விளங்கிக் கொள்வர்.'

## வாழ்க்கை வரலாற்று நூல்கள்

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படுமாறும் பிற இளைஞர்களும் விரும்பி வாங்கிப் படிக்குமாறும் எண்ணற்ற வாழ்க்கை வரலாற்று நூல்களை இராசமாணிக்கனார் எழுதியுள்ளார். தமிழ்ச் சான்றோர், தமிழ் மண்ணையாண்ட வேந்தர்கள், புலவர் பெருமக்கள், அறிவியல் மேதைகள், நாட்டு விடுதலைக்கு உழைத்த தேசியத் தலைவர்கள், சமுதாயச் சிற்பிகள், உலக உத்தமர்கள் எனச் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக, மறுமலர்ச்சிக்காக உழைத்தோர் குறித்து அவர் எழுதிய நூல்கள் மாணவர் வாழ்க்கையில் வழிகாட்டலாக அமைந்தன.

1930க்கும் 1940க்கும் இடைப்பட்ட காலத்தில் இவர் எழுதிய பத்து நூல்களுள் எட்டு நூல்கள் வாழ்க்கை வரலாற்று நூல்களாகவே அமைந்தன. 1940க்கும் 1950க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏறத்தாழப் பதினேழு நூல்களைப் படைத்துள்ளார். 1950க்கும் 1960க்கும் இடையிலான ஆண்டுகளில் ஆறு நூல்கள் வந்துள்ளன இவை தவிர, தம்முடைய பொதுக்கட்டுரை நூல்களிலும் 'வாழ்க்கை வரலாறு'கள் பரவலாக இடம்பெறுமாறு செய்துள்ளார்.

தம்முடைய, 'இந்திய அறிஞர்' என்ற நூலின் முகவுரையில், 'இந்த அறிஞர் வரலாறுகள் பிள்ளைகளுடைய அறிவு வளர்ச்சிக்கும் ஆக்க வேலைகட்கும் தூண்டுகோலாகும். உரிமை பெற்ற தாய்நாட்டினை மேனிலைக்குக் கொண்டுவரத்தக்க துறைகளிற் பலவற்றை இவர்கள் வரலாறுகளிலிருந்து அறியலாம். இப்பெருமக்களுடைய ஊக்கம், உழைப்பு, பொறுமை முதலிய நல்லியல்புகள் மாணவரை நன்னெறியில் செலுத்தி வாழ்விக்க வல்லன' என்று இவர் கூறியிருப்பது, மாணவர் நலம் நோக்கிய இவர் உள்ளத்தின் விரிவையும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் இவர் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கையையும் வெளிக்கொணர்வதாய் உள்ளது.

'இந்திய அறிஞர்' எனும் நூலில் கோபாலகிருஷ்ண கோகலே, அசுடோஷ் முகர்ஜி, இராதாகிருஷ்ணன் எனும் மூன்று பெரியார்களைப் பற்றி எழுதியுள்ளார். இவர்களுள் கோகலே அரசியல் அறிஞர். அசுடோஷ் முகர்ஜி கல்வித்தொண்டு செய்தவர் இராதாகிருஷ்ணன் சமயம், தத்துவம் எனும் இருதுறைகளிலும் சிறந்தவர் இம்மூவரையும் ஒரு நூலில் இணைத்தமைக்குப் பொதுவான காரணம் ஒன்று இருந்தது. இம்மூவரும் தாய்நாட்டுத் தொண்டு செய்தலையே தாம் பிறவி எடுத்ததன் பயனாகக் கருதியவர்கள் தங்கள் உருக்கமான - அறிவு மிகுந்த சொற்பொழிவுகளினாலும் பலவகைத் தொண்டுகளினாலும் இந்தியாவின் சிறப்பினையும் தேவைகளையும் உலகறியச் செய்தவர்கள்.

இம்மூன்று அறிஞர்களுள் சர். இராதாகிருஷ்ணனின் வரலாற்றுக் குறிப்புகளை அவரிடமே கேட்டுப் பெற்றுத் தம் நூலில் இணைத்துக் கொண்டுள்ளார். அசுடோஷ் முகர்ஜி வங்காளத்தைச் சேர்ந்தவர். தாய்மொழிக்குத் தொண்டாற்றிய அப்பொதுநலத் தொண்டர் கல்கத்தா பல்கலையின் துணைவேந்தராக இருந்தவர். இந்தியாவில் அறிவியல் அறிவு நல்ல முறையில் பரவவேண்டும் - ஆராய்ச்சி உணர்வு ஆழ்ந்து பரவவேண்டும் எனும் அவாக் கொண்டிருந்தவர்; கல்விக்கு உழைப்பதே சிறந்த தொண்டு எனக் கருதி இருந்தவர். இத்தகு பெரியாரைப் பற்றி மாணவர்கள் அறிந்திருத்தல் அவசியமெனக் கருதியவர் இராசமாணிக்கனார். அதனாற்றான் மக்களுக்கு நன்கு அறிமுகமான கோகலேயின் வரலாற்றுடன், அதிகம் அறியப் படாதிருந்த அசுடோஷ் முதர்ஜியின் வரலாற்றையும் இணைத்துத் தந்துள்ளார்

'ஏழைக் கொல்லரின் புத்திரரான முசோலினி வாழ்க்கையில் தமக்குண்டான பலவகை இன்னல்களைக் கடந்து, முதலில் எங்ஙனம் உலகிற் சிறந்த இராசதந்திரியாராக மாறினார் என்பதை நம் நாட்டு இளைஞர் நுனித்தறிந்து, நாட்டுப்பற்று நனி சிறப்ப, உண்மை இந்திய மக்களாக மாறவேண்டும்' என்ற விருப்புடன் இராசமாணிக்கனாரால் எழுதப்பெற்ற, 'முசோலினி' எனும் நூல் 1934இல் வெளியானது. இருபது இயல்களில் 146 பக்கங்களில் அமைந்துள்ள இச்சிறு நூல் முசோலினியை ஒரு புதிய பரிமாணத்தில் அறிமுகப்படுத்துகிறது. தமிழ்நாட்டு வரலாறு, இந்திய வரலாறு இவைகளில் மட்டுமல்லாது, உலகளாவிய வரலாற்றிலும் இராசமாணிக்கனாருக்கு இருந்த தேர்ச்சியும் தெளிவும் இந்நூலில் பளிச்சிடுகின்றன.

1951இல் வெளியான இவருடைய 'அயல்நாட்டு அறிஞர் அறுவர்' எனும் நூல் ஆபிரகாம் லிங்கன், சாமுவேல் ஜான்சன், கிரகாம்பெல், ஜோன் ஆப் ஆர்க், வாஷிங்டன், சிம்ஸன் இவர்தம் வரலாறுகளை உள்ளடக்கிய நூலாகும் இந்நூலில் ஆபிரகாம் லிங்கனின் வரலாற்றை முடிக்குமிடத்து, 'மிகுந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்களும் படிப்படியாக உயர்ந்த பதவிக்கு வந்து பல அரிய காரியங்களைச் செய்யக்கூடும் என்பதற்கு ஆபிரகாமின் வரலாறு ஒன்றே போதுமல்லவா? தமது மனத்திற்குப் பிடித்த பதவி கிடைக்கும்வரை ஒன்றிலும் நிலைத்திராமல் விட்டுக் கொண்டே வந்து உயர்ந்த பதவியை அடைந்து, பல அரிய காரியங்களைச் செய்தாரல்லவா ஆப்ரகாம்? இந்த மனநிலைமை ஒவ்வொருவருக்கும் வேண்டும். மனத்திற்குப் பிடித்ததோ, பிடிக்காததோ, எதுவானாலும் சரி என்று நினைத்து முன்னிருந்த இடத்திலேயே இருந்து காலத்தை வீணாக்கும் இந்த முறை நம்மை விட்டு ஒழிய வேண்டும் மனத்திற்குப் பிடித்த வேலைதான் மகிழ்ச்சிக்குரிய வேலையாக இருக்கும்' என்று இவர் கூறியிருப்பது படிப்பார் சிந்தையில் எத்தகு மாற்றங்களை விளைவித்திருக்கும் என்பது கருதற்பாலது

1959இல் வெளியான, 'பேரறிஞர் இருவர்' எனும் வாழ்க்கை வரலாற்று நூல், 'கற்கின்ற இருபாலோர்க்கும் இத்தகைய வரலாறுகள் வருங்காலத்தில் சிறந்து வாழ வேண்டும் என்னும் விருப்பத்தை உண்டாக்கும்' நோக்கத்தில் எழுதப்பட்டதாகும். இந்நூலில் சிந்தனை யாளர்களான சாக்ரடீஸ், பிளேட்டோ இவர்கள் இருவரையும் கிரேக்க நாட்டு வரலாற்றின் பின்னணியில் மாணவர்களுக்கு நன்கு அறிமுகப் படுத்தியுள்ளார் இப்பெருந்தகை. இருவர்தம் வாழ்க்கைப் பாடுகளும்

சொல்லி, இறுதியில் அவர்தம் அமுத மொழிகளையும் கருத்துரை களையும் இளைஞர்க்கு வழிகாட்டுமாறு, பயன்படுமாறு தேர்ந்தெடுத்து இணைத்திருக்கும் நேர்த்தி, இராசமாணிக்கனார் வாழ்நாள் முழுவதும் மாணவர் தோழராகவே அவர்தம் நலம் நாடும் ஆசிரியராகவே இருந்தமையை வெள்ளிடை மலையாய்ப் புலப்படுத்துகிறது.

இவருடைய 'துருக்கியின் தந்தை' தமிழகத்து மாணவ, மாணவியருக்கு முஸ்தபாவின் வீர வரலாறு காட்டும் நூலாக அமைந்தது. இந்நூலில் முஸ்தபா கமாலின் நாட்டுப்பற்று, மொழிப் பற்று, இனப்பற்று முதலியன நன்கு விளக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டின் மக்கள் இம்மூவகைப் பற்றுக்களையும் கொண்டவராக இருத்தல் இன்றியமையாதது என்பதை இந்நூலின் வழி இளம் நெஞ்சங்களில் இவர் பதியச் செய்தார் இந்நூலின் இறுதியிலும் தம் வழக்கப்படி 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்பன போன்ற கமாலின் தேர்ந்த பொன்மொழிகளை மாணவர் பயன்பாட்டிறகாக இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கட்டுரைகள்

இவருடைய பொதுக்கட்டுரை நூல்களுள் பெரும்பான்மையன மாணவர்களுக்காவே எழுதப்பெற்றன. பாண்டியன் தமிழ்க் கட்டுரை, கட்டுரை மாலை, கட்டுரைக் கோவை, கட்டுரைச் செல்வம், விஞ்ஞானக் கலையும் மனித வாழ்க்கையும், அறிவுச் சுடர் என்பன அவற்றுள் சில. 1953இல் வெளியான, 'விஞ்ஞானக் கலையும் மனித வாழ்க்கையும்' என்ற இவரது நூல் பிற கட்டுரை நூல்களிலிருந்து உள்ளீட்டால் பெரிதும் வேறுபட்டு அமைந்தது. "What Science has done for Man' எனும் ஆங்கில நூலைத் தழுவி எழுதப்பட்ட இந்நூலில் ஒன்பது அருமையான அறிவியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 'அறிவியல் தமிழ்' பற்றிய சிந்தனையும் ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே இராசமாணிக்கனாரிடம் வேர் விட்டிருந்தமையை இந்நூல் கொண்டு உணரமுடிகிறது.

தமிழ்நாடு தழுவிய அளவில் வெளியான பல்வேறு மலர்களில் இவர் எழுதியிருக்கும் கட்டுரைகளும் வளரும் தலைமுறை பல்துறை அறிவு பெறவேண்டும் என்ற நோக்கிலேயே உருவாக்கப் பட்டிருப்பதை உணரமுடிகிறது. எந்த அமைப்பின் அல்லது நிறுவனத்தின் சார்பில் மலர் வெளியிடப்பட்டதோ, அந்தப் பின்னணிக்

கேற்பவே கட்டுரைகளைப் படைத்திருக்கும் அவரது திறம், பல்துறை சார்ந்த அவரது சிந்தனை விரிவை வெளிக்காட்டுகிறது.

சேலம் சாயத் தொழிற்சாலைச் சொந்தக்காரர்கள் சங்கம் வெளியிட்ட வெள்ளி விழா மலரில் (1960) ‘சங்க காலத் தமிழர் உடை’ பற்றியும் சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டு மலரில் (1958) ‘பதினோராண்டுக் கல்வித் திட்டத்தில் தமிழ்மொழியின் நிலை’ பற்றியும் செங்கற்பட்டு மாவட்ட நூலக நூற்றாண்டு மலரில் (1966) ‘செங்கற்பட்டு மாவட்டத்தில் புதைபொருள் ஆராய்ச்சி’ பற்றியும் அவர் எழுதியிருக்கும் கட்டுரைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன ஒரு பயணியின் துன்பங்ளைப் பகிர்ந்து கொள்ளும் ‘உந்து வண்டியில் செல்லுவோர் துயரம்’ என்ற தலைப்பிலமைந்த அவரது கட்டுரை (1961) எளிய, நடுத்தர மக்களின் வாழ்க்கையில் நிகழும் அன்றாட அவலங்களைக்கூட மிகுந்த நகைச்சுவை உணர்வுடன் கூறவல்ல அவரது ஆற்றலுக்குச் சான்றாக அமைந்துள்ளது

ஆறுகள், அருவிகள் பற்றி இவர் எழுதியிருக்கும் நூல்களும் பொதுக்கட்டுரை வகையினவே 1955இல் வெளியான வையையாறு பற்றிய நூல் ஆண்டுக்கொரு பதிப்புக் கண்டுள்ளது. பண்டைத் தமிழ் நூல்களையும் கல்வெட்டுகளையும் இன்றைய ஆராய்ச்சி நூல்களையும் வையை பற்றிய அரசாங்க வெளியீடுகளையும் துணையாகக் கொண்டு வரையப்பெற்ற இந்நூல் வையைக்கரை நாகரிகம் பற்றியும் ஓர் இயல் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது 1958இல் வெளியான பொருநையாறு பற்றிய நூல் அடுத்த ஆண்டிலேயே மூன்று பதிப்புகளைக் கண்டமை நூற்பதிப்பு வரலாற்றில் சிறந்ததொரு சாதனையாகக் கருதப்பட்டது. வையைக்கரை நாகரிகம் போலவே இதில் பொருநைக்கரை நாகரிகம் கூறப்பட்டுள்ளது.

இவ்வரிசையில் தென்பெண்ணையாறு பற்றிய நூலொன்றும் வெளிவந்துள்ளது இதில் பெண்ணை நாட்டு வரலாறு மூன்று இயல்களிலும் பெண்ணை நாட்டு ஊர்கள் நான்கு இயல்களிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன நயாகரா, விக்டோரியா, சிவசமுத்திரம், குற்றாலம் அருவிகளைப் பற்றி விரித்துரைக்கும், ‘அருவிகள்’ எனும் நூலில், ‘புதிய உலகமாகிய அமெரிக்கா கண்டறியப்பட்ட வரலாறும் அங்குக் குடியேறிய வெள்ளையர் மேற்கொண்ட முயற்சிகளும் இவ்வாறே இருள் கவிந்த கண்டமாகக் கருதப்பட்ட ஆப்பிரிக்கா, டேவிட் லிவிங்ஸ்டன் போன்ற தியாக வீரர் உழைப்பால் இருள் நீக்கப்பெற்ற வரலாறும், முதல் இரண்டு அருவிகளைப் பற்றிய

பகுதிகளில் விளக்கத்திற்காகத் தரப்பட்டுள்ளன'. பின்னிரு இயல்கள் காவிரி, குற்றால அருவி பற்றிய வரலாறும் அவை தொடர்பான இலக்கியச் செய்திகளும் கொண்டுள்ளன பாடநூல்கள், வாழ்க்கை வரலாறு, கட்டுரை நூல்கள் படைத்தளித்தாற் போலவே இளஞ்சிறார்க்குக் கதைநூல்களும் பாடல்களும் எழுதியவர் இராசமாணிக்கனார். 'பல்லவர் வரலாறு', 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' படைத்த அதே இராசமாணிக்கனாரா இவர் என்று வியப்படையுமாறு இவருடைய கதை நூல்கள் அமைந்துள்ளன. கதை மலர்மாலை, இராஜன் - சிறுவர்க்குரிய கதைகள், சிறுகதைக் களஞ்சியம் மூன்று தொகுதிகள், தமிழகக் கதைகள் என்பன குறிப்பிடத்தக்கன அவற்றுள், நாற்பது கதைகளைக் கொண்ட கதைமலர் மாலை வீடுகளில் வளரும் பிராணிகளிடம் குழந்தைகள் எப்படிப் பழகவேண்டும், அவற்றை எப்படிக் காக்க வேண்டும், அப்பிராணிகள் எங்ஙனம் நன்றியுடனும் அன்புடனும் விளங்குகின்றன, பெற்றோர் வீட்டில் இல்லாதபோது பிள்ளைகள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பன போன்ற செய்திகளைத் தருவதுடன் தியாக உணர்வு, கடமை உணர்வு ஆகிய இரண்டையும் பிஞ்சு உள்ளங்களில் பதியச் செய்யுமாறு உருவாக்கப்பட்டுள்ளது

பண்டைக்காலத்து அரசர் வாழ்க்கை, புலவர் நெறி, அரசர் - புலவர் உறவு இவை பற்றிய இலக்கியச் செய்திகளை எளிமைப் படுத்திக் கதை வடிவில் கொண்டுள்ள நூலே தமிழகக் கதைகள். 1959இல் வெளியிடப்பட்ட இக்கதைநூல் வரலாற்றின்பால் இராச மாணிக்கனாருக்கு இருந்த காதலையும் நம்பிக்கையையும் வளரும் பருவத்திலேயே பிள்ளைகள் வரலாற்றுணர்வுடன் வளர வேண்டும் என்று அவர் கருதிச் செயற்பட்டமையையும் உணர்த்துகிறது. சிறுகதைக் களஞ்சியம் மூன்று தொகுதிகளும் பிறர் நலம் பேணும் பெற்றி சிறார்க்குள் உருவாதல் வேண்டும் என்ற கருத்துடன் அமைக்கப் பட்டுள்ளன. இராசமாணிக்கனாரின், 'குழந்தைப் பாடல்கள்', 'சிறுவர் பாடல்கள்' என்னும் இரு கவிதை நூல்களும் குழந்தை இலக்கியத்தில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் ஆற்றலையும் வெளிக்காட்டுவனவாக உள்ளன

இணக்கமான, இளக்கமான முறைகளில் பயிற்றுவித்தல், நட்பாகப் பழகுதல், சூழவிருந்து தேவைக்கேற்ப உதவுதல், உள்ள உரம் வளர்க்க உரிய நூல்களைக் கட்டுரை - கதை - கவிதை எனும் பல வடிவங்களில் படைத்தளித்தல், படிப்புக் கல்வியுடன் பட்டறிவுக் கல்வியும் பெறுமாறு துணையிருத்தல் எனப் பணி தொடங்கிய காலந்தொட்டு, தம்

வாழ்நாளின் இறுதிவரை இராசமாணிக்கனார் ஒரு நல்லாசிரியராக, கொள்கைச் சான்றோராக, மாணவர் தோழராக வாழ்ந்தமையை அவரிடம் பல படிநிலைகளில் பயின்றவர்கள் நன்றியுணர்வுடன் வெளிப்படுத்தி மகிழ்ந்துள்ளனர்.

'பள்ளிக்கூடமே உலகம் - வகுப்பறையே வாழ்க்கை - பாடங்களைப் பயில்வது மட்டுமே புனிதமான தொண்டு - உயர்ந்த மதிப்பெண்களைப் பெறுவது மட்டுமே சிறந்த குறிக்கோள் என்று ஒரு குறுகிய வட்டத்திற்குள் என் வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டி வந்தவன் நான். அப்பேராசிரியப் பெருந்தகையின் அருமையான வழிகாட்டுதல் எனக்குக் கிடைத்த பின்னர்தான் பள்ளிக்கூடத்தின் நான்கு சுவர்களுக்கு அப்பாலும் ஓர் உலகம் இருக்கிறது - மிகப்பெரிய உலகம் - தமிழர் சமுதாயம் என்னும் பெயர் படைத்த உலகம் - என்னும் உண்மைகளை நான் முதன்முதலாக அறிந்து கொண்டேன். அந்த உலகத்தில் காணப்படும் பல்வேறு சீர்கேடுகளை அகற்றி, அந்த உலகத்திற்குப் புதியதோர் வலிமையையும் பொலிவையும் உருவாக்குவதற்கு என்னால் இயன்ற தொண்டுகள் ஆற்ற வேண்டியது என் தலையாய கடமை என்பதையும் புரிந்து கொண்டேன் எனக்கு முதல் அடியை எடுத்துக் கொடுத்தவர் - என் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் - என் பிற்கால வாழ்க்கைக்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தவர் என் ஆசிரியப் பெருமகனார் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள்தான்' எனும் பேராசிரியர் மா. இளஞ்செழியனார் கூற்று, இப்பெரியார் தம் காலம் முழுவதும் மாணவர் வாழ்விற்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தமையை உணர்த்தவல்லது.

# 7
# சிந்தனையாளர்

ஆசிரியர், ஆய்வாளர், அறிஞர் என்று தம் உழைப்பாலும் திறமையாலும் விடாமுயற்சியாலும் படிப்படியாக உயர்ந்த இராச மாணிக்கனார் தமிழ்நாடு கண்ட மிகச் சிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவர். மொழி, இனம், நாடு எனத் தமிழ்கூறும் நல்லுலகம் பற்றி ஆழச் சிந்தித்தவர்களுள் அவர் குறிப்பிடத்தக்கவர் சமயஞ் சார்ந்த மூடநம்பிக்கைகளும் சாதிப் பிணக்குகளும் பிறமொழி ஈடுபாடும் பெண்ணடிமைத்தனமும் சடங்கு நாட்டமும் கல்வியறிவின்மையும் தமிழ்ச் சமுதாயத்தைச் சூறையாடிக் கொண்டிருந்த காலகட்டத்தில்தான் இராசமாணிக்கனார் தம் ஆசிரியர் வாழ்க்கையைத் தொடங்கினார். தாமுண்டு, தம் குடும்பமுணடு, தம் வேலையுண்டு என்று அவரால் இருக்க முடியவில்லை

தமிழ் இலக்கியங்களைப் பழுதறப் படித்திருந்தமையாலும் இந்த நாட்டின் வரலாற்றை அடிப்படைச் சான்றுகளிலிருந்து அவரே அகழ்ந்து உருவாக்கியிருந்தமையாலும் மிக எளிய நிலையிலிருந்து உழைப்பு, முயற்சி, ஊக்கம் இவை கொண்டே உயரத் தொடங்கி யிருந்தமையாலும் தம்மால் இயன்றதைத் தாம் வாழும் சமுதாயத்திற்குச் செய்வது தமது கடமையென அவர் கருதியிருந்தார். மொழி நலம், தமிழ்த் திருமணம், சாதி மறுப்பு என்பன அவருடைய தொடக்கக் காலக் களங்களாக அமைந்தன. தாய்மொழி தமிழ், தமிழரிடையே பெறவேண்டிய மதிப்பையும் பயன்பாட்டையும் பெறாமலிருந்தமை அவரை வருத்தியது.

## மொழி

'தமிழ் நமது தாய்மொழி, ஈன்ற தாயைப் போற்றுதல் மக்களது கடமை. அது போலவே நமது பிறப்பு முதல் இறப்புவரையில் நமக்கு உறுதுணையாக இருந்து நம்மை வாழச் செய்யும் மொழியைக்

காப்பதும் வாழ்விக்கச் செய்வதும் தமிழராகிய நமது கடமை' 'இன்றைய தமிழரது வாழ்வில் தமிழ் எவ்வாறு இருக்கின்றது? ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு பேசும்போது பெரும்பாலும் பிறமொழிச் சொற்களைக் கலந்தே பேசுவதைக் காண்கிறோம். இப்பிறமொழிச் சொற்கள் நம் மொழியிற் கலந்து தமிழ்நடையைக் கெடுத்துவிடுகின்றன. ஒரு தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாகப் பிற மொழிச் சொற்களைக் கலந்து பேசுவதில் தலைசிறந்தவர் தமிழரே ஆவர். மொழிக் கொலை புரிவதில் முதற் பரிசு பெறத்தக்கவர் நம் தமிழரே ஆவர்.'

'நம் தமிழ்நாட்டுச் செய்தித்தாள்களில் தமிழ்ப் புலமையுடையார் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம் அதனாலும், நல்ல தமிழை வளர்க்கவேண்டும் என்ற ஆர்வம் இன்மையாலும் மிகப் பலவாகிய பிறமொழிச் சொற்களைக் கலந்து தமிழ் எழுதி வருகிறார்கள். இவற்றைத் 'தமிழ்ச் செய்தித்தாள்கள்' என்று கூறுவதற்குப் பதிலாக 'கலப்பு மொழிச் செய்தித்தாள்கள்' என்று கூறுதலே பொருந்தும். இவ்வாறு செய்தித்தாள்களில் மொழிக் கொலை புரிவோர் வேற்று நாட்டவரல்லர், வேறு மொழி பேசும் அயலாரல்லர், தமிழகத்தில் பிறந்து தமிழிலேயே பேசிவரும் மக்களாவர் என்பதை வெட்கத்துடன் கூறவேண்டுபவராக இருக்கிறோம்.'

'தமிழில் பேசித் தமிழ் கற்பிப்பதையே அலுவலாகக் கொண்டு தமிழால் வாழ்க்கை நடத்தும் தமிழாசிரியர் சிலர், தம்மிடம் கற்கும் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பற்றை ஊட்டுவதில்லை. நகரவைகளிலும் ஊராட்சிமன்றங்களிலும் இருப்பவர் அனைவரும் தமிழரே. அவர்கள் தெருக்களுக்குப் பெயரிடும் போது தமிழ்ப் புலவர்கள் பெயர்களை வைத்து வழங்கலாம். ஆனால், இந்நினைவு பெரும்பாலோருக்கு இல்லை பொதுமக்களிடையே நல்ல தமிழைப் பரப்ப வேண்டிய அச்சகங்களில் அப்பணிக்கேற்ற தமிழ்ப் புலவர்கள் இல்லை ஒரு குறிப்பிட்ட துறையில் வல்லவராய் இருப்பவர்க்குப் பிழையற்ற தமிழ் எழுதப் புலமை இல்லை தமிழர் திருமணம், தமிழர் கோயில்கள், தமிழர் கடைகள் இவை எவற்றிலும் தமிழ் இல்லை என்பதுதான் மிகத் துன்பமானது'

நாடு முழுவதும் மொழி நலம் குன்றியிருந்தமையைத் துறை சார்ந்த சான்றுகளோடும் கவலையோடும் சுட்டிக் காட்டியதோடு இராசமாணிக்கனார் நின்றுவிடவில்லை மொழியை எப்படி வளர்ப்பது, காப்பாற்றுவது,உயர்த்துவது என்பதே அவருடைய தொடர்ந்த

சிந்தனையாக இருந்தது காலங்காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த சமுதாயம் அவர் கண் முன் நின்றது. வடமொழி ஆதிக்கமும் ஆங்கிலமொழிப் பற்றும் தமிழ்மக்களின் கண்களை மூடியிருந்தன. தம் மொழியின், இனத்தின், நாட்டின் பெருமையறியாது இருந்த அவர்கட்குத் தமிழின் தொன்மையையும் ,பெருமையையும் சிறப்பையும் எடுத்துச் சொல்வது தம் கடமையென்று கருதினார் இராசமாணிக்கனார். அக்கடமையை நிறைவேற்ற அவர் கையாண்ட வழிகள் போற்றத்தக்கன.

தம்முடைய மாணவர்களை அவர் முதற்படியாகக் கொண்டார். நல்ல தமிழில் பேசவும் எழுதவும் அவர்களுக்குப் பயிற்றுவித்தார். சிறுசிறு கட்டுரைகளை உருவாக்கப் பயிற்சியளித்தார். மொழிநடை பற்றி அவர்களுக்குப் புரியுமாறு கலந்துரையாடினார். மொழிநடையைச் செம்மையாக்குவது இலக்கணமும் பல நூல்களைப் படிக்கும் பயிற்சியுமே என்பதை விளங்க வைத்தார். இலக்கணப் பாடங்களைப் பள்ளிப் பிள்ளைகள் விரும்பிப் படிக்குமாறு எளிமைப்படுத்தினார் அதற்கெனவே நூல்களை உருவாக்கினார். அவரிடம் பயின்ற மாணவர்கள் அவர் இலக்கணம் சொல்லிக் கொடுத்த அழகையும் படிப்படியாக இலக்கணத்தை நேசிக்கவைத்த திறனையும் பல இடங்களில் பதிவுசெய்துள்ளனர் பயிலும் நேரம் தவிர்த்த பிற நேரங்களிலும் மாணவர்களுடன் உரையாடித் தமிழ் மொழியின் வளமை குறித்து அவர்களைச் சிந்திக்கச் செய்தார். அவரிடம் பயின்றவர்களுள் பலர் பின்னாளில் சிறந்த தமிழறிஞர்களாகவும் நூலாசிரியர்களாகவும் உருவானமைக்கு இத்தகு பயிற்சிகள் உரமிட்டன.

பள்ளி ஆசிரியராக இருந்த காலத்திலேயே ஒத்த ஆர்வம் உடையவர்களைச் சேர்த்துக்கொண்டு அப்பகுதியிலிருந்த பொது மக்களுக்குத் தமிழ்க் கல்வியூட்டும் பணியை அவர் செய்துள்ளார். 'வண்ணையம்பதியில் தனலட்சுமி தொடக்கப் பள்ளியில் பேராசிரியர் தமிழ்த் தொண்டு தொடங்கியது அங்குத் தொடர்ந்து வகுப்புகள் நடத்தினார்.' பணிகளில் இருந்தவர்களுக்கு வார இறுதி நாட்களில் தமிழ் வகுப்பெடுத்தார். உறவினர்களைக்கூட அவர் விட்டு வைக்கவில்லை. 'குடியரசு' இதழில் சொற்ப ஊதியத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த தம் மைத்துனர் பு.செல்வராசனை 'வித்துவான்' படிக்க வைத்து சென்னை அப்துல் அக்கீம் உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணிபெறச் செய்தார்.

தமக்குக் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் மொழிச் சிந்தனைகளை விதைக்கப் பயன்படுத்திக் கொண்டவர், 'தமிழர் நல்வாழ்க்கைக் கழகம்', 'நக்கீரர் கழகம்', மாணவர் மன்றம்' முதலிய பொது நல அமைப்புகளோடு தம்மை இணைத்துக் கொண்டார். '1941 இல் சென்னை நக்கீரர் கழகம் என்ற அமைப்பினைத் தொடங்கிய காலத்துப் பேராசிரியர் அவர்களின் அரவணைப்பும் தொண்டும் கழகத்திற்குக் கிடைத்துக் கழகம் வளர்ந்து சிறந்தது. 1946ஆம் ஆண்டில் நக்கீரர் கழகம் 'திருவள்ளுவர்' என்ற திங்கள் ஏட்டினை நடத்தத் தொடங்கிய போது, பேராசிரியர் தம் கட்டுரைகளை வழங்கியதோடு அல்லாது, தாம் நட்புப் பூண்டிருந்த தவத்திரு ஈராஸ் பாதிரியாரின் கட்டுரையையும் பெற்றுத் தந்து இதழுக்குப் பெருமை சேர்த்தார் அடியவனின் தமிழ்த் தொண்டிற்கு ஊக்கமும் உள்ளத்திற்கு உரமும் துவண்டபோது தட்டி எழுப்பி ஊட்ட உரைகளும் அளித்துச் சிறப்பித்தவர் பேராசிரியர்' என்று இராசமாணிக்கனாரின் தமிழ்த் தொண்டை நினைவுகூர்ந்துள்ளார் நக்கீரர் கழக அமைப்பாளர் சிறுவை நச்சினார்க்கினியன்

## கல்வி

கல்வி வழி விழிப்புணர்வில் பெருநம்பிக்கை கொண்டிருந் தமையால், 'அரசியலாரும் சமூகத் தலைவர்களும் நாடெங்கும் கல்விக் கூடங்களை ஏற்படுத்த வேண்டும். கல்வி கற்கும் வயதுடைய எந்தச் சிறுவனும் சிறுமியும் கற்காமல் இருத்தல் கூடாது' என்று முழங்கிய இப்பெருமகனார், தாம் வாழ்ந்த பகுதியில் இருந்த அத்தனை குடும்பங்களின் பிள்ளைகளும் பள்ளிப் படிப்புக் கொள்ளுமாறு செய்துள்ளார். குறிப்பாகப் பெண் கல்வியில் இவர் கொண்டிருந்த நாட்டத்தை, 1938இல் இவரால் வெளியிடப்பட்ட, 'அறிவுச் சுடர்' நூலின் வழி அறியமுடிகிறது. 'பெண் எவ்வழியிலும் ஆடவனை விடத் தாழ்ந்தவள் அல்லள் என்பதும் அவள் அன்புக்கும் அருளுக்கும் அமைதிக்கும் நிலைக்களமானவன் என்பதும், 'கல்வி' முறையால் மேலும் உயர்நிலை எய்திக் கணவர்க்கேற்ற காரிகையாய்க் கவினுறுபவள் என்பதும், அத்தகையவள் வாழிடமே 'வீடு' என்பதும், அத்தகைமையளைப் பெறுபவனே பேறு பெறுபவன் என்பதும் அங்கைக் கனி அன்றோ.'

பெண்கள் பின்தங்கியிருந்த காலம் அது. 'அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு' என்று கேட்டவர்கள் மிக்கிருந்த காலம்.

அந்தக் காலகட்டத்தில்தான் பேராசிரியர் பெண் கல்விக்காகக் குரல் கொடுத்தார் எட்டாம் வகுப்பே படித்திருந்த தம் மனைவிக்குத் தாமே ஆசிரியராக இருந்து பயிற்றுவித்து அவரை, 'வித்துவான்' பட்டம் பெறச்செய்தார். 'என் கணவர் எனக்கு ஆங்கிலப் பாடமும் தமிழ்ப் பாடமும் கற்பித்து வந்தார். பாடம் கற்பிக்கும் நேரத்தில் பள்ளி ஆசிரியராகவே காணப்பட்டார். ஒவ்வொரு பெண்ணும் தன்னைக் காத்துக் கொள்ளும் வகையில் கல்வி கற்றுப் பொருளீட்ட வேண்டும் என்பது என் கணவர் கருத்து. அதனால், என்னைப் பெண்கள் பள்ளியில் தமிழாசிரியராக அமர்த்தினார். பின்பு அவர் மதுரைக்குச் சென்றபோது பாத்திமா கல்லூரியில் என்னைத் தமிழாசிரியராக அமர்த் தினார். மாணவியர்க்கு மொழியுணர்வும் நாட்டுணர்வும் வருமாறு பேச வேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவார்' என்று 'என் கணவர்' என்ற கட்டுரையில் திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனார் கூறியுள்ளமை இங்குக் கருதத்தக்கது

மொழி, இனம், நாடு இவற்றைப் பற்றி அறிந்திருந்தால்தான் அவற்றை நேசிக்கவும் அவற்றிற்குத் துணை நிற்கவும் முடியு மென்பதில் அவர் தெளிவாக இருந்தமையால்தான், 'கல்வி'யில் அக்கறை காட்டினார். அவருடைய ஆசிரியப் பணி அதற்குத் துணையானது தம்மிடம் பயில வந்தவர்க்கு மொழியுணர்வூட்டினார். 'தமிழகத்தில் ஆட்சி தமிழிலேயே இயங்க வேண்டும். எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஆங்கிலம் ஒழிந்த எல்லாப் பாடங்களையும் தமிழில் கற்பித்தல் வேண்டும்' என்பது அவர் கொள்கையாக இருந்தது 'அறிவியல் மனப்பான்மையை ஊட்டி வளர்க்கும் முறையில் அமைந்த பாட நூல்களையே பிள்ளைகள் படிக்கும்படிச் செய்தல் வேண்டும். உலக நாடுகளோடு தம் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்துக் குறைகளை நிறைவாக்கும் மனப்பாங்கு வளரும்படியான முறையில் கல்வி அளிக்கப்படல் வேண்டும். கடவுள் பற்றும் நல்லொழுக்கமும் சமுதாய வளர்ச்சியில் நாட்டமும் ஊட்டத்தக்க கல்வியை ஏற்ற திட்டங்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவருதல் வேண்டும்' என்று அவர் எழுதியுள்ளார்

'பேச்சுத் தமிழே எழுத்துத் தமிழுக்கு அடிப்படை ஆதலால், நமது பேச்சுத் தமிழ் பெரும்பாலும் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் எழுதும் தமிழ் நல்ல தமிழ் நடையில் இருக்க முடியும்' என்பது அவர் கருத்தாக இருந்தமையால், தம்மிடம் பயின்ற மாணவர்களை அவர் நல்ல தமிழில் பேசுமாறு வழிப்படுத்தினார் அதற்காகவே தாம் பணியாற்றிய

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருந்த மாணவர் மன்றங்களைச் செயலூக்கம் பெற வைத்தார். மன்றங்கள் இல்லாத கல்வி நிலையங்கள் அவற்றைப் பெறுமாறு செய்தார். பேச்சையும் எழுத்தையும் இளைஞர்கள் வளப்படுத்திக் கொள்ள உதவுமாறு ‘வழியும் வகையும்’ என்றொரு சிறு நூல் படைத்தளித்தார். எண்ணங்களை எப்படி உருவாக்கிக் கொள்வது, அந்த எண்ணங்களை வெளிப்படுத்த எத்தகு சொற்களைத் தேர்ந்து கொள்வது, அச்சொற்களை இணைத்துத் தொடர்களை எப்படி அமைப்பது, பின் அத்தொடர்களைக் கேட்டார்ப் பிணிக்குந் தகையனவாய் எங்ஙனம் அழகுபடுத்துவது என்பன பற்றி நான்கு தலைப்புகளில் அமைந்த இந்நூல் இளைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் இராசமாணிக்கனாரின் மொழி வழிச் சிந்தனைகளுக்கும் சிறந்த சான்றாக அமைந்தது.

தமிழ் மொழியின் தொன்மை, பெருமை இவற்றைத் தமிழர்கள் அறியவேண்டும் என்பதற்காகவே அவர் எழுதிய நூல், ‘தமிழ் மொழிச் செல்வம்’. ‘தமிழ் இனம்’, ‘தமிழர் வாழ்வு’, ‘என்றுமுள தென்றமிழ்’, ‘புதிய தமிழகம்’ என்னும் அவருடைய நூல்கள் தமிழ் மக்களுக்கு அவர்கள் மறந்திருந்த மொழியின் பெருமையை, சிறப்பை அடையாளப்படுத்தின ‘ஒரு மொழி பேசும் மக்கள் தம் மொழியின் பழைமையையும் பெருமையையும் வளர்ச்சியையும் நன்கு அறிந்தாற்றான், அம்மொழியினிடத்து ஆர்வமும் அதன் வளர்ச்சியில் கருத்தும் அம்மொழி பேசும் தம்மினத்தவர்மீது பற்றும் கொள்வர் இங்ஙனம் மொழியுணர்ச்சி கொள்ளும் மக்களிடையேதான் நாட்டுப்பற்றும் இனவுணர்ச்சியும் சிறந்து தோன்றும். ஆதலின், ஓரினத்தவர் இனவொற்றுமையோடு நல்வாழ்வு வாழ மொழி நூலறிவு உயிர்நாடி போன்றதாகும் இம்மொழி நூலறிவு தற்காப்புக்காகவும் தம் வளர்ச்சிக்காகவும் வேண்டற்பாலது என்பதைத் தமிழ் மக்கள் அறிதல் நலமாகும்’ என்ற அவர் சிந்தனையை இந்நூல்கள் மக்களிடையே வேர்பிடிக்கச் செய்தன.

தமிழ் மக்களுக்கு மொழிப்பற்றையும் மொழியறிவையும் ஊட்டிய அதே காலகட்டத்தில், அவர்களை நாட்டுப்பற்று உடையவர்களாகவும் மாற்றினார். தமிழ்நாட்டின் பெருமையை, வரலாற்றை இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொரு குடிமகனும் நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே, ‘தமிழக ஆட்சி’, ‘தமிழகக் கலைகள்’, ‘தமிழர் நாகரிகமும் பண்பாடும்’, ‘தமிழக வரலாறு’ என்னும் நூல்களை எழுதி வெளியிட்டார். நாட்டுக்காக உழைத்த அறிஞர்களின் வரலாறுகளைச் சிறுசிறு நூல்களாக்கி இளைஞர்கள் அவற்றைப்

படித்துய்ய வழி வகுத்தார். இளைஞர்கள் படித்தல், சிந்தித்தல், தெளிதல் எனும் மூன்று கோட்பாடுகளைக் கைக்கொண்டால் உயரலாம் என்பது அவர் வழிகாட்டலாக இருந்தது.

மொழி, இனம், நாடு எனும் மூன்றையும் தமிழர்க்குத் தொடர்ந்து நினைவூட்டல் எழுதுவார், பேசுவார் கடமையென்று அவர் கருதியமையால் தமிழ் எழுத்தாளர்கள் எங்ஙனம் அமைதல் வேண்டுமென்பதற்குச் சில அடையாளங்களை முன்வைத்தார். 'தாமாக எண்ணும் ஆற்றல் உள்ளவரும் உண்மையான தமிழ்ப்பற்று உடையவருமே நல்ல எழுத்தாளர். தமிழ் எழுத்தாளர் தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் படித்தவராக இருப்பது நல்லது. தாழ்ந்துள்ள தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்தப் பயன்படும் நூல்களை எழுதுவதையே எழுத்தாளர்கள் தங்கள் சிறந்த கடமையாகக் கருதவேண்டும். சமுதாயத்தில் இன்றுள்ள தீண்டாமை, பெண்ணடிமை, மூட நம்பிக்கைகள், கண்மூடித்தனமான பழக்க வழக்கங்கள் முதலிய பிற்போக்குத் தன்மைகளை வன்மையாகக் கண்டிக்கும் நெஞ்சுறுதி எழுத்தாளர்க்கு இருக்க வேண்டும்' அத்தகைய எழுத்தாளர்கள், 'தமிழர்' என்ற அடிப்படையில் ஒன்றுகூடுதல் வேண்டும் என்று அவர் விழைந்தார்.

அதனாலேயே மதுரையில் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் மதுரை எழுத்தாளர் மன்றத்தை உருவாக்கி அது சிறந்த முறையில் இயங்குமாறு துணையிருந்தார் இம்மன்றத்தின் தலைவராக இருந்து மன்றத்தின் முதல் ஆண்டு விழாவில் அவர் ஆற்றிய உரை தமிழ் எழுத்தாளர் கடமை பற்றிய அவருடைய அறைகூவலாக அமைந்தது. 'தமிழகத்தில் பல நூற்றாண்டுகளாக ஆட்சி மொழியாக இருந்த நமது தமிழ் பிற்காலத்தில் தனது அரியணையை இழந்தது; இப்பொழுது வளர்ந்து வருகின்றது. எழுத்தாளர்கள் இதனை மனத்தில் பதியவைத்தல் வேண்டும், அதன் தூய்மையையும் பெருமையையும் தொடர்ந்து பாதுகாப்பதே தங்கள் கடமை என உணர்தல் வேண்டும்'.

'மக்கள் பேசுவது போலவே எழுத வேண்டும். அதுதான் உயிர் உள்ள நடை என்று சொல்லி பாமர மக்கள் பேச்சு நடையையே எழுத்தாளர் பலர் எழுதி வருகின்றனர் பாமர மக்களது நடை பொதுமக்களுக்கு நன்கு தெரியும்; அதைத் தெரிந்து கொள்ள எழுத்தாளர் நூல்களை விலை கொடுத்து வாங்க வேண்டும் தேவை இல்லை அல்லவா? கொச்சை மொழி பேசும் மக்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகளை ஊட்டுவதோடு, இனிய,

எளிய, செந்தமிழ் நடையையும் அறிமுகம் செய்து வைப்பதுதான் எழுத்தாளரது கடமையாக இருத்தல் வேண்டும். எழுத்தாளர் தங்கள் எளிய, இனிய செந்தமிழ் நடைக்கு மக்களை அழைத்துச் செல்ல வேண்டுமே தவிர, மக்களுடைய பேச்சு நிலைக்குத் தங்களை இழித்துக் கொண்டு போவது முறையன்று சிறந்த கருத்துக்களோடு பிழையற்ற எளிய நடையையும் பொதுமக்களுக்கு ஊட்டுவது எழுத்தாளர் கடமை என்பதை அவர்கள் மறந்து விடலாகாது. இதுவே அறுநெறிப்பட்ட எழுத்தாளர் கடமை என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.'

## சாதி

தமிழினத்தைச் சிதறடிக்கும் சாதிப் பிரிவினைகளைத் தமிழ் எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் தங்களால் இயன்றமட்டும் எதிர்க்க வேண்டுமென அவர் எதிர்பார்த்தார் ஆண்சாதி, பெண்சாதி தவிர சாதி வேறில்லை என்பதே அவர் கோட்பாடாக இருந்தது 'தமிழினத்தின் உயிர்நாடிக்கே உலைவைக்கும் சாதி வேறுபாடுகள் இயற்கையில் உண்டானவை அல்ல செயற்கையில் உண்டான இவ்வேறுபாடுகள் செய்துள்ள தீமைகள் பல ஆதலின், இவற்றை இன வாழ்விலிருந்து அகற்றுவதே தமிழர் நல்வாழ்விற்கு அடிப்படையாகும்' எனும் சிந்தனையைத் தம் எழுத்துரைகளிலும் மேடைப் பேச்சுகளிலும் முதன்மைப்படுத்தினார் தமிழரிடையே சாதிகள் தோன்றிய வரலாற்றைத் தம் ஆராய்ச்சி அறிவினால் இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு நிறுவினார். தொழிலால் அமைந்த பெயர்கள் நாளடைவில் கெடுமதியாளர்களால் சாதிப் பிரிவுகளாகிவிட்ட உண்மை நிலையை எடுத்துக்காட்டி, இச்சாதி வேறுபாடுகளை நீக்கக் கட்டாயக் கலப்பு மணச் சட்டம் ஒன்றே வழி என்று எடுத்துரைத்தார்

'ஒவ்வொரு சாதியாரும் தங்களுக்கெனச் 'சாதிச் சங்கம்' அமைத்துக் கொண்டு ஆரவாரம் செய்தலைத்தான் காண்கின்றோம். அச்சங்கமாவது அச்சாதியினர் அனைவருக்கும் நலன் செய்கின்றதா? அதுவும் இல்லை. போதாக்குறைக்கு ஒரே சாதியினர்க்குள் பல்வேறு அரசியல் கட்சிகள் புகுந்து பல்வேறு பிரிவுகளை உண்டாக்குகின்றன. உயர் அலுவலில் உள்ள ஒரு சாதியான் தன் இனத்தவரையே பல அலுவல்களில் அமர்த்துவதைப் பார்க்கின்றோம் படித்த அவனிடம் சாதி வெறி தலைவிரித்தாடுகின்றது. பள்ளித் தேர்வுகளிலும் பரிசுகள் கொடுப்பதிலும் உதவிச் சம்பளம் வழங்குவதிலும் இச்சாதி வெறியைக் காண்கின்றோம்

இச்சாதி வெறியால் மக்கள் நெறி தவறுகின்றனர்; பொய் பேசுகின்றனர்; ஒருவரையொருவர் ஏமாற்றுகின்றனர் ஒரு கல்லூரிக்கு உரிய பொருளுதவியைப் பல சாதியாரிடமிருந்து பெற்றுக்கொண்டு, அக்கல்லூரியில் ஒரு சாதியாரையே வேலையில் அமர்த்தும் கொடுமையையும் நாம் காண்கின்றோம். இப்படியே கோவில் முதலியவற்றில் ஒரு குறிப்பிட்ட சாதியினரே பணி செய்யக் காண்கின்றோம். இக்கேடுகெட்ட நிலைகளால் ஓர் இனத்தவர் மற்றொரு இனத்தவரை வெறுக்க வழி ஏற்படுகிறது. இந்நிலையில் சமுதாய ஒற்றுமை எப்படி ஏற்பட முடியும்? சமுதாய ஒற்றுமை ஏற்பட்டாலன்றோ அன்பு மலரும். அன்பின் அடிப்படையிலன்றோ அருள் தோன்றும். இவற்றையெல்லாம் அறிஞர் ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்' எனும் இராசமாணிக்கனாரின் சுட்டல்களுக்குப் பலனிருந்தது.

இப்பலனைப் பரவலாக்கப் பட்டி தொட்டி எல்லாம் சென்று சாதி எதிர்ப்புக் கொள்கையை விதைத்தார்.

*'சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்;*
*சாத்திரக் குப்பையும் தவிர்ந்தேன்...*
*சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே*
*ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!*
*அழிந்தழிந்து வீணேநீர் அழிதல் அழகலவே'*

எனும் இராமலிங்க அடிகளாரின் எண்ணமே இராசமாணிக்கனாரின் கருத்தாகவும் அமைந்தது

**சமயம்**

சாதியைப் போலவே சமயமும் சீர்ப்படவேண்டுமென அவர் விழைந்தார். 'மனிதர் உலகில் நேர்மையாக வாழ்வதற்குரிய பாதையை வகுத்துக் கூறும் கருத்துக்களின் திரட்சியே மதம் அல்லது சமயம்' எனும் விவேகானந்தர் கருத்துடனும் 'சமுதாய நலத்துக்காக ஒவ்வொருவரையும் உழைக்கத் தூண்டுவதும் உயர்ந்த வாழ்க்கையை நடத்த வழிகோலுவதும் சமயமாகும்' எனும் தத்துவ அறிஞர் இராதாகிருஷ்ணனின் சிந்தனையுடனும் அவர் ஒன்றியிருந்தார். அதனாற்றான், 'ஒழுக்கமுடையவனே சமயவாதி - பொதுமக்களுக்கு உழைப்பவனே சமயவாதி' என்று அவர் முழங்கினார்.

'இறைவன் ஒருவன் உண்டு; ஒன்றே குலம், ஒருவனே தேவன்; அந்த இறைவனை வழிபடப் பொருட் செலவு தேவையில்லை. அவனை எங்கும் எப்பொழுதும் வழிபடலாம் சமயத்தின் பெயரால் நடைபெறும் கொள்ளைகள் ஒழிக. மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிக' என்று நாடெங்கும் சுற்றிப் பொதுமக்களுக்கு அறிவுரை கூறலானார் சமயத் தூய்மை பற்றியும் சமய ஒழுக்கம் பற்றியும் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளும் எழுதிய கட்டுரைகளும் மக்களிடையே அவர் நாத்திகரோ என்ற ஐயத்தை உண்டாக்கின. ஆனால், அந்த ஐயம் அகலுமாறு, 'டாக்டர் இராசமாணிக்கனார் பழுத்த சைவர் ஆனால் சமய ஊழல்களைக் கண்டிக்கும் மனஉறுதி உடையவர். சைவ சமயக் கூட்டங் களிலேயே சமய ஊழல்களைக் கண்டிக்கும் மனஉரம் படைத்தவர்' என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்றோர் எடுத்துக் கூறி அவர் சமயத் தூய்மையை நாட்டுக்கு உணர்த்தினர்

'சமய வாழ்க்கை' என்ற தலைப்பின் கீழ், 'யார் ஆத்திகன்?' என்ற கேள்விக்கு விடை தருமாறு போல, 'மனிதனை மனிதனாக எண்ணத் தூண்டும் அன்பே சமயம்; அந்த அன்பே சிவம்; இச்சிவத்தை நம்புபவனே ஆஸ்திகன், சாதி வேறுபாடு காட்டாதவனே ஆஸ்திகன்; எல்லா உயிர்களிடத்தும் ஆன்மா உண்டு என்பதை மதித்து, அன்பும் அருளும் காட்டுபவனே ஆஸ்திகன்; எத்தகைய சோதனை வரினும் ஒழுக்கத்திலிருந்து தவறாதவனே ஆஸ்திகன்' என்று வரையறுத்து, 'அவன் நடமாடும் கோவில்களாகிய மனிதரை நேசிப்பவன்; தீய பண்புகள் இல்லாமல் வாழ்க்கையை நடத்துபவன்; எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றையும் அவன் அறியான்; பிறர் துயரம் தன் துயரம் போலக் கருதி உதவுவான்; எல்லோ ராலும் நல்லவன் என்று பாராட்டப்படுவான்; எதனையும் நன்கு ஆராய்ந்து கொள்ளத் தக்கதையே கொள்வான்' என்று ஆத்திகனை அவர் விளக்கியுள்ள பாங்கு, அக்காலகட்டத்தில் சமய வாழ்க்கை பற்றி அவருக்கிருந்த கண்ணோட்டத்தைக் காட்டுவதாக உள்ளது.

## தமிழர் திருமணம்

சாதிகள் ஒழிந்து சடங்குகள் அற்ற சமயம் நெறிப்படத் தமிழர், 'தமிழ் வாழ்வு' வாழவேண்டுமென்பதில் அவர் கருத்தாக இருந்தார். அதனால்தான், வாழ்க்கையின் தொடக்க நிலையான திருமணம் தமிழ்த் திருமணமாக அமையவேண்டுமென அவர் வற்புறுத்தினார். இதற் காகவே அவர் வெளியிட்ட 'தமிழர் திருமண நூல்' தமிழ்ப் பெரியார்

களின் ஒருமித்த வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது தமிழ் நாட்டளவில் அதற்கு முன்போ அல்லது பின்போ, ஏன் இதுநாள் வரையிலும்கூட வேறெந்தத் தமிழ் நூலும் இது போல் தமிழ் கூறும் நல்லுலகத்தின் ஒருமித்த அரவணைப்பைப் பெற்றதாக வரலாறு இல்லை.

மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், கா.சுப்பிரமணிய பிள்ளை, ஆர்.கார்மேகக் கோனார், பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார், பண்டித ந மு.வேங்கடசாமி நாட்டார், எல்.உலகநாத பிள்ளை, ஆர். வேங்கடாசலப்பிள்ளை, த வே.உமாமகேசுவரப் பிள்ளை, எம் எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை, கே.என் சிவராஜபிள்ளை, சி.கே. சுப்பிரமணிய முதலியார், துடிசை கிழார் அ.சிதம்பரனார், வித்துவான் மு வரதராசன், பண்டிதை எஸ் கிருஷ்ணவேணி அம்மாள், பண்டிதை த.பதுமாவதி அம்மாள், திரு வி.கலியாணசுந்தரனார் முதலிய அந்நாளைய தமிழறிஞர்கள் அனைவரும் இந்நூலை வரவேற்று, 'இராசமாணிக்கம் கொண்ட இச்சீர்திருத்தத்தை யாவரும் மனமுவந்து ஏற்று நடைமுறையில் கொண்டுவர வேண்டும்' எனக் குரல் கொடுத்தனர். இது அவருடைய தூய சிந்தைக்கும் தமிழ் நலம் தவிர வேறொன்று கருதாத நேர்மைப் பண்பிற்கும் தமிழுலகம் தந்த பரிசெனலாம்.

தமிழர் திருமண நூலில் பண்டைத் தமிழர் திருமண முறையை மிக விளக்கமாகப் பேசுவதற்கு முன், 'நாம் தாய் மொழியைப் போற்றாது விட்டோம்-தமிழ்க் கலையை வளர்க்காது விட்டோம் - தமிழ் மரபைக் காவாது விட்டோம்; வடமொழிக்கே அடிமை பூண்டு பகுத்தறிவு குன்றிய மக்களாக மாறிவிட்டோம் இம்மாறுபாடான இழி நிலைமையிலிருந்து நாம் எழுந்து, பண்டைத் தமிழராய் நம் முன்னோர்தம் வீறு பெற வேண்டுமாயின், தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தல் வேண்டும்; தமிழ் மரபுக்குரிய பழக்க வழக்கங்களைக் கையாளுதல் வேண்டும்; கால நிலைமைக்கு ஏற்பச் சிற்சில மாறுதல் களோடு நம் முன்னோர் நெறிச் செல்லல் வேண்டும். எத்தகைய சடங்கைப் பழக்கத்தில் கொண்டுவருவதாயினும், அது நம் முன்னோராய சங்க காலப் புலவருடைய ஆட்சியைப் பெற்றுள்ளதா என்பதைக் கவனித்தல் வேண்டும். அத்தகைய ஆட்சியைப் பெறாத ஒன்று பயனுடையதென இன்று காணப்படின், அதனைப் போற்றிக் கைக்கொள்ளல் வேண்டும். சுருங்கக் கூறின் முன்னோர் ஆட்சி உடையனவும் தமிழ் மரபுக்கு மாறாக இராதனவும் ஆகிய பழக்க வழக்

கங்களையும் சடங்குகளையும் நாம் கைக்கோடல் தவறாகாது' என்று அவர் தம் நோக்கத்தையும் எதிர்பார்ப்பையும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்

அகநானூற்றுச் செய்யுட்களாலும் (86, 136) தொல்காப்பிய உரை விளக்கங்களாலும் தமிழர் திருமண முறை விளக்கிப் 'புரோகிதர் நுழைவும் புதிய சடங்குகளும்' எவ்விதம், எக்காலத்து வந்தன என்பதைச் சான்றுகள் கொண்டு நிறுவி, இனி தமிழர் செய்யத்தகும் மணச் சடங்குகள் யாவை என்பதை ஒன்றன் பின் ஒன்றாகத் தொடரொழுங்கு வழுவாது வரிசைப்படுத்திக் கோயிலில் செய்யப் படும் திருமணங்கள் எவ்வாறு அமையலாம் என்பதற்கும் வழிமுறை கூறி அவர் எழுதிய 'தமிழர் திருமண நூல்' அந்நாளில் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதால், அவரையே அத்தகு திருமணம் நடத்தித் தருமாறு பலரும் அழைத்தனர்

அவ்வழைப்புகளை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட இராச மாணிக்கனார் 'ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருமணங்களை நடத்தி வைத்தார் தமது பொன்னான காலம் வீணாகக் கழிவதையும் பொருட்படுத்தாமல், தமிழ் ஆர்வமும் சீர்திருத்த உணர்வும் பரவினால் போதுமென்று இவ்வாறு செய்துவந்தார்.' 'தமிழகத்தில் அவர் சென்று திருமணம் செய்து வைத்திராத ஊர்கள் பலவாக இரா திருமணங்கள் நடத்தி வைப்பதற்குக் கட்டணம் ஏதும் அவர் பெறுவதில்லை தமிழ்ப் பணியாகவே செய்துவந்தார். தமிழரின் பண்டைய மரபினை மக்கள் மறந்துவிடக்கூடாது என்பது அவரது ஆவல்' என்று இராசமாணிக்கனாருடன் நெருங்கிப் பழகிய திரு. வல்லை பாலசுப்பிரமணியமும் திரு கீ இராமலிங்கனாரும் குறிப் பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இராசமாணிக்கனார் 1939இல் எழுதிய தமிழர் திருமண நூலை, 1999இல் வெளியிடப்பட்ட 'சுயமரியாதைத் திருமணம் தத்துவமும் வரலாறும்' என்ற தம் நூலில் திரு.கி.வீரமணி பின்னிணைப்பாக அச்சிட்டிருப்பதும் இந்நூல் குறித்துத் தமிழறிஞர்கள் முப்பத்து மூவர் அந்நாளில் தெரிவித்த கருத்துக்களை உடன் இணைத்திருப்பதும், 'இராசமாணிக்கனார் எழுதிய நூல் ஆதாரபூர்வமாக அமைந்துள்ளதால் இதனைப் பின்னிணைப்பாக வெளியிடுகிறோம்' என்று அறிவிப்புச் செய்திருப்பதும் அப்பெருந்தகையின் உழைப்பும் நோக்கமும் என்றென்றும் பெருமைக்குரியனவாய் விளங்குமாற்றை நிறுவுவது போல் அமைந்துள்ளன.

'தமிழர்கள் தங்கள் திருமணம் மட்டுமல்லாது, வீட்டு நிகழ்வுகள் அனைத்திலும் தமிழ் நிலவும்படி, தமிழ் மரபுப்படி இயங்கவேண்டும். தமது பழைய வரலாற்றை உணர்ந்து, தாம் வளமாக வாழ்ந்த மரபினர் என்பதை எண்ணி, எண்ணி உயர வழி தேட வேண்டும். எத்தகைய எளியவராயினும் எப்பாடுபட்டேனும் தம் மக்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும். அவர்களுக்குத் தமிழ் உணர்வும் தமிழ்நாட்டுப் பற்றும் உண்டாக்க வேண்டும். நேரிய வழிகளில் பொருளாதார உயர்வு பெற வழிகாட்ட வேண்டும் தமிழ்ப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு இட்டு வழங்குமாறு செய்ய வேண்டும்' என்று ஒல்லும் வழியெல்லாம் தமிழர் வளர, வளமாக வாழ வழிகாட்டிய நற்சிந்தனையாளர் இராசமாணிக்கனார், மக்கள் தொண்டு, கூட்டுறவு, ஊரகத் தொழில்கள் இவை பற்றியும் பல பயனுள்ள சிந்தனைகளை முன் வைத்துள்ளார்.

## கூட்டுறவு

கூட்டுறவின் வழித் தனியுடைமையும் பொதுவுடைமையாக முடியும் என்பது அவர் கருத்து இதை வலியுறுத்துமாறு போல இரண்டு புதினங்களை அவர் படைதலுள்ளார் 1958இல் வெளியான 'தமிழரசி' எனும் புதினத்தின் முகவுரையில் 'எல்லோரையும் மதித்து நடந்து கொள்ளுதல், அனைவரிடத்தும் அன்பாக இருத்தல், தன்னைப் போலவே பிறரும் வாழ வேண்டும் என்று எண்ணுதல் போன்ற நல்லியல்புகள் இளமை உள்ளத்தில் நன்கு பதிந்து வளரச் செய்ய வேண்டும்; இன்றைய பிள்ளைகளே எதிர்காலக் குடிமக்கள் ஆதலால், இந்நல்லியல்புகளைப் பெற்று வளரும் பிள்ளைகள் எதிர்காலத்தில் குடிமக்களாக வரும்பொழுது, அவர்களைக் கொண்ட சமுதாயம் உயர்ந்த பண்புடைய சமுதாயமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இந்த அடிப்படை உண்மையை விளக்குவதே இக்கதை' என்று குறிப்பிட்டுள்ளமை, 'எல்லோரும் வாழ வேண்டும்' என்ற அவர் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. இதையே தலைப்பாகக் கொண்டும் அவர் ஒரு நூல் எழுதியுள்ளார் சொல் வேறு செயல் வேறாக வாழாத அப்பெருந்தகை, தம்முடைய மடல்கள் அனைத்திலும் இறுதியாகத் 'தங்கள் நல்வாழ்வை விரும்பும்' என்று எழுதிக் கையெழுத்திடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

செல்வச் செழிப்பான ஒரு ஜமீன்தாரின் மகள் தன் ஜமீன் மக்களின் நல்வாழ்விற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமென்பதை விளக்கும் புதினமே 'தமிழரசி'யாக உருவானது. நல்ல தாய் எப்படி இருக்க

வேண்டும், பெற்றோர்களின் கடமை என்ன, பெண் கல்வி எதற்கு என்பன போன்ற வாழ்வியல் சிந்தனைகள் இந்நூல் முழுவதும் விரவியுள்ளன. 'கடவுள் வழிபாடு தேவை'. ஆனால், ஏழைகளைக் கவனிக்காமல் சமயத்தின் பெயரால் பொருளைப் பாழாக்குதல் தவறு சாதிவேறுபாடுகள் இல்லாமல் அன்பு ஒன்றையே அடிப்படையாக வைத்துக் கிராம மக்கள் பழக வேண்டும் - கிராமத்தில் ஒவ்வொரு தொழிலும் தேவையானது - ஆதலால் எந்தத் தொழிலையும் அவமதித்தல் கூடாது - ஒவ்வொரு தொழிலாளரையும் மரியாதையாக நடத்த வேண்டும்.'

'எல்லோரும் வேலை செய்து பிழைக்க வேண்டும் பிச்சை எடுப்பவரே நாட்டில் இருக்கக்கூடாது' 'வலியவர் மெலியவரை ஆதரித்தால் நாட்டில் அமைதியும் இன்பமும் பெருகும்' என்று கூறும் இராசமாணிக்கனார், 'கல்வி மட்டுமே ஒருவரைப் பண்படுத்துவ தில்லை. ஒழுக்கம் வேண்டும். எல்லோரும் ஒழுக்கத்திற்கு மதிப்பைத் தரவேண்டும். ஒழுக்கம் உயிரினும் சிறந்தது ஒழுக்கத்தோடு உறையும் கல்விதான் மனிதனை உயர்விக்கும்' என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

சமய வாழ்க்கை பற்றிய அவர் சிந்தனைகளும் தமிழரசியில் பரவலாக இடம்பெற்றுள்ளன சமயப் பெரியார்கள் ஒழுக்க சீலர்களாய் இருத்தல் வேண்டுமென அவர் விரும்பினார். அதற்கு முன்மாதிரியாக அவர் உருவாக்கிய, 'தமிழரசி'யின் சுந்தரசுவாமிகள் ஒப்பற்ற மக்கள் தொண்டராகக் காட்சி தருகிறார் அவர் மடத்தின் பெரிய மண்டபத்தில் இராமலிங்கர், திருநாவுக்கரசர் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. மடத்திற்கு மற்றொரு பக்கத்தில் சிறிய சிவன் கோவில் ஒன்று இருந்தது சுந்தரசுவாமிகள் நாள்தோறும் காலையில் தாமே அங்கு வழிபாடு செய்வது வழக்கம். அதற்கென்று தனியாகக் குருக்கள் இல்லை அங்கு வடமொழி மந்திரங்கள் சொல்லப்படுவதில்லை அருச்சனை தமிழிலேயே நடைபெற்றது

மாலை நேரங்களில் சுந்தரசுவாமிகள் அங்கு வந்தவர்களுக்குத் திருக்குறள் பாடம் நடத்தி வந்தார் சில சமயங்களில் அருட்பாப் பாடல்களையும் எடுத்துப் பொழிவார். 'அரகர மஹாதேவா என்று சொல்லுவதால் மட்டும் பயன் இல்லை. அகம் தூய்மை பெறவேண்டும். மடத்துத் தொண்டுகளுக்கு விளம்பரம் தேவையில்லை மடத்துத் தொண்டு மக்களின் உள்ளங்களின் மதிப்பைப் பெறவேண்டும். ஓர் உத்யோகஸ்தனுக்குப் பொன்னாடை போர்த்துவதாலோ, அவன் மடத்தை வானளாவப் புகழ்வதாலோ, அவன் பேச்சு, செய்தித்

தாள்களில் வெளியிடப்பட்டு விடுவதாலோ மடத்தின் தொண்டு உயர்ந்துவிடாது. மடத்தின் தொண்டை, அது இருக்கும் ஊர்மக்கள் பாராட்ட வேண்டும்; நாட்டு நல்லவர்கள் பாராட்ட வேண்டும்; அப்பொழுதுதான் அது தொண்டு செய்யும் மடம் என்று கருதப்படும்' எனும் சுந்தரசுவாமிகள் கூற்றின் வழி ஒரு திருமடம் எங்ஙனம் இயங்குதல் தகும் என்பதை அவர் நன்கு விளக்கியுள்ளார்.

1959இல் அவரால் எழுதப்பட்ட மற்றொரு புதினமான 'நாட்டுக்கு நல்லவை' அவருடைய சமுதாயச் சிந்தனைகளின் தெளிவான படப்பிடிப்பாக அமைந்துள்ளது. இந்நூலின் முகவுரையில், 'சுயநலம் என்னும் தீய பண்பு குடும்ப ஒற்றுமையையும் இன ஒற்றுமையையும் சமுதாய ஒற்றுமையையும் கெடுக்க வல்லது. இத்தீய பண்பினால் இன்று நாட்டில் பிச்சைக்காரர் பெருத்து விட்டனர்; எளியவர் தொகை பெருத்துவிட்டது. ஒவ்வொருவருக்கும் 'நாம் வாழ்ந்தால் போதும்; பிறரைப் பற்றி நமக்கு என்ன கவலை?' என்ற மனநிலை ஏற்பட்டு விட்டது. இத்தீய பண்பினால், செல்வராலும் நடுத்தர மக்களாலும் ஏழை மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

இங்ஙனம் புறக்கணிக்கப்பட்ட மக்கள் அறியாது - உயிர்வாழ வேண்டுமே என்ற கவலையால் - திருட முயல்கின்றனர் அவ்வேழை மக்களுள் வலியவர் திருடு, கொலை, கொள்ளை முதலிய தீய செயல்களில் இறங்குகின்றனர். இங்ஙனம் பிழைக்க வழியின்றிச் சமுதாயப் புறக்கணிப்பால் தீயன செய்வார்க்கு அரசாங்கம், அவர்தம் செயல்களுக்குரிய அடிப்படைக் காரணத்தை உணர்ந்து ஆவன செய்யாமல், சிறைக்கூடங்களைப் பெருக்கிக் கொண்டே போகின்றது. சமுதாயத்திலுள்ள இச்சீர்கேட்டைச் செல்வர்கள் மனம் வைத்தால் மிகுந்த அளவு நீக்கிவிடலாம் என்பதை அறிவுறுத்தவே இப்பெருங்கதை எழுந்தது' என்று குறித்துள்ளமை சமுதாய அவலங்களை எவ்வளவு நுட்பமாக அவர் அறிந்திருந்தார் என்பதற்கும் எத்தகு மனித நேயம் அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது என்பதற்கும் சரியான சான்றாக அமைந்துள்ளது.

'நாட்டுக்கு நல்லவை' என்ற புதினத்தின் தலைப்பே அவர் உளப்பாங்கு காட்டுமாறு அமைந்துள்ளது இதன் தலைவி கல்லூரிப் படிப்புப் படித்தவள்; பெருஞ் செல்வந்தர் திருமகள்; கல்லூரிப் படிப்பு முடியும் நாளில் அவளும் தோழியும் உரையாடுகையில், 'அடுத்துத் திருமணந்தானே?' எனத் தோழி வினவ, 'எனக்கு இப்பொழுது திருமணம் தேவையில்லை. அது பற்றிய நினைவே எனக்கு

எழவில்லை என் மனம் தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்வதையே நாடுகிறது' என்று கதைத் தலைவி மங்கையர்க்கரசி கூறுகிறாள். அவள் ஊர் திரும்பியதும், அவளுடைய தந்தையார் முருகப் பெருமானுக்கு வெள்ளி ஊஞ்சல் வழங்கி ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தார். மங்கையர்க்கரசி அந்த ஏழைகளோடு உரையாடி அவர்தம் வாழ்க்கைச் சூழல், பிச்சை எடுக்கும் நிலைக்கு அவர்கள் தாழ்ந்த சமூகப் பின்னணி அறிகிறாள்.

நிகழ்ச்சி நாள் இரவு தந்தையும் மகளும் உரையாடுகிறார்கள் கோயிலுக்கு ஊஞ்சல் வழங்கியதை - அதற்காகத் தந்தை ஐயாயிரம் ரூபாய் செலவு செய்ததை அவள் வரவேற்கவில்லை. 'எல்லாம் வல்ல முருகப்பெருமான் நம்மிடம் வெள்ளி ஊஞ்சலையா எதிர்பார்க்கிறார்? அவரால் படைக்கப்பெற்ற மக்களுள் பலர் சமுதாயக் கொடுமையால் - பிற மக்களின் புறக்கணிப்பால் - சோற்றுக்கு வழியின்றிப் பிச்சை எடுக்கிறார்கள் - பொய், களவு, கொலை முதலிய குற்றங்களைச் செய்கின்ற அவர்களை நல்வழிப்படுத்த இப்பணம் செலவு செய்யப்படு மானால், முருகப் பெருமானது மனம் உண்மையாகவே மகிழ்ச்சி அடையும் நடமாடும் கோவில்களாகிய மக்களை நல்வழிப் படுத்துவதே சிவத்தொண்டு - உண்மையான கடவுள் தொண்டு - அதுவே ஆத்திகம்' என்று கூறுகிறாள்.

அவள் தந்தை, 'முன்வினைப் பயனால் சிலர் செல்வராகவும் பலர் எளியவராகவும் இருக்கிறார்கள் என்று நூல்கள் கூறுகின்றனவே! அது உண்மையானால் நாம் ஏழைகளுக்கு இரங்குவது தவறல்லவா? அவர் தம் வினைப்பயனை அனுபவிக்க விடுவதுதானே முறை?' எனக் கேட்க, 'மனித வாழ்வின் தொடக்கத்தில் வலியவன் ஒருவன் ஓர் ஊரிலுள்ள பெரும்பாலான நிலங்களைக் கவர்ந்து கொள்கிறான் எளியவரைக் கொண்டு அந்நிலங்களை உழச் செய்கிறான் நாளடைவில் அவன் உயர்ந்தோனாகவும் மற்றவர் தாழ்ந்தோராகவும் ஆகிவிடுகின்றனர். பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் இத்துன்ப நிலை தொடர்ந்து வருகிறது. மனித வாழ்க்கையே வலியவரிடம் அகப்பட்டுள்ளது. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' அந்த ஏழை மக்கள் என்றும் புரட்சி செய்யாமல் இருப்பதற்காகவே, 'அவர்கள் புண்ணியம் செய்தனர் - இவர்கள் பாவம் செய்தனர்' என்று சுயநலக்காரர்கள் நூல்கள் எழுதி வைத்தனர் என்பது அறிஞர் கருத்து.

நமது ஊரிலுள்ள நிலங்களைக் கூட்டுப் பண்ணையாக்கி இவ்வூர் மக்களை உழச்செய்து, மொத்த வருவாயில் அவர்களுக்குப்

பங்களிப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவர்தம் வறுமை தொலையும் அல்லவா? பாங்கியில் முடங்கிக் கிடக்கும் உங்களது பெருஞ்செல்வத்தைக் கொண்டு ஒரு நூற்பு ஆலை அமைத்தால், பல ஊர் மக்களுக்கும் தொழில் கிடைக்கும் அல்லவா? இவ்வாறு ஒவ்வோர் ஊரிலும் உள்ள செல்வர்கள் தாங்கள் சேர்த்து வைதததுள்ள செல்வத்தைத் தொழில்துறைகளில் போடுவாராகில், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும் அல்லவா? அப்பொழுது 'இவர்கள் பாவம் செய்தவர்கள்' என்னும் கூற்றே பொய்யாகிவிடும் அல்லவா?' என்று தெளிவுபடத் தன் கருத்துக்களைத் தந்தையிடம் பகிர்ந்து கொள்கிறாள் மங்கை

கதைத் தலைவிக்கும் அவள் தந்தைக்கும் இடையே நிகழும் இந்த உரையாடல்கள் இராசமாணிக்கனாரின் உள்ளம் காட்டுகின்றன. அவர் எத்தகு மக்கள் சிந்தனையாளராக வாழ்ந்தார் என்று அடையாளப் படுத்துகின்றன. மக்கள் நலம் கருதும் இத்தகு மனித நேயர்களின் மேன்மைமிகு சிந்தனைகள் வெறும் கனவுகளாகவோ கற்பனை உரைகளாகவோ நின்றுவிடுவதில்லை. என்றேனும் ஒருநாள் அவை வடிவம் பெற்று வழக்கிற்கு வருகின்றன

பிழைக்க வழியின்றிப் பிச்சை எடுத்துத் திரியும் திக்கற்றோரைப் பல்துறைத் தொழிலாளராக மாற்ற முடியுமென்ற இராசமாணிக்கனாரின் சிந்தனை தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியால் 'பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்' என்ற பெயரில் செயற்படுத்தப்பட்டதை இங்கு நினைவுகூரலாம் அது போலவே இராசமாணிக்கனார் இப்புதினத்தில் அறிமுகப்படுத்திய பண்ணையார் - பண்ணையாள் திட்டமும் அநாதைப் பிள்ளைகள், ஏழைப் பிள்ளைகள் கல்வித் திட்டமும் அநாதைப் பெண்களும் கைம் பெண்களும் ஒன்றிணைந்து மானத்தோடு உழைத்து வாழ வழிகாட்டும் குடிசைத் தொழில்கள் திட்டமும் பின்னாளில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் ஒருங்கிணைந்த கிராம முன்னேற்றத் திட்டமாகச் செயற்படுத்தப்பட்டு ஒரு சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டமையையும் இங்குக் கருதிப் பார்க்கலாம். இவ்விரண்டு நிகழ்வுகளும் 'நாட்டுக்கு நல்லவை'யில் இராசமாணிக்கனார் முன்மொழிந்த சமுதாயச் சிந்தனைகள் கால ஓட்டத்தில் பிற பெரியவர்களால் நடைமுறைப் படுத்தப்பட்டு மக்கள் மேம்பாட்டுக்கு வழிகோலியமைக்குச் சான்றுகளாகும்.

**கோயில்கள்**

மக்கள் நல்வாழ்வைக் கருதி ஏற்றத் தாழ்வற்ற, வளமான, அறிவான சமுதாயம் அமையக் கனவு கண்ட இராசமாணிக்கனார், மக்கள் வழிபடும் இடங்களான கோயில்களின் நடைமுறைகள் பற்றியும் சிந்தித்துள்ளார். கோயில்களில் பணியாற்றும் குருக்கள் தகுதி வரையறை செய்யப்படல் வேண்டும் என்பது அவர் கருத்து 'பத்தாம் வகுப்புத் தேறியவர்க்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் வரலாறு, சமயம், ஓவியம், சிற்பம், நடனம், இசை, கட்டடக்கலை இவற்றில் ஓரளவு பயிற்சி அளித்துத் தேர்வு வைத்துப் பட்டம் தரல் வேண்டும் அப்பட்டதாரிகளே குருக்களாக அமையவேண்டும். அந்நிலையிற்றான் கோயில்கள் சாத்திரீய முறையில் விளங்கும்; யாவும் தூய்மையாக இருக்கும்' என்று அவர் கருதினார்.

'சைவர் கோயில்களில் தேவார பாடசாலைகளும் பெருமாள் கோயில்களில் நாலாயிரப் பிரபந்த பாடசாலைகளும் தேவை. இவற்றின் வழி மக்கள் தங்கள் சமய நெறிகளை நன்கறிதல் கூடும்' என்பதுடன், தேவாரமும் பிரபந்தமும் தொடர்ந்து கோயில் நடைமுறையில் இடம்பெற்றுக் கோயில்களில் தமிழ் தழைக்கும் என்றும் அவர் கருதியிருந்தார் 'கோயில் நிர்வாக அலுவலர்களாக வருபவர் பி ஏ., பி. ஓ எல். பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்; வழக்கறிஞராக இருத்தல் இன்னும் சிறந்ததே. இவர்களும் பல கலைகளில் புலமை உடையவராதல் வேண்டும்' என்ற அவரது எண்ணம் இன்று பின்பற்றப்படுவதை இங்கு எண்ணிப் பார்க்கலாம் அவர் கருதினாற் போலவே தமிழ்நாட்டுக் கோயில்களில் தேவார, பிரபந்தப் பாடசாலைகளும் இயங்குகின்றன. 'நம் நாடு, நம் நாட்டுக் கோயில்கள், நம் நாட்டுச் சமயங்கள், நம் நாட்டுக் கலைகள் இவற்றைப் பாதுகாத்தலும் போற்றுதலும் வளர்த்தலும் நமது கடமை' என்ற அவரது நினைவூட்டலும் இன்று பெருமளவிற்குச் செயல் வடிவம் பெற்றுவருகிறது

மொழி, இனம், நாடு, கல்வி, சமயம், மக்கள் நலம், கோயில்கள் எனப் பலவும் கருதிப் பார்த்துத் தமிழ் மொழி சிறக்க, தமிழினம் உயர, தமிழ்நாடு வளம்பெறப் பயனுறு சிந்தனை விதைகளைத் தம் வாழ்நாள் அநுபவ அறுவடையின் பயனாய் இந்த மண்ணில் விதைத்த இராசமாணிக்கனார், 'உண்மை பேசுதல், உழைத்து வாழுதல், முயற்சியுடைமை, அறிவை வளர்த்தல், நேர்மையாக நடத்தல், பிறர்க்குத் தீங்கு செய்யாமை முதலியன நேரிய வாழ்க்கைக்குரிய

கொள்கைகளாம்' என்று தாம் கூறியதற்கு ஏற்ப வாழ்ந்த நூற்றாண்டு மனிதர். மறுபிறப்பு நேர்ந்தால், 'மீண்டும் தமிழ்கத்தே பிறக்க வேண்டும்' என்று அவாவிக் கட்டுரைத்த தமிழ் மண் பற்றாளர் 'அவரை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டும் நூற்பா வடிவிலான ஒரு வரி சொல்லட்டுமா?' எனக் கேட்கும் அவரது கெழுதகை நண்பர் வல்லை பாலசுப்பிரமணியம் சொல்கிறார், 'இராசமாணிக்கனார் மதியால் வித்தகர்; மனத்தால் உத்தமர்.'

# நூல்கள்

1. நாற்பெரும் வள்ளல்கள் 1930
2. ஹர்ஷவர்த்தனன் 1930
3. முடியுடை வேந்தர் 1931
4. நவீன இந்திய மணிகள் 1934
5. தமிழ்நாட்டுப் புலவர்கள் 1934
6. முசோலினி 1934
7. ஏப்ரஹாம் லிங்கன் 1934
8. அறிவுச்சுடர் 1938
9. நாற்பெரும் புலவர்கள் 1938
10. தமிழர் திருமண நூல் 1939
11. தமிழர் திருமண இன்பம் 1939
12. மணிமேகலை 1940
13 மொஹெஞ்சொதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் 1941
14. பாண்டியன் தமிழ்க் கட்டுரை (முதல் தொகுதி) 1941
15. பல்லவர் வரலாறு 1944
16. மறைந்த நகரம் (மாணவர் பதிப்பு) 1944
17. சேக்கிழார் (ஆராய்ச்சி நூல்) 1945
18. இரண்டாம் குலோத்துங்கன் 1945
19 கட்டுரை மாலை 1945
20 செய்யுள் - உரைநடைப் பயிற்சி நூல் 1945
21. முத்தமிழ் வேந்தர் 1946
22. காவியம் செய்த கவியரசர் 1946
23. விசுவநாத நாயக்கர் 1946
24 சிவாஜி 1946
25. சிலப்பதிகாரக் காட்சிகள் 1946
26. இராஜேந்திர சோழன் 1946
27 பல்லவப் பேரரசர் 1946
28. கட்டுரைக் கோவை 1946
29. சோழர் வரலாறு 1947
30. ஆராய்ச்சிக் கட்டுரைகள் 1947
31. பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு 1947
32. வீரத் தமிழர் 1947
33. இருபதாம் நூற்றாண்டுப் புலவர் பெருமக்கள் 1947
34. இந்திய அறிஞர் 1947
35. தமிழ்நாட்டு வடஎல்லை 1948
36. பெரியபுராண ஆராய்ச்சி 1948
37. கதை மலர் மாலை (மலர் ஒன்று) 1948

## நூல்கள்

38. இராஜன் சிறுவர்க்குரிய கதைகள் 1948
39. சிறுகதைக் களஞ்சியம் (பகுதி ஒன்று) 1949
40. சிறுகதைக் களஞ்சியம் (பகுதி இரண்டு) 1949
41. சிறுகதைக் களஞ்சியம் (பகுதி மூன்று) 1949
42. மேனாட்டுத் தமிழறிஞர் 1950
43. தென்னாட்டுப் பெருமக்கள் 1950
44. இந்தியப் பெரியார் இருவர் 1950
45. தமிழ்ப் புலவர் பெருமக்கள் 1950
46 நாற்பெரும் புலவர் 1950
47. மறைமலையடிகள் 1951
48. அயல்நாட்டு அறிஞர் அறுவர் 1951
49 சங்கநூற் காட்சிகள் 1952
50. இளைஞர் இலக்கணம் (முதல் மூன்று பாரங்கட்கு உரியது) 1953
51. விஞ்ஞானக் கலையும் மனித வாழ்க்கையும் 1953
52. பாண்டிய நாட்டுப் பெரும் புலவர் 1953
53. சேக்கிழார் (மாணவர் பதிப்பு) 1954
54. திருவள்ளுவர் காலம் யாது? 1954
55. சைவ சமயம் 1955
56. கம்பர் யார்? 1955
57. வையை 1955
58. தமிழர் திருமணத்தில் தாலி 1955
59. பத்துப்பாட்டுக் காட்சிகள் 1955
60. இலக்கிய அறிமுகம் 1955
61. அருவிகள் 1955
62. தமிழ் மொழிச் செல்வம் 1956
63. பூம்புகார் நகரம் 1956
64. தமிழ் இனம் 1956
65 தமிழர் வாழ்வு 1956
66. வழிபாடு 1957
67. இல்வாழ்க்கை 1957
68. தமிழ் இலக்கணம் (இளங்கலை வகுப்பிற்கு உரியது) 1957
69. வழியும் வகையும் 1957
70. ஆற்றங்கரை நாகரிகம் 1957
71. தமிழ் இலக்கண இலக்கியக் கால ஆராய்ச்சி 1957
72. என்றுமுள தென்றமிழ் 1957
73. சைவ சமய வளர்ச்சி 1958
74. பொருநை 1958
75. அருள்நெறி 1958
76. தமிழரசி 1958
77. இலக்கிய அமுதம் 1958

78. எல்லோரும் வாழவேண்டும் 1958
79 தமிழகக் கலைகள் 1959
80 தமிழக ஆட்சி 1959
81 தமிழக வரலாறு 1959
82 தமிழர் நாகரிகமும் பண்பாடும் 1959
83 தென்பெண்ணை 1959
84. புதிய தமிழகம் 1959
85 நாட்டுககு நல்லவை 1959
86 தமிழ் அமுதம் 1959
87. பேரறிஞா இருவர் 1959
88. துருக்கியின் தந்தை 1959
89 தமிழகக் கதைகள் 1959
90 குழந்தைப் பாடல்கள் 1960
91 கட்டுரைச் செல்வம் 1960
92. தமிழகப் புலவர் 1960
93. தமிழ் மொழி இலக்கிய வரலாறு (சங்க காலம்) 1963
94. தமிழக வரலாறும் தமிழர் பணபாடும் 1964
95. தமிழ் அமுதம் (மாணவர் பதிப்பு) 1965
96. சேக்கிழார் (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்) 1969
97. பத்துப்பாட்டு ஆராய்ச்சி 1970
98 கல்வெட்டுகளில அரசியல் சமயம் சமுதாயம் 1977
99 இருபதாம் நூறறாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி 1978
100 இலக்கிய ஓவியங்கள் 1979

**பதிப்பு ஆண்டு தெரியாத நூல்கள்**

101. சிறுவர் சிற்றிலககணம்
102. பைந்தமிழ் இலக்கணமும் கட்டுரையும்
103 பாண்டியன் தமிழ்க் கட்டுரை (தொகுதி-2)

**ஆங்கில நூல்**

104. The Development of Saivism in South India 1964

**பார்வைக்குக் கிடைக்காத நூல்கள்**

1. பதிற்றுப்பத்துக் காட்சிகள்
2 செந்தமிழ்ச் செல்வம்
3. தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள்
4. பள்ளித் தமிழ் இலக்கணம்
5 செந்தமிழ்க் கட்டுரை (முதல், இரண்டாம் புத்தகங்கள்)
6. செந்தமிழ்க் கதை இன்பம் (முதல், இரண்டாம் பகுதிகள்)

**மா.இராசமாணிக்கனார் :** (1907-1967) இலக்கியம், சமயம், வரலாறு கோயில் கலைகள், கல்வெட்டு இவற்றில் ஆழ்ந்த புலமையுடையவர். ஆய்வு நெறிமுறையிலும், அணுகுமுறைகளிலும் புதிய சிந்தனைகளை விதைத்தவர். சாதி, சமயமற்ற சமுதாயத்தை உருவாக்கத் தம் எழுத்தாலும் பேச்சாலும் பாடுபட்டவர். மாந்த நேயமும், மொழி, நாடு இவற்றின்பால் தளராப் பற்றும் கொண்டு உழைத்து உயருமாறு இளைய தலைமுறையை ஆற்றுப்படுத்தியவர். இவருடைய 'பல்லவர் வரலாறு', 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி', 'தமிழ் மொழி இலக்கிய வரலாறு', 'பெரியபுராண ஆராய்ச்சி', 'சைவ சமய வளர்ச்சி' முதலிய நூல்கள் காலம் கடந்து நிற்கும் தகைமையன. எளிமையும் இனிமையும் உண்மையும் உழைப்புமே இவரது அடையாளங்கள்.

**இரா.கலைக்கோவன்:** இந்நூலாசிரியர், 'சோழர் கால ஆடற்கலை' ஆய்விற்காக முனைவர் பட்டம் பெற்றவர். திருச்சிராப்பள்ளி டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய நிறுவனர். 'வரலாறு' ஆய்விதழின் பொறுப்பாசிரியர். மூன்று நூல்களுக்குத் தமிழ்நாட்டரசின் முதற் பரிசும் பெற்றவர். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டக் குழுக்களிலும், தமிழ்நாடு அரசின் வரலாறு, கல்வெட்டு ஆவணக் காப்பக ஆய்வுக் குழுக்களிலும் உறுப்பினராக இருந்தவர். அறுபதிற்கும் மேற்பட்ட உலக, தேசிய, மாநிலக் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் படித்தளித்தவர். பல இளைஞர்களின் ஆய்வுத் தட நெறியாளர்.

***Ma.Rasamanikkanar***
(Tamil) Rs. 40

ISBN 81-260-2210-8